
நமச்சிவாய வாழ்க

திருவாசகம்

திருத்தில்லை பாற்கடல் - தவச்சாலையில் (பர்ணசாலை)
மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்து அருள,
அழகிய திருச்சிற்றம்பலம் உடையான்
எழுதி அருளியது.



வெளியீடு
அரன் பணி அறக்கட்டளை
தொடர்பு எண் : 8122338989

சலுகை விலை
₹30

நமச்சிவாய வாழ்க

திருவாசகம்

திருத்தில்லை பாற்கடல் – தவச்சாலையில் (பர்ணசாலை)
மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்து அருள,
அழகிய திருச்சிற்றம்பலம் உடையான் எழுதி அருளியது.



வெளியீடு

அரன் பணி அறக்கட்டளை

ஜெ.எம். பில்டிங், 1000, அவிநாசி சாலை,
கோவை - 641018.
தொடர்பு எண் : 8122338989

நூல் குறிப்பு

நூலின் பெயர்	:	**திருவாசகம்**
ஆசிரியர்	:	எம்பிரான் மாணிக்கவாசகர்
வெளியீடு	:	அரன் பணி அறக்கட்டளை, கோவை
ஆறாம் பதிப்பு	:	நவம்பர் 2024 (2000 படிகள்)
தாள்	:	70 ஜிஎஸ்எம் காப்பியர்
அளவு	:	18 செ.மீ அகலம், 24 செ.மீ உயரம்
பக்கங்கள்	:	248
எழுத்துரு	:	செந்தமிழ் 24, 62, 66,
எழுத்துரு அளவு	:	17
அட்டைப்பட ஓவியங்கள்	:	ஓவியர்.தெய்வா, மதுரை
கோட்டோவியங்கள்	:	ப்ரோன்ஸ் கிராப்ட், திருவாரூர்
ஆக்கமும் அச்சும்	:	கிராண்ட்மேக்ஸ், ஊத்துக்குளி. 9171691115
சலுகை விலை	:	**ரூ.30 /-**
நூல் கிடைக்குமிடங்கள்	:	கோவை. 98424 22222
	:	கோவை. 99944 67068
	:	திருப்பூர். 97900 29196
	:	பவானி. 98427 96599

அன்பர்களின் பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்

இந்நூல் அன்பர்களின் இல்லங்கள் தோறும் சென்றடைய, சலுகை விலையில் பதிப்பிடப்படுகிறது. எனவே, ரூ.**30** க்குப் பெற்றுக் கொண்டு அதே விலையில் பிறருக்குத் தர விரும்புபவர்களும், நன்கொடையாகக் கொடுக்க விரும்புபவர்களும் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். புத்தக விற்பனையாளர்கள் தவிர்க்கலாம். நன்றி.



நம் மணிவாசகப்பெருமான் அவதாரம் செய்த திருவாதவூரில் (மதுரை) ஆண்டு முழுவதும் நாள்தோறும் (365 நாட்களும்) திருவாசகம் முற்றோதல் வழிபாடு செய்வதற்காக **திருவாசக அரங்கம் & அமுதுக்கூடம்** திறப்புவிழா கடந்த 07.07.2024 அன்று நடைபெற்றது. திறப்புவிழாவை முன்னிட்டு இந்நூல் சலுகை விலையில் (ரூ.30) வெளியிடப்பெற்றது.



திருவாசக அரங்கம்



அமுதுக்கூடம்


திருவாதவூரில் 'திருவாசகம் முற்றோதல் வழிபாடு' செய்ய வருகை தரும் அடியார் பெருமக்களுக்கு முந்தையநாள் இரவு தங்குவதற்கும். காலையில் சிவபூசை செய்வதற்கும். திருவருளால் திருவமுது மூன்று வேலைகளுக்கும் (இரவு.காலை.மதியம்) ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன. சிவனடியார் திருக்கூட்டத்தின் அடியார் பெருமக்களும். திருவாசக முற்றோதல் குழுக்களும் தங்களுக்கு வாய்ப்புள்ள தேதியை. விரைந்து முன்பதிவு செய்து கொள்ள வேண்டுமாய் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

முன்பதிவு செய்ய அழைக்கவும் : 81223 38989

இந்நிகழ்விற்கு **எவ்விதமான கட்டணமும் கிடையாது.**



அரன் பணி அறக்கட்டளை ஆற்றி வரும் திருத்தொண்டுகள்



திட்டம் : 1

வெட்ட வெளியில் மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் கொண்டு இருக்கும் சிவலிங்கத் திருமேனி களுக்கு சிறிய நிழற்கூரை அமைத்துத் தருதல்.

திட்டம் : 2

நிழற்கூரையின் கீழ் வழிபாட்டில் இருக்கும் சிவலிங்கத் திருமேனிகளுக்கு கருவறை, அர்த்த மண்டபம் மற்றும் ஒருநிலை கோபுரத்துடன் கூடிய திருக்கோயில் அமைத்துத் தருதல்.





திட்டம் : 3

சிதிலமடைந்த பழமையான சிவாலயத்தை மீண்டும் அப்பழமை மாறாது முழுமையாக புதுப்பித்துத் தருதல்.

பல்லாயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கும் சிவாலயத் திருப்பணிகளில், மாதம் ரூ.100 மட்டும் செலுத்தி நீங்களும் பங்கேற்கலாம். நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு ரூபாயும் நேரடியாக சிவாலயத் திருப்பணிகளுக்கு மட்டுமே செலவிடப்படுகிறது.

அரன் பணி செயலியை பதிவிறக்கம் செய்ய
QR CODE ஐ ஸ்கேன் செய்யுங்கள்.

1/3

உ
சிவமயம்

59-ஆம் ஆண்டு நிறைவு உக்ரரத சாந்தி

நாள் : 19.01.2025

இடம் : இளையாத்தக்குடி



விழா தம்பதியர்

சேவு.நா.செ.சொ.நா.இராம. நாராயணன் செட்டியார்
வள்ளியம்மை ஆச்சி

சொக்கநாதபுரம்



மகன்: இராமநாதன் (எ) ஸ்ரீராம்



மகள் : கண்ணம்மை மாப்பிள்ளை : சாய்சுதிர்
பேத்தி: ஷ்ரதா சாய்சுதிர்

1/3

நூல் உள்ளடக்கம்

நமச்சிவாய வாழ்க

முன்னுரை

எத்தகையோரையும் மிக எளிதில் வயப்படுத்திப் பத்தி வெள்ளத்தில் படியச் செய்யும் ஒரு நூல் உண்டு என்றால் அது திருவாசகமே ஆகும்.

கனிந்த அன்பென்னும் நாரிலே, நிகழ்ந்த செந்தமிழ்ச் சொற்களாகிய பூக்களை, இறையருள் என்னும் இன்பத்தேன் ததும்பி வழியுமாறு தொடுத்தமைத்த பதிகப் பாமாலையே திருவாசகம் எனலாம்.

மூவர் முதலிகள் அருளிய தேவாரத்திற்கும், மணிவாசகப்பெருமான் அருளிய திருவாசகத்திற்கும் உள்ள ஒரு வேறுபாடு குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவருமே மெய்யடியார்கள், இறையருளை முழுமையாக பெற்றவர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவர்களிடையே உயர்வு, தாழ்வு கருதுதல் பெரும் பிழையாகும்.

தேவார ஆசிரியர்களின் பாடல்களில் பத்தி உணர்வு, இறைவனின் அளப்பரும் பெருமை, தங்களுடைய சிறுமை, இறைவன் தங்களிடத்துக் காட்டிய கருணை முதலிய எல்லாம் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். அம்மூவரும் இறையனுபவத்தில் தோய்ந்தவர்கள் என்றாலும், அந்த அனுபவம் எப்படியிருந்தது என்பதைத் தெரிவிக்கவில்லை. திருவாசகம் இந்த வகையில் தேவாரங்களின் போக்கிலிருந்து வேறுபட்டுச் செல்வதைப் பார்க்கலாம்.

பத்திப் பாடல்கள் தமிழில் உள்ளதுபோல் வடமொழி முதலிய வேறு எந்த மொழியிலும் இல்லை என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும்.

தமிழில் உள்ள பல்லாயிரக்கணக்கான பத்திப் பாசுரங்களில் இறைவனது பெருமையும், புகழும் பேசப் பெற்றுள்ளன என்பது உண்மையே. அடியார்கள் அவற்றைப் பத்திப் பரவசத்தோடு பாடி அருளியுள்ளனர் என்பதும் உண்மையே. அவ் வடியார்களில் பலரும் இறையனுபவத்தைப் பெற்றுத் துய்த்தவர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

ஆயினும், தாங்கள் பெற்று அனுபவித்த அந்த இறையனுபவத்தை, அந்த அனுபவம் எவ்வாறு இருந்தது என்பதையும், அந்த அனுபவம் தங்கள்

உடலை, உள்ளத்தை எவ்வாறு தாக்கியது என்பதையும் அவர்களில் மணிவாசகர் ஒருவரைத் தவிர வேறு யாரும் விரித்து அருளவில்லை.

தாம் என்ற நினைவை அடியோடு இழந்து, தேனில் விழுந்த ஈயைப் போல இறையனுபவத்தில் மூழ்கிப் பின் அந்த அனுபவநிலையில் இருந்து மீண்டு, தாம் பெற்றிருந்த அனுபவத்தைப் பாடல்களாக்கி, பதிகங்களாக்கித் தரும் வாய்ப்பு மணிவாசகப் பெருமான் ஒருவருக்கே அமைந்தது எனலாம்.

தம் அறிவுகொண்டோ, புலமைகொண்டோ பாடாமல் இறைவனுடைய அருளையே துணையாகக் கொண்டு, தாம் ஒரு கருவியாக மட்டும் நின்று அவர் பாடிய திருவாசகப் பாடல்கள் இறையனுபவத்தின் பிழிவாகவே விளங்குகின்றன எனலாம்.

திருவாசகம் மணிவாசகருடைய பேரன்பின் பிழம்பாகித் திகழ்வது. தன்னை ஒருமுறை ஓதுவோரையும் உள்ளம் உருக்கி ஒளிகூட்டுவது. ஒவ்வொரு பாடலும் தேனாகத் தித்தித்து இறையனுபவத்தினை விளக்குவது.

திருவாசகத்தின் சிறப்பினைத் திருக்களிற்றுப்படியார் என்னும் சாத்திர நூல் பின்வருமாறு கூறுகிறது. ‘இறைவன் தமக்கு நல்கிய பரமானந்தப் பயனை வாதவூரடிகள் தமது திருவாயில் மலர்ந்த சொற்களால் வெளியிட்டார். அதனை ஓதிய அன்பரெல்லாம் கருவாதையிலிருந்து விடுபட்டார்’. நால்வர் நான்மணிமாலை, **‘திருப்பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே வாசகம்’** என்று பாராட்டுகிறது.

இந்நாளில் திருவாசகத்தைப் பயில்வோர் தொகையும், பாராயணம் செய்வோர் தொகையும் மிகுதி. திருவாசக முற்றோதல் சிவாலயங்களிலும், சைவத் திருமடங்களிலும், அன்பர்கள் இல்லங்களிலும் எங்கணும் பெருவழக்காய் நடைபெற்று வருகிறது.

திருவாசகத்தை எல்லோரும் பொருள் உணர்ந்து ஓதிப் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வெளி வருகிறது இப்பதிப்பு.

தேன் உண்ணுங்கால் இனிமை பயக்கும், உண்ட பின்பு நோயை நீக்கி உடல் நலத்தைத் தரும். அதுபோலத் திருவாசகம் ஓதி உணருங்கால் பத்திச்

சுவையையும், சொல் இனிமையையும், பொருள் இனிமைகளையும் பயக்கும். பின்பு இப்பிறப்பில் வரும் இடர்களையும், துன்பங்களையும் நீக்கி முடிவில் ஆன்ம லாபத்தைத் தரும்.

அறிவனே அமுதே அடி நாயினேன்
அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது
அறிவிலாமை அன்றே கண்டது ஆண்ட நாள்
அறிவனோ அல்லனோ அருள் ஈசனே. – திருவாசகம்

திருவருளால்...
திருநெல்வேலி சமூக சமயச் சங்கம் தலைவர்
திரு.வை.ஆறுமுகம் ஐயா அவர்கள் வெளியிட்டுள்ள
திருவாசகம் விளக்கவுரை நூலில் இருந்து,
மாணிக்கவாசகர் வரலாறு தொகுப்பை
இந்நூலில் பயன்படுத்துவதற்கு,
அவருடைய திருமகளார் அனுமதி வழங்கியமைக்கு
நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரன் பணி அறக்கட்டளை, கோவை

மாணிக்கவாசகர் வரலாறு

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்
வித்துவான். **திரு.வி.சா. குருசாமி தேசிக** அவர்கள்
(பொறுப்பு முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி)
எழுதி உதவியது

எழுதரு மறைகள்தேறா இறைவனை எல்லிற் கங்குல்
பொழுதறு காலத்து என்றும் பூசனை விடாதுசெய்து
தொழுதகை தலைமீதுஏறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி
அழுது அடிஅடைந்த அன்பன் அடியவர்க்கு அடிமைசெய்வாம்.

–திருவிளையாடற் புராணம்

செந்தமிழ் மணமும், சிவமணமும் ஒருங்கே கமழும் திருநாடு தென்பாண்டி வள நாடு. இந்நாட்டை அணிசெய்வது, 'புனல்யாறு அன்று இது பூம்புனல்யாறு' எனப் புலவர்களால் போற்றப்படும் வைகை ஆறு ஆகும். இந்நதி வரலாற்றுச் சிறப்பும், புராண இதிகாசச் சிறப்புகளும் உடையது.

திரு அவதாரம்

வைகை ஆற்றங்கரையில் மதுரை மாநகரத்திலிருந்து ஏழு மைல்கல் தொலைவில் திருவாதவூர் என்ற தலம் உள்ளது. இத்தலத்தில் வாதபுரீசுவரர் என்னும் திருநாமத்தோடு இறைவன் எழுந்தருளி உள்ளார். இத்தலம் வாயு பூசித்த காரணத்தால் வாதபுரம் என வழங்கப்பெறுகிறது. இந்நகரில் அமாத்திய அந்தணர் குலத்தில் சிவநெறி பிறழாச் சிந்தையாளராகிய அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் **சம்புபாதசிருதர்**, அவர் மனைவியாரின் பெயர் **சிவஞானவதி** என்பதாகும்.

இவ்விருவரும் இல்லறம் வழுவாது ஒழுகிவரும் நாளில் தென்னாட்டில் புறச் சமயமாகிய புத்த சமயம் மேலோங்கி இருந்தது. சைவ சமய வளர்ச்சி குன்றி இருந்தது. இறைவன் திருவருளால் இவ்விருவருக்கும் சைவம் தழைக்கவும், வேத சிவாகம நெறிகள் விளங்கவும் திருமகனார் ஒருவர் திருஅவதாரம் செய்து அருளினார். தாய் தந்தையர் மனம் மகிழ்ந்து அம்மகனார்க்கு **'திருவாதவூரர்'** என்னும் திருப்பெயர் சூட்டினர்.

அமைச்சுரிமை ஏற்றல்

திருவாதவூரர்க்கு வயது ஏற ஏறக் கலைஞானங்களும் நிரம்பின. பதினாறு வயதளவில் வாதவூரர் கலைஞானங்கள் அனைத்தும் கைவரப் பெற்றார். இவரது கல்வித் திறத்தையும், நல்லொழுக்கத்தையும் கண்டு அனைவரும் வியந்தனர். அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த மன்னன் அரிமர்த்தன பாண்டியன் என்பவன் ஆவான். திருவாதவூரரது அறிவுத்திறனைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தனது அவைக்கு அழைத்து அளவளாவி, அவரது அறிவு நலனைக் கண்டு வியந்து '**தென்னவன் பிரமராயன்**' என்னும் பட்டம் சூட்டித் தனது முதன் மந்திரியாக அமர்த்திக் கொண்டான். திருவாதவூரரும் இஃது இறைவனுடைய ஆணையென்று எண்ணி அதனை ஏற்றுக்கொண்டு அமைச்சுரிமைத் தொழிலை மிகக் கவனத்தோடு இயற்றி வந்தார். வாதவூரரது அமைச்சியலால் குடிமக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். வாதவூரரும் அரிமர்த்தன பாண்டியனுக்குக் கண்ணும், கவசமுமாக விளங்கி வந்தார்.

பதவியில் பற்றின்மை

வாதவூரர் தமக்குக் கிடைத்த அமைச்சுரிமைத் தகுதியால் உலக அனுபவ இன்பங்களில் மகிழ்ச்சி அடையவில்லை. உலக வாழ்வும், வாழ்வில் காணும் பெரும் போகமும் நிலையற்றவை என்று அறிந்தமையால், அப்பதவியில் அவர்க்கு உவர்ப்புத் தோன்றியது. '**கூத்தினர் தன்மை வேறு, கோலம் வேறு ஆகுமாறு போல**' இவர் மேற்கொண்டிருந்த அமைச்சுரிமைக்கும், இவருக்கும் தொடர்பில்லாமல் இருந்தது. ஒரு சிறந்த குருநாதரைத் தேடும் வேட்கை இவருக்கு மிகுந்து வந்தது. பிறவிப் பெரும் பயனை அடைவதற்குரிய வழி என்ன என்பதிலேயே இவருடைய சிந்தனை கனன்று கொண்டிருந்தது.

குதிரைகள் வாங்கச் செல்லல்

ஒரு நாள் வாதவூரர் அரசவையில் அமைச்சராய் வீற்றிருந்தார். அப்போது அரசனுடைய குதிரைச் சேவகர்கள் வந்து 'அரசே! நமது குதிரைப்படைகள் குறைந்துவிட்டன. வயது முதிர்ந்த குதிரைகளும், நோய் நிறைந்த குதிரைகளுமே இப்போது உள்ளன. சிறந்த குதிரைகள் நம்மிடம் இல்லை. ஆதலின், குதிரைப் படைகளைப் பலப்படுத்தவேண்டும் என்று நினைவுறுத்துவது எங்கள் கடமை' என்று வணங்கித் தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது அரசவையிலிருந்த சில தூதர்கள் கீழைக் கடற்கரையில் நல்ல குதிரைகள் வந்து இறங்கியிருக்கின்ற செய்தியை அரசனிடத்துத் தெரிவித்தார்கள். அரசன் அமைச்சர் பெருமானாகிய வாதவூரரைப் பார்த்து 'நம்முடைய கருவூலத்திலிருந்து வேண்டும் பொருள்களைப் பணியாளர் மூலம் எடுத்துச் சென்று நல்ல குதிரைகளை வாங்கி வருக' என்று ஆணையிட்டான்.

வாதவூரரும் அக்கட்டளையை ஏற்றுப் பொற்பண்டாரத்தைத் திறந்து, அளவிறந்த பொருள்களை ஒட்டகத்தின் மீது ஏற்றிக் கொண்டு, படைகளும் பரிசனங்களும் தன்னைச் சூழ்ந்துவர, மதுரைச் சொக்கேசன் ஆலயத்திற்குச் சென்று வணங்கி மதுரையை விட்டுப் புறப்பட்டார். பல காதங்களைக் கடந்து திருப்பெருந்துறை என்னும் தலத்தை அடைந்தார். அவ்வூரை அணுக அணுக அவர் மேல் இருந்த ஏதோ ஒரு சுமை குறைந்து வருவது போலத் தோன்றியது. இத்தலமே இறைவன் தன்னை ஆட்கொள்ளும் இடம் போலும் என்ற உணர்வு தோன்றியது.

குரு உபதேசம்

அவ்வேளையில் சிவநாம முழக்கம் எங்கிருந்தோ வருவது அவர் செவிகளுக்கு எட்டியது. அவ்வொலி வரும் திசை நோக்கி வாதவூரரும் விரைந்து சென்றார். ஓரிடத்தில் கல்லால மரம் போன்ற பெரியதொரு குருந்த மரத்தடியில் சீடர்கள் சிலரோடு ஞானமே வடிவாக ஒருவர் எழுந்தருளியிருந்தார். வேத சிவாகமங்களும், புராண இதிகாசச் சமய நூல்களும் ஆகிய பல நூல்களையும் கற்றுத் தெளிந்த வர்கள் போன்று சீடர்கள் பலர் அவர்முன் குழுமி இருந்தனர். அச்சீடர்களின் பாசமாம் பற்றறுக்கும் ஆசானாக அக்குருநாதர் வீற்றிருந்தார். அவரது வலது திருக்கை சின்முத்திரையைக் காட்டிக் கொண்டிருந்தது. அவரது திருமுகம் ஒளி மண்டலமாகத் திகழ்ந்தது. அவரது கண்கள் திருவருள் விளக்கத்தைச் செய்து கொண்டிருந்தன. இவ்வாறு வீற்றிருந்த குருநாதரைக் கண்ட வாதவூரர் தாம் பல நாட்களாக விரும்பியிருந்த குருநாதர் இவரே என்று எண்ணினார். காந்தம் கண்ட இரும்பு போல வாதவூரர் மனம் குருநாதர் வசமாயிற்று. இந்நிலையில் விரைந்து அருகில் சென்ற வாதவூரர் அடியற்ற மரம் போல அவரது திருவடியில் வீழ்ந்து பணிந்தார். **'ஐயனே! எளியேனை ஆட்கொண்டருளுக'** என வேண்டி நின்றார். வாதவூரரின் பரிபாக நிலையைக் கண்ட குருநாதர் திருக்கண் நோக்கம், பரிசம் முதலிய தீக்கைகள் செய்து திருவடி சூட்டித் திருஐந்தெழுத்தை அவருக்கு உபதேசம் செய்தருளினார். இவ்வாறு தம்மை ஆட்கொண்டருளிய பெருங் கருணைத் திறத்தை வியந்த வாதவூரர் அன்போடு குருநாதருடைய திருவடிகளை மீண்டும் வணங்கி எழுந்து நின்றார். **ஞானாசிரியரது திருவருள் நோக்கால், ஞானத்தின் திருவுருவாக வாதவூரர் மாறினார்.** தமது குருநாதரின் திருவடிகளுக்குத் தம்மை ஆட்கொண்ட கருணையைக் குறித்து சொல்மாலைகள் பலவும் சூட்டினார்.

மாணிக்கவாசகர்

ஞானாசிரியர் திருமுன் வாதவூரர் பாடிய தோத்திரங்கள் இனிமையோடும், கேட்போர் மனத்தை உருக்கும் அருள் விளக்கத்தோடும் இருந்த காரணத்தால் ஞானாசிரியர் வாதவூரனை நோக்கி 'உனக்கு **'மாணிக்கவாசகன்'** என்ற பெயர் தந்தோம்' என்று கூறி அவருக்கு அப்பெயரைத் தீக்கை நாமமாகச் சூட்டினார்.

அன்று முதல் வாதவூரர் என்ற திருப்பெயருடன் மாணிக்கவாசகர் என்ற பெயரும் அவருக்கு வழங்குவதாயிற்று.

திருப்பெருந்துறைத் திருப்பணி

மாணிக்கவாசகர் குருநாதரை வணங்கி 'என்னை ஆட்கொண்ட போதே என்னுயிரும் உடைமையும் தங்கட்கு உரியவாயின. ஆதலால் அடியேன் கொண்டு வந்த பொருள்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அருளல் வேண்டும்' என்று குறையிரந்தார். குருநாதரும் **'அப்பொருளைக் கொண்டு சிவப்பணி செய்க'** என்று அருளாணையிட்டார். அக்கட்டளையின்படியே மாணிக்கவாசகர் அரசன் குதிரை வாங்குவதற்குத் தம்மிடம் அளித்தப் பொருள்கள் அனைத்தையும் சிவப் பணிகளுக்கே செலவிட்டார். நாட்கள் பல சென்றன. அருளாரமுதத்தை உண்டு கொண்டே தெருளார் சிவானந்த போகத்துத் திளைத்திருந்தார் மாணிக்கவாசகர். அமைச்சரின் வேறுபட்ட நிலையை உடன் வந்தவர்கள் கண்டு மாணிக்கவாசகரிடம் 'குதிரை கொண்டு மதுரை செல்ல வேண்டுமே' என்று தாங்கள் எண்ணி வந்த செயலை நினைவூட்டினர். மாணிக்கவாசகர் அவ்வுரைகளைக் கேளாதவராய் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருப்பதை அறிந்த பணியாளர்கள் மதுரை மாநகருக்குத் திரும்பிச் சென்று பாண்டிய மன்னனிடம் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தனர்.

பாண்டிய மன்னன் அழைப்பு

இச்செய்தியை அறிந்த பாண்டிய மன்னன் சினந்து, திருமுகம் ஒன்று எழுதி அதை வாதவூரரிடம் சேர்ப்பித்து, அவரை அழைத்து வருக என ஆணையிட்டான். சேவகர்களும் திருப்பெருந்துறையை அடைந்து அரசன்அளித்த திருமுகத்தை அமைச்சர் பிரானிடம் கொடுத்து அரசன் கட்டளையை அறிவித்து நின்றனர். அதைக்கேட்ட வாதவூரர் தம் குருநாதரிடம் சென்று நிகழ்ந்ததை விண்ணப்பித்து நின்றார். குருநாதர் **புன்முறுவல் பூத்து, 'அஞ்சற்க, ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று மன்னனிடம் அறிவித்து, மாணிக்கக் கல்லையும் கையுறையாகக் கொடுக்க' எனக் கூறி மாணிக்கக் கல் மோதிரத்தை அளித்து, விடைகொடுத்து அனுப்பினார்.** வாதவூரரும் குருநாதரைப் பிரிய மனம் இல்லாதவராய்ப் பிரியா விடைபெற்று மதுரைக்கு எழுந்தருளினார்.

அரசவைக்கு வந்த மாணிக்கவாசகர் இறைவன் அருளிய மாணிக்கக்கல் மணியை மன்னனிடம் கொடுத்து, 'வருகின்ற ஆவணிமூல நாளில் குதிரைகள் மதுரை வந்தடையும்' என்று கூறினார். அரசனும் சினம் மாறி, மனம் மகிழ்ந்து அமைச்சரை அன்போடு வரவேற்று அருகிருத்தி அவரை மகிழ்வித்தான்.

நரிகள் பரிகளாயின

வாதவூரருக்கு தாம் அளித்த வாக்கை நிறைவேற்ற, பெருமான் நரிகளை எல்லாம் குதிரைகளாக மாற்றி, தேவர்கள் குதிரைச் சேவகர்களாகப் புடைசூழ, தான் குதிரைத் தலைவன் போலத் திருக்கோலம் கொண்டு, வேதமாகிய குதிரையில் அமர்ந்து, மதுரையை நோக்கிப் புறப்பட்டான். குதிரைப் படைகள் மதுரை நோக்கி வருவதை ஒற்றர்கள் மூலம் மன்னன் அறிந்தான். அவன் மனம் மகிழ்ந்தது.

பாண்டியன் பரிசு

கடல் அலைகள் போல வந்த படைகளின் விரைந்த நடையால் எழுந்த புழுதிப் படலம் வானை மறைத்தது. குதிரைக் கூட்டம் மதுரை மாநகரை அடைந்தது. குதிரைத் தலைவனாக வந்த சிவபிரான், பாண்டியன் முன்னிலையில் குதிரைகள் அனைத்தையும் கொண்டு வந்து நிறுத்தினான். குதிரைகளைப் பலவகை நடைகளில் நடத்திக் காட்டியும், ஆடல்கள் புரியச் செய்தும் பாண்டியனை மகிழ்வுறுத்தினான். பெருமகிழ்ச்சி அடைந்த பாண்டியன் குதிரைத் தலைவனுக்கு ஒரு பட்டாடையைப் பரிசாகக் கொடுத்தான். குதிரைத் தலைவனாக வந்த பெருமான் அப்பரிசைப் புன்னகையோடு தன் செண்டினால் வாங்கினான். தான் அளித்த பரிசை மரியாதைக் குறைவாகக் குதிரைத் தலைவன் பெறுவதைக் கண்ட மன்னன் வெகுண்டான். அருகிலிருந்த வாதவூரர், '**செண்டினால் பரிசு பெறுதல் அவர்கள் நாட்டு வழக்கு**' என்று கூறி, மன்னன் சினத்தை மாற்றினார். பின்னர், குதிரை இலக்கணமறிந்த வல்லவர்கள் குதிரைகளையெல்லாம் ஆராய்ந்து, இவைகள் நல்ல நிறமும், நடையும், நல்ல சுழிகளும் பெற்றுள்ளன என்று பாராட்டினர். அரசனும் தானளித்தப் பொருளைவிடப் பலமடங்கு அதிகமான குதிரைகளைப் பெற்றதாக மகிழ்ந்து, அவைகளைப் பந்தியில் சேர்க்குமாறு பணித்தனன். குதிரைத் தலைவன் குதிரைகளையெல்லாம் கயிறுமாற்றிக் கொடுக்கும்படி தன் உடன் வந்தவர்களிடம் கூறி, அரசனிடம் விடைபெற்றுச் சென்றான்.

பரிகள் நரிகளாயின

அன்று இரவு நடுநிசியில் குதிரைகளெல்லாம் நரிகளாக மாறின. பந்தியில் இருந்த பழைய குதிரைகளையும் கொன்று தின்று, ஊர்மக்கள் அஞ்சும்படி மூலை முடுக்குகளில் எல்லாம் ஓடி மறைந்தன. காலையில் குதிரைச் சேவகர்கள் உள்ளம் பதறி, உடல் நடுங்கி, அரசனிடம் வந்து முறையிட்டனர். இச்செய்தியைக் கேட்ட மன்னன், சினம் பொங்கி, அமைச்சர்களை அழைத்து, வாதவூரர் செய்த வஞ்சனையைக் கூறிப் படைத்தலைவர்களை அழைத்து, வாதவூரரைச் சுடு வெயிலில் நிறுத்தித் தண்டனை அளித்து, அவரிடத்தில் கொடுத்த பொருள்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு வருமாறு உத்தரவிட்டான். படைவீரர்கள் இவரை அழைத்துச் சென்று சுடுவெயிலில் நிறுத்தித் தலையிலே கல்லேற்றி

ஒறுத்தார்கள். வாதவூரர் இறைவன் திருவருளை நினைந்து, 'எனக்கு இத்தகைய துன்பங்கள் வருதல் முறையாகுமா ?' என்று கூறி வருந்தி நின்றார்.

வைகையில் வெள்ளம்

வாதவூரருடைய துன்பம் துடைக்க எண்ணிய பெருமான், வைகை ஆற்றில் வெள்ளம் பெருகுமாறு செய்தருளினார். வைகையில் தோன்றிய பெருவெள்ளம் மதுரைநகர் முழுவதும் விரைந்து பரவத் தொடங்கியது. பெரு வெள்ளத்தைக் கண்ட ஊர்மக்கள் ஊழிக்காலமே வந்துவிட்டது என்று அஞ்சி நின்றனர். பாண்டியனும் ஆற்று வெள்ளத்தைத் தணிக்க, பூ, பொன், பட்டு முதலிய அணிகலன்களை ஆற்றில் விட்டு வெள்ளம் தணியுமாறு ஆற்றைப் பணிந்தனன். வெள்ளம் மேலும் பெருகியதே அல்லாமல் சிறிதும் குறையாதது கண்டு, அமைச்சர்களோடு கூடி ஆராய்ந்து, மதுரை மக்களை எல்லாம் ஒருங்கு கூட்டி, ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பங்கு என்று அளந்து கொடுத்து ஆற்றின் கரையை அடைக்கும்படி ஆணையிட்டான்.

மண் சுமந்தது

அரசன் ஆணையைக் காவலர் ஊர் முழுவதும் முரசறைந்து அறிவித்தனர். அந்நகரில் பிட்டு விற்று வாழ்க்கை நடத்தும் வந்தி என்னும் மூதாட்டி, தனக்கு அளவு செய்துவிட்ட ஆற்றின் பங்கை அடைக்க ஆள் கிடைக்காமல் வருந்தினாள். நாள்தோறும் ஆண்டவனிடம் அன்பு செலுத்தி வந்த அவ்வந்தியின் துன்பத்தைத் தவிர்க்க இறைவன் அவளிடம் கூலி ஆள் போலத் தோன்றினான். 'யாரேனும் கூலி கொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ?' என்று கூவிய வண்ணம் தன்னை வந்தடைந்த அப்பணியாளனைக் கண்ட வந்தி மகிழ்ந்து, 'நீ எனக்குக் கூலியாளாக வரவேண்டும், அவ்வாறு வந்து என் ஆற்றின் பங்கை அடைத்துத் தருவாயேயானால் நான் விற்கும் பிட்டைக் கூலியாகத் தருகிறேன்' என்று கூறினாள். அதற்கு இசைந்த அக்கூலியாள் அவள் கொடுத்த பிட்டை வாங்கி உண்டு, 'தாயே! என் பசி தீர்ந்தது. இனி, நீ ஏவிய பணியை நான் செய்து முடிப்பேன்' என்று அவள் பங்கை அறிந்து அதை அடைப்பதற்கு முற்பட்டான். வந்தி மேலும் அளித்த பிட்டை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான்.

பாண்டியன் பிரம்படி

வேலையைத் தொடங்கிய அவ்வந்தியின் ஆளாகிய சிவபெருமான் ஒரு சிறிது மண்ணை வெட்டித் தன் திருமுடியில் எடுத்துச் சென்று கரையில் கொட்டி விட்டுக் களைப்படைந்தவன் போல ஓய்வு எடுத்துக்கொள்வதும், வந்தி அளித்த பிட்டை உண்பதும், ஆடுவதும் பாடுவதுமாக இருந்து பொழுதுபோக்கினான். வேலை செய்து களைத்தவன் போலக் கூடையைத் தலையணையாக வைத்து

உறங்கவும் செய்தான். ஆற்றின் கரை அடைபட்டதா என்பதைப் பார்வையிட வந்த மன்னனிடம் காவலர், 'ஊரில் உள்ளோர் ஒவ்வொருவரும் தத்தம் பங்கை அடைத்து முடித்தனர். பிட்டு விற்கும் வந்தி என்னும் மூதாட்டியின் பங்கு மட்டும் அடைபடாமல் கிடக்கிறது. வந்திக்கு ஆளாய் வந்த ஒருவன் நாங்கள் கண்டித்தும் சரிவரத் தன் பணியைச் செய்யாமல் பொழுதைக் கழிக்கிறான். அதனால் அப் பகுதி 'நூற்றைக் கெடுத்தது குறுணி' என்பது போல ஒருத்தி பங்கு ஊரார் பங்கையும் கரைக்கிறது' என்று கூறினர்.

உடனே அப்பகுதியைப் பார்வையிட வந்த பாண்டியன் அக்கூலியாளை அழைத்து வரச்செய்து தன்னுடைய கைப்பிரம்பால் முதுகில் அடித்தான். அடித்த அளவில் கூலியாளாக வந்த பெருமான் ஒருகூடை மண்ணை உடைப்பில் கொட்டி மறைந்தான். வெள்ளமும் வற்றியது. பாண்டியன் அடித்த அப்பிரம்படி அரசன், அரசி, அமைச்சர், காவலாளர்கள் முதலிய எல்லோர் மேலும் பட்டது. அண்ட சராசரப் பொருள் அனைத்தின் மேலும் பட்டது. அதுசமயம், ஓர் அசரீரி வெளிப்பட்டு '**எமது அடியான் மாணிக்கவாசகன் பெருமையை உலகறியச் செய்யவே நாம் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் செய்தோம். அவரைப் போற்றி நீ பெருவாழ்வு வாழ்வாயாக!**' என அரசனும் ஏனையோரும் கேட்டனர். அப்போது, வாதவூரர் இறைவன் தன் பொருட்டுக் கூலியாளாக வந்த திருவருளை எண்ணி வியந்தார். பாண்டிய மன்னன் வாதவூரர் பெருமையை நன்கறிந்து அவரை வணங்கி, '**நற்றவப் பெரியீர்!** எனக்கு அமைச்சராய் அமர்ந்து எம் குல தெய்வத்தை என் கண்ணாரக்காட்டிக் குதிரைச் சேவகனாகவும், கூலியாளாகவும் வரச்செய்து என் பிறவிக் குற்றத்தை ஒழித்த பெரியவரே, என்னை மன்னித்தருள வேண்டும். தங்கள் பெருமையை இறைவன் எனக்கு நன்கு உணர்த்தினான். என் அரசு உரிமையை இன்று முதல் தாங்கள் ஏற்றருளல் வேண்டும்' என்று வேண்டினான்.

வாதவூரர் பாண்டியனிடம் 'இறைவனுடைய திருவடித் தொண்டு செய்ய என்னை உரிமையாக்குவதே இவ்வுலக ஆட்சியை எனக்குத் தருவதற்கு ஒப்பாகும்' என்றார். மன்னனும் அதற்கு இசைந்து அவர் விரும்பியவாறு அவரைச் செல்ல விடுத்துத் திருவருள் உணர்வோடு தம் அரண்மனைக்குச் சென்றான். மாணிக்க வாசகருக்கு திருப்பணி செய்ய வேண்டும்பொருளைப் பண்டாரத்திலிருந்து கொடுக்கவும் ஆணையிட்டான். அமைச்சியலைத் துறந்து தவவேடம் தாங்கிய வாதவூரடிகள் இறைவன் திருவிளையாடல்களை எண்ணி மகிழ்ந்தவராய், திருப்பெருந்துறையை அடைந்தார்.

குருநாதர் பிரிவு

மீண்டும் தன் குருநாதரை அடைந்த வாதவூரடிகள் அடியவர் கூட்டத்தோடு

கலந்து மகிழ்ந்திருந்தார். ஞானதேசிகனாய் வந்த பெருமான் தாம் கயிலைக்குச் செல்ல வேண்டியதைச் சீடர்களுக்கு உணர்த்தி, அவர்களை இன்புற்றிருக்குமாறு பணித்தார். அடியவர்கள் தம் குருநாதரைப் பிரிய மனம் இல்லாமல் பெரிதும் வருந்தினர். அதைக் கண்ட குருநாதர் இக் குருந்த மரத்தின் நிழலில் ஒரு தெய்வப் பீடம் அமைத்து அதில் நம்முடைய திருவடிகளை எழுப்பி வழிபாடு செய்து வருவீர்களானால் ஒருநாள் '**இக்கோயில் திருக்குளத்தில் தீப்பிழம்பு ஒன்று தோன்றும்; அதில் அனைவரும் மூழ்கி எம்மை அடையலாம்**' என்று திருவாய் மலர்ந்து தம்மைப் பின் தொடர்ந்து வந்த அடியார்களை 'நிற்க' எனக் கட்டளை இட்டுக் கயிலை சென்றார். வாதவூரடிகள் மட்டும் அவரைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட குருநாதர், 'நீ எம்மைப் பின் தொடர்ந்து வருதல் வேண்டா; உத்தரகோசமங்கை என்னும் திருப்பதிக்குச் சென்று அங்கு எண்வகைச் சித்திகளையும் பெற்று, திருக்கழுக்குன்றம் முதலான தலங்களைத் தரிசித்துப் பின்னர் தில்லையை அடைவாயாக' என்று கூறிச் சென்றார். மாணிக்கவாசகரும் அவ்வாறே திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் கீழ் ஒரு தெய்வப்பீடம் அமைத்து அதில் குருநாதரின் திருவடிகளை எழுந்தருளச் செய்து அடியார்களோடு தாமும் வழிபட்டு வரலாயினர்.

தல யாத்திரை

மாணிக்கவாசகர் திருவருட்போகத்தில் திளைத்து வாழும் நாட்களில் **நமச் சிவாய வாழ்க என்று தொடங்கும் சிவபுராணம், அற்புதப் பத்து, அதிசயப் பத்து, குழைத்தப் பத்து, சென்னிப் பத்து, ஆசைப் பத்து, வாழாப் பத்து, அடைக்கலப் பத்து, செத்திலாப் பத்து, புணர்ச்சிப் பத்து, அருட்பத்து, திருவார்த்தை, எண்ணப் பதிகம், திருவெண்பா, திருப்பள்ளியெழுச்சி, திருவேசறவு, ஆனந்த மாலை, உயிருண்ணிப் பத்து, பிரார்த்தனைப் பத்து, திருப்பாண்டிப் பதிகம், பண்டாய நான்மறை** முதலிய பதிகங்களைத் திருவாய் மலர்ந்தருளி, அடியார் கூட்டத்துடன் பலநாள் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருந்தார். ஒருநாள் திருக்குளத்தில் தீப்பிழம்பு தோன்றிற்று. அடியார்கள் அனைவரும் ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு அதில் மூழ்கினர். பெருமான் அம்மையப்பராய் இடப வாகனத்தில் எழுந்தருளி அருட்காட்சி வழங்கியருளினான். அடியார்கள் அனைவரும் மூழ்கிச் சிவகணங்கள் ஆயினர். மாணிக்கவாசகர் இவ்வேளையில் கொன்றைமர நிழலில் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். இந்நிகழ்ச்சியை யோகக் காட்சியில் அறிந்த அடிகள் அடியார் களின் பிரிவாற்றாது வருந்தி, குருந்த மரத்தினடியில் இருந்த குருநாதரின் திருவடிப் பீடத்தைப் பற்றிக் கொண்டு அழுதார். **திருச்சதகம்** என்னும் பாமாலையால் இறைவன் திருவருளைத் தோத்தரித்தார். பின்னர், குருநாதர் தனக்குப் பணித்த அருளாணையின் வண்ணம் திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று **நீத்தல் விண்ணப்பம்** என்னும் திருப்பதிகத்தால் தோத்திரம் செய்தார்.

அப்போது அத்தலத்தில் இறைவன் திருப்பெருந்துறையில் காட்டிய குருந்தமர் கோலத்தைக் காட்டியருளினான். அத்திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்த அடிகள், அங்கு அட்டமாசித்திகள் கைவரப் பெற்றார். பின்னர், பல திருப்பதிகளையும் வணங்கிக் கொண்டு, பாண்டிய நாட்டைக் கடந்து சோழவளநாட்டைச் சேர்ந்த திருவிடைமருதூரை வந்தடைந்தார். இடைமருதில் ஆனந்தத் தேனாக எழுந்து அருளியுள்ள இறைவன் அருள் நலத்தை நுகர்ந்து, திருவாரூரை அடைந்து புற்றிடம் கொண்ட பெருமானை வணங்கி, **திருப்புலம்பல்** என்னும் பதிகத்தை அருளிச் செய்தார். அதன் பின்னர்ச் சீர்காழியை அடைந்து தோணியப்பரைத் தரிசித்து **பிடித்தப் பத்து** என்னும் பதிகத்தை அருளிச் செய்தார். பின்னர், அங்கு இருந்து புறப்பட்டு, சோழநாடு கடந்து நடுநாட்டை அடைந்து திருமுதுகுன்றம், திருவெண்ணெய்நல்லூர் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு, திருவண்ணாமலையை அடைந்தார். அங்கும் இறைவன் குருந்தமர் திருக்கோலம் காட்டி அருளினன். அக்காட்சியைக் கண்டு வணங்கிய அடிகள் அத்தலத்தில் பல நாட்கள் தங்கியிருந்தார்.

திருவண்ணாமலையில்

அடிகள் திருஅண்ணாமலையில் தங்கியிருந்த போது, மார்கழி மாதம் வந்தது. திருவாதிரைக்கு முன் பத்து நாட்களில் கன்னிப் பெண்கள் விடியற்காலம் எழுந்து, வீடுகள் தோறும் சென்று, ஒருவரையொருவர் துயிலெழுப்பிக்கொண்டு, நீராடி வழிபாடு செய்வதைக் கண்டு, அவர்கள் வாய் மொழியாகவே வைத்து **திருவெம்பாவையையும்**, அவ்வூர்ப் பெண்கள் அம்மானையாடும் காட்சியைக் கண்டு அவர்கள் பாடுவதாக வைத்து **திருவம்மானையையும்** அருளிச் செய்தார்.

திருத்தில்லை தரிசனம்

பின்னர் திருஅண்ணாமலையை நீங்கிக் காஞ்சிபுரம் அடைந்து அவ்வூர் இறைவனைத் தரிசித்துத் திருக்கழுக்குன்றம் அடைந்து **திருக்கழுக்குன்றப் பதிகம்** பாடினார். அங்கே பெருமான் பெருந்துறையில் அவரை ஆட்கொண்ட குருநாதர் திருக்கோலத்தோடு காட்சி வழங்கினான். பின்னர், அங்கிருந்து புறப்பட்டுத் திருத்தில்லையின் எல்லையை அடைந்து அத்திருத்தலத்தைத் தரிசித்தார். தில்லை சிவலோகம் போலக் காட்சியளித்தது. அந்நகரை அடைந்த மாணிக்கவாசகர் திருவீதிகளைக் கடந்து கிழக்கு திருவாயில் வழியே திருக் கோவிலுக்குள் சென்றார். சிவகங்கையில் நீராடி வலமாகச் சிற்சபையில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராசப் பெருமானை ஆரா அன்பினில் கண்டு, கண்ணீர் வார, உளம் நெகிழ்ந்து வணங்கினார். குருநாதராக எழுந்தருளி வந்து காட்சி கொடுத்த இறைவனைத் தில்லைச் சிற்றம்பலத்திலே கண்டு தரிசித்து, பேரானந்தம் உற்று, ஆனந்தக் கண்ணீர் பெருக, **கண்டப்பத்து** என்னும் பதிகம்

பாடி வழிபட்டார். பின்னர், தில்லையின் கீழ்த்திசையில் ஒரு தவச்சாலை அமைத்துப் பலநாட்கள் தங்கியிருந்து தினமும் அம்பலவாணனின் ஆனந்த நடனத்தைத் தரிசித்து வந்தார். அங்கிருந்து திருப்புலீச்சரம், திருநாகேச்சரம் முதலான திருத் தலங்களுக்குச் சென்று தரிசித்து, மீண்டும் தில்லை வந்தடைந்தார். தில்லையில் அடிகள் அருளிச் செய்தவை குலாப்பத்து, கோயில் திருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல்,திருப் பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், அன்னைப் பத்து, திருக்கோத்தும்பி, குயில் பத்து, திருத்தசாங்கம், அச்சப்பத்து என்பனவாம்.

புத்த மதத்தாரோடு சமய வாதம்

மாணிக்கவாசகர் தில்லையில் வாழ்ந்துவரும் நாட்களில் சிவனடியார் ஒருவர் சிதம்பரத்திலிருந்து ஈழநாட்டிற்குச் சென்றிருந்தார். அவ்வடியார் செம்பொன்னம் பலம், திருவம்பலம், திருச்சிற்றம்பலம் என்ற திருநாமங்களை இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்கும் இயல்பு உடையவர்.

அவர் ஈழம் சென்றிருந்த காலத்தில் ஈழநாட்டில் புத்த சமயம் மேலோங்கி இருந்தது. இவ்வடியாரின் இயல்பைக் கண்ட சிலர் அரசனிடம் சென்று, அவரது செய்கைகளை உணர்த்தினர். அரசன் அச்சிவனடியாரைச் சபைக்கு அழைத்து வருமாறு செய்தான். அரசவைக்கு வந்த அடியவர் செம்பொன்னம்பலம், திருவம் பலம், திருச்சிற்றம்பலம் என்று சொல்லிக்கொண்டே தன் இருக்கையில் அமர்ந்தார். அரசன் வியந்து இதன் பொருள் யாது? என்று அவரைக் கேட்டான். அவ்வடியவர் அதன் சிறப்புக்களை எடுத்துரைத்து, 'தீயவரும் உள்ளன்போடு இப்பெயரை ஒருமுறை கூறினால் 21,600 தடவை திருவைந்தெழுத்தைக் கூறியதனால் உண்டாகும் பயனை இது தரும்' என்று கூறித் தில்லைப் பெருமானின் சிறப்பை எடுத்துரைத்தார். அங்கு இருந்த புத்தமத ஆசாரியன் சிவனடியார் கூறுவதைக் கேட்டுச் சினந்து, 'திரிபிடகம் அருளிய எங்கள் புத்தனைத் தவிர வேறு தெய்வம் உண்டோ? ஆதலால் நான் தில்லைக்குச் சென்று, சைவத்தை வென்று, புத்தனே கடவுள் என்று நிலைநாட்டி வருவேன்' என்று சூளுரைத்து எழுந்தான். ஈழத்தரசனும் தன் ஊமைப் பெண்ணையும் உடனழைத்துக் கொண்டு புத்தாசாரியனுடன் தில்லைக்குப் புறப்பட்டான்.

தில்லையை அடைந்த புத்தகுரு, அரசன் முதலானோர் திருக்கோவிலை அடைந்து அக்கோவில் மண்டபம் ஒன்றில் அமர்ந்தனர். கோவில் காப்பாளர் அவர்களை அணுகி புறச்சமயத்தார் இங்கு தங்குதல் கூடாது என்று கூறினர். அதைக் கேட்ட புத்தகுரு, 'யாம் உங்கள் சமயத்தை வென்று, எங்கள் சமயத்தை

இங்கு நிலைநாட்ட வந்துள்ளோம்' என்று வாதிற்கு அறை கூவினான். அச்சூளுரை தில்லைவாழ் அந்தணர்களுக்கு எட்டியது. அவர்கள் சோழ மன்னனுக்கு இந் நிகழ்ச்சியை உடன் தெரிவித்தனர். அன்றிரவு தில்லைவாழ் அந்தணர்கள் அனைவரும் புத்தமத குருவை எவ்வாறு வெல்வது என்ற கவலையுடன் தில்லைச் சிற்றம்பலவனை எண்ணி வணங்கி துயில் கொண்டனர். நடராசப் பெருமான் அவர்கள் கனவில் எழுந்தருளி, **'தில்லையின் கீழ்பால் சிவயோகத்தில் அமர்ந்து தவமியற்றி வரும் நம் அடியவனாகிய மாணிக்கவாசகனை அழைத்து வந்து, இப்புத்தகுருவோடு வாதிடச் செய்க; அவன் அவர்களை வெல்வான்; கவலற்க'** என்று தெரிவித்தார். மறு நாள் தாம் கண்ட கனவை ஒவ்வொருவரும் ஒருவருக்கு ஒருவர் சொல்லிக் கொண்டு, இறைவன் திருவருளை வியந்து, அரசனிடம் தெரிவித்து மாணிக்கவாசகர் எழுந்தருளி உள்ள தவச்சாலையை அடைந்து, மாணிக்கவாசகரிடம், 'அடிகளே! நம் சைவ சமயத்தை அழித்து புத்த மதத்தை நிலை நாட்டும் எண்ணத்துடன் ஈழநாட்டு மன்னனும், புத்தமதகுருவும் வந்து உள்ளனர். தாங்கள் வந்து அவர்களை வாதில் வென்று நம் சமயத்தை நிலை நிறுத்தல் வேண்டும்' என்று அழைத்து, தாங்கள் அனைவரும் கண்ட ஒரே மாதிரியான கனவையும், அரசனது விருப்பத்தையும் தெரிவித்தனர்.

ஊமைப் பெண் பேசியது

மாணிக்கவாசகர் அதற்குச் சம்மதித்து, தில்லை மூவாயிரவருடன் திருக் கோவில் சென்று, ஆனந்தக்கூத்தனை வணங்கி, அவனருள் பெற்று புத்தமத குரு இருந்த மண்டபத்தை அடைந்தார்.'தீயவர்களைக் காண்பது தீயது' என்று எண்ணி, அவர்களுக்கெதிரே ஒரு திரையிடச் செய்து, தான் மறுபக்கத்தில் அமர்ந்தார். சோழ மன்னனும், மறையோரும், புலவர்களும் அந்த அவையில் கூடியிருந்தனர். சோழன், மாணிக்கவாசகரைப் பணிந்து, 'புத்தர்களை வாதில் வென்று நம் சமயத்தை நிலைபெறச் செய்வது தங்கள் கடமை. தோல்வியுற்ற புத்தர்களை முறை செய்வது என் கடமை' என்று வேண்டிக் கொண்டான். பின்னர், மாணிக்கவாசகர் புத்தகுருவை விளித்து, 'வந்த காரியம் என்ன?' என்று வாதத்தைத் தொடங்கினார். வாதம் தொடர்ந்து நடைபெற்றது. மாணிக்கவாசகர் எத்துணை உண்மைகளை எடுத்து உரைத்தாலும், அவை புத்தகுருவின் செவிகளில் ஏறவில்லை. மாணிக்கவாசகர் கூறிய வாதத்தை மறுக்கும் வழியின்றி, சிவநிந்தை செய்யத் தொடங்கினான். அதைக் கண்ட மாணிக்க வாசகர் கலை மகளை வேண்டி, 'சிவநிந்தை செய்யும் நாவில் நீ இருத்தல் பொருந்துமோ? இவர்கள் நாவைவிட்டு அகல்வாயாக; இது இறைவன் ஆணை' என்று கூறினார். அவ்வளவில் புத்தகுருவும், அவருடன் வந்தவர்களும் ஊமைகளாயினர். இதைக் கண்டு வியப்புற்ற ஈழமன்னன் மாணிக்கவாசகரை வணங்கி, 'அடிகளே! என் மகள், பிறவி முதல் ஊமையாக இருக்கின்றாள். அவளைப் பேசும்படிச் செய்தால்

நான் தங்களுக்கு அடிமையாவேன்' என்று கூறினான். மாணிக்கவாசகர் அதற்கிசைந்து அப்பெண்ணை அவைக்கு வரவழைத்து அமர்த்தி, 'பெண்ணே! இப்புத்தன் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறு' என்று கூறினார். அப்பெண்ணும் அனைவரும் வியந்து மகிழும்படி, புத்தகுருவின் வினாக்களை மாணிக்கவாசகர் தாமே அப்பெண்ணிடம் கேட்க அப்பெண் அதற்கு விடையளித்தாள். அந்த வினா–விடைகளே **'திருச்சாழல்'** என்ற திருப்பதிகமாக அமைந்தது. ஈழமன்னனும் அதைக்கண்டு மகிழ்ந்து, மாணிக்கவாசகர் திருவடிகளிலே விழுந்து வணங்கி சைவம் சார்ந்தான். அவையோர் அனைவரும் மாணிக்கவாசகப் பெருமானைப் போற்றித் துதித்தார்கள். ஈழமன்னன் திருநீறும், கண்டிகையும் பூண்டு அடிகளைப் பணிந்து, புத்தகுருவும், மற்றவர்களும் பேசும் திறம்பெற அருள் செய்ய வேண்டும் என்று வேண்டினான். மாணிக்கவாசகர் அவர்கள்மீது திருவருட் பார்வையைச் செலுத்தினார். அவ்வளவில் அனைவரும் ஊமை நீங்கிப் பேசும் திறம் பெற்று மாணிக்கவாசகரை வணங்கி, தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டனர். புத்தகுருவும், அவரைச் சூழவந்த அனைவரும் சைவர் களாக மாறினர். மாணிக்கவாசகரும் திருக்கோவிலுக்குள் சென்று சபாநாயகரை வணங்கித் தம் தவச்சாலைக்கு எழுந்தருளினார். இவ்வாறு தவச்சாலையில் தங்கியிருந்த காலத்தில் மாணிக்கவாசகர் **திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, அச்சோப் பதிகம், யாத்திரைப் பத்து** என்ற பதிகங்களைப் பாடியருளினார்.

இறைவன் திருவாசகம் கேட்டு எழுதியது

இவ்வாறு சிதம்பரத்தில் மாணிக்கவாசகர் வாழ்ந்துவரும் நாட்களில், ஒருநாள் அந்தணர் பெருமான் ஒருவர் அவரிடம் வந்து, தான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்றும், சிவபிரான் மாணிக்கவாசகருக்காகச் செய்த அருட்செயல் உலகெங்கும் பரவியுள்ளது என்றும், வியந்து கூறி மாணிக்கவாசகர் பல தலங்களிலும் பாடிய பாடல்களை முறையாகச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். மாணிக்க வாசகரும் அந்தணரை அருகில் இருத்தித் தாம் பாடிய **'திருவாசகப் பாடல்கள்'** அனைத்தையும் சொல்லியருளினார். அந்தணரும் தம் திருக்கரத்தால் அவைகளை எழுதி முடித்து, **'பாவைபாடிய தங்கள் திருவாயால் ஒரு கோவை பாடுக'** என்று கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கு இணங்கிய மாணிக்க வாசகர் இறைவனது திருவடிப்பேற்றை உட்கருத்தாகக் கொண்ட இனிய **'திருக்கோவையார்'** என்று நூலை அருளிச்செய்தார். அந்தணர் பெருமான் அந்த நூலையும் தம் திருக்கரத்தால் எழுதி முடித்தார். பின்னர் அந்தணர் வடிவில் வந்த சிவபெருமான் மறைந்தான். அதைக் கண்ட மாணிக்கவாசகர் இப்படித் தன்னை ஆட்கொண்டவர் சிவபிரானே என்பதை அறிந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கித் திருவருளை எண்ணி வழுத்தினார்.

திருவாசக உட்பொருள்

திருவாதவூரின் திருவாசகத்தையும், திருக்கோவையையும் தம் கையால் எழுதிய இறைவன், அந்நூல்களை உலகறியச் செய்ய வேண்டி, நூலின் முடிவில் 'மாணிக்கவாசகர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து' எனத் திருச்சாத்திட்டு தில்லைச் சிற்றம்பலத்தில் பஞ்சாக்கரப் படியில் வைத்திருந்தார். காலையில் கோயிலில் இறைவனைப் பூசை செய்ய வந்த அருச்சகர்கள் பஞ்சாக்கரப் படியில் நூல் ஒன்று இருப்பதைக் கண்டு வியந்து, அதை எடுத்து ஆண்டவனால் இது தரப்பட்டதாகும் என்ற அன்பு உணர்வோடு பிரித்துப் பார்த்துப் படித்தார்கள். அந்த ஏடுகளின் முடிவில் 'மாணிக்கவாசகர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து' என்று இருந்ததைக் கண்டு, உடல் சிலிர்த்து இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய நூல்களில் இது தலையானது என்று புகழ்ந்து, இந்நூலைப் பாடிய மாணிக்க வாசகரைச் சென்று கண்டு வணங்கினர். திருவாயிற்படியில் இந்நூல் இறைவனால் வைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சியை அவரிடம் தெரிவித்தார்கள்.

வாதவூரர் அதைக் கேட்டுத் திருவருளை எண்ணி வணங்கினார். முடிவில் அந்தணர் அனைவரும் இந்நூலின் பொருளைத் தாங்களே விளக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு மாணிக்கவாசகர் இதன் பொருளைத் தில்லைச் சிற்றம்பலத்தில் வந்து தெரிவிக்கின்றேன் என்று சொல்லி அவர்களோடு சிற்சபைக்கு எழுந்தருளினார். அங்கு வந்து 'இந்நூற்பொருள் இச்சபையில் எழுந்தருளி உள்ள ஆனந்தக் கூத்தப்பெருமானே ஆவான்' என்று காட்டி, அச்சபையில் எல்லோரும் காண மறைந்தருளினார். இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்ட அனைவரும் வியந்து, மகிழ்ந்து, தொழுது போற்றினர். கூத்தப் பெருமான் மாணிக்கவாசகருக்கு தம் திருவடிகளிலே இரண்டறக் கலக்கும் பேரின்பப் பேற்றைத் தந்து அவரை ஆட்கொண்டு அருளினார்.

அடிகள் காலம்

ஆராய்ச்சியாளர்கள் மாணிக்கவாசகர் காலத்தைப் பற்றி பல வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொருவரும் தாங்கள் கருதிய கருத்துக்களை நிலைநாட்டுவதற்கு, பல்வேறு ஆதாரங்களைக் காட்டுகின்றனர். எல்லோருடைய ஆராய்ச்சியும் அடிகளார், கடைச் சங்க காலத்திற்குப்பின் தொடங்கி ஏழாம் நூற்றாண்டு வரை உள்ள காலங்களில் ஏதேனும் ஒருகாலம் மாணிக்கவாசகர் வாழ்ந்த காலம் என முடிவு செய்கின்றனர். இக்கால ஆராய்ச்சிகளைத் தொகுத்து, ஆராய்ந்து மாணிக்கவாசகர் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என முடிவு செய்து, தருமை ஆதீனத் திருவாசக நூல் வெளியீட்டில் மகாவித்துவான் திரு. ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களுடைய கால ஆராய்ச்சித் தொகுப்பு உரையின் ஒரு பகுதியைச் சுருக்கித் தருகின்றோம்.

திருமலைக்கொழுந்துப் பிள்ளை அவர்கள் 1-ஆம் நூற்றாண்டாகவும், பொன்னம்பலப் பிள்ளை அவர்கள் 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டாகவும், மறைமலையடிகளார் அவர்கள் 3-ஆம் நூற்றாண்டாகவும், வில்ஸன்வுட் என்பவர் 7-ஆம் நூற்றாண்டு என்றும், ஜி.யூ.போப் 7, 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டு என்றும், சூலின் வின்ஸன் 9 அல்லது 10-ஆம் நூற்றாண்டு என்றும், திரு.கௌடி 8-லிருந்து 10-ஆம் நூற்றாண்டுக்குள் என்றும், டாக்டர் ரோஸட்டு 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டு என்றும், நெல்சன் 9-ஆம் நூற்றாண்டு என்றும், கே.ஜி. சேசய்யர் 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டு என்றும், சீனிவாசப் பிள்ளை 9-ஆம் நூற்றாண்டு என்றும், சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் மூவர்க்கும் முந்தியவர் என்றும் கூறுகின்றனர்.

மூவர்க்கு முந்தியவர் மாணிக்கவாசகர் என்ற கருத்தே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. மாணிக்கவாசகர் காலத்தில் நம் நாட்டில் தலையெடுத்திருந்த புறச்சமயம், புத்தம் ஒன்றே எனத் தெரிகிறது. மூவர் காலத்தில் புத்தம் ஓரளவிலும், சமணம் சிறப்புற்றும் இருந்தன. மாணிக்கவாசகர் வாக்கில் சமண சமயக் குறிப்பேதும் காணப்பெறவில்லை. திருவாசகத்தில் விநாயகரைப் பற்றிய குறிப்பு எதுவும் காணப் பெறவில்லை. இன்ன பல காரணங்களால் மாணிக்கவாசகர் மூவர்க்கும் முந்தியவர் என்று கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்

திருவாசகத்தின் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருவாசகம்

1. சிவபுராணம்

திருப்பெருந்துறையில் அருளியது, சிவனது அநாதி முறைமையான பழைமை
சிவபெருமானின் பெருமையும், உயிர்களை அவன் ஆட்கொள்ளும் விதமும்
(கலி வெண்பா)

திருச்சிற்றம்பலம்

வாழ்த்தும், வணக்கமும்

நமச்சிவாய வா(அ)ழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணி தன்தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன், அநேகன், இறைவன், அடிவாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க!

ஈச னடிபோற்றி! எந்தை யடிபோற்றி!
தேச னடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி!

வருபொருள் உரைத்தல்

சிவன்,அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்,
சிந்தை மகிழச், சிவபுராணம் தன்னை,
முந்தை வினைமுழுதும் மோய, உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி

அவையடக்கம்

விண்ணிறைந்து, மண்ணிறைந்து, மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந்து, எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்,
பொல்லா வினையேன், புகழுமாறு ஒன்றறியேன்;

சென்ற நிலைகளும், இன்றைய நிலையும்

புல்லாகிப், பூடாய்ப், புழுவாய், மரமாகிப்,
பல் விருகமாகிப், பறவையாய்ப், பாம்பாகிக்,
கல்லாய், மனிதராய்ப், பேயாய்க், கணங்களாய்,
வல் லசுரராகி, முனிவராய்த், தேவராய்ச்,
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்,
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யே, உன்பொன்னடிகள் கண்டு,இன்று வீடுற்றேன்;

பொய்யகல வந்த மெய்ச்சுடர்

உய்ய, என்உள்ளத்துள், ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
'ஐயா' என,ஓங்கி, ஆழ்ந்து,அகன்ற, நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமானனாம் விமலா!
பொய்யாயின வெல்லாம் போயகல, வந்தருளி,
மெய்ஞ்ஞான மாகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன், இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஐந்தொழில்

ஆக்கம், அளவு,இறுதி, இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்

சிந்தனையில் ஊறும் தேன்

நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
மாற்றம், மனம்,கழிய நின்ற மறையோனே!

கறந்தபால், கன்னலொடு, நெய்கலந்தாற் போலச்
சிறந்து,அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று,
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!

மாய இருள் போக்கிய மாசற்ற சோதி

நிறங்களோர் ஐந்துடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை,
அறம்,பாவம், என்னும் அருங்கயிற்றால் கட்டிப்,
புறந்தோல் போர்த்து,எங்கும் புழுவழுக்கு மூடி,
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப், புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால், விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக், கசிந்து உள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலந்தன்மேல் வந்தருளி, நீள்கழல்கள் கா(அ)ட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!

ஆட்கொண்ட பெருங்கருணை

தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப், பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து, நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி,என் ஆருயிராய் நின்றானே!
இன்பமுந் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையுமாய், அல்லையுமாம்
சோதியனே! துன்னிருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடுவாகி, அல்லானே!
ஈர்த்தென்னை, யாட்கொண்ட எந்தை பெருமானே!

கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும், வரவும், புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்குமெங் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே! அத்தா! மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச், சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து,அறிவாம்,
தேற்றனே! தேற்றத் தெளிவே! என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே! உடையானே!

இத்தெய்வப்பாடலை பயில்வோரும், பயிலும் திறனும், பயனும்

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்; " எம்ஐயா! அரனே!ஓ! " என்றென்று
போற்றிப், புகழ்ந்திருந்து, பொய்கெட்டு மெய்யானார்,
மீட்டிங்கு வந்து, வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லற் பிறவி அறுப்பானே! ஓ!என்று ,
சொல்லற்கு அரியானைச் சொல்லித், திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார், சிவனடிக்கீழ்ப்,
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் சிவகாமி அம்மை உடனமர்
அருள்மிகு ஞானப்பெருங்கூத்தர் திருவடிகள் போற்றி ! போற்றி !

உ. கீர்த்தித்திருஅகவல்

திருத்தில்லையில் அருளியது; சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை சிவபெருமானின் அருட்செயல்கள்(நிலைமண்டில ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

அடியாரை ஆட்கொண்ட சிறப்பு

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயிர் எல்லாம் பயின்றனன் ஆகி,
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி,
மண்ணும், விண்ணும், வானோர் உலகும்,

துன்னிய கல்வி தோற்றியும், அழித்தும்,
என்னுடை இருளை ஏறத் துரந்தும்,
அடியார் உள்ளத்து அன்பு மீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையும், சிறப்பும்,

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்;
கல்லா டத்துக் கலந்து,இனிது அருளி,
நல்லா ளோடு நயப்புறவு எய்தியும்;

பஞ்சப் பள்ளியிற் பால்மொழி தன்னொடும்;
எஞ்சாது ஈண்டும் இன்னருள் விளைத்தும்;
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்;

கேவேட ராகிக், கெளிறது படுத்தும்;
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்;
மற்று,அவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்றஐம் முகங்களாற் பணித்து அருளியும்;

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்,
அந்தமில் ஆரிய னாய்,அமர்ந்து அருளியும்;
வேறுவேறு உருவும், வேறுவேறு இயற்கையும்,
நூறு நூறாயிரம் இயல்பின தாகி,

ஏறுடை ஈசன், இப்புவனியை உய்யக்,
கூறுடை மங்கையும் தானும் வந்தருளிக்,
குதிரையைக் கொண்டு, குடநாடு அதன்மிசை,
சதுர்படச், சாத்தாய்த், தானெழுந்து அருளியும்;

வேலம் புத்தூர் விட்டேறு அருளிக்,
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்;
தற்பணம் அதனில் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற்கு ஈந்த விளைவும்;

மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்;
அரியொடு பிரமற்கு அளவறி யொண்ணான்
நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்;

ஆண்டுகொண்டு அருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று,
ஈண்டு கனகம் இசையப் பெறா(அ)து,
ஆண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்;

அந்தணன் ஆகி, ஆண்டுகொண்டு அருளி,
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்;
மதுரைப் பெருநன் மாநகர் இருந்து,
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்;

ஆங்கு,அது தன்னில், அடியவட்கு ஆகப்,
பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசும்;
உத்தர கோச மங்கையுள் இருந்து,
வித்தக வேடங் காட்டிய இயல்பும்;

பூவணம் அதனிற் பொலிந்து,இருந்து அருளித்,
தூவண மேனி காட்டிய தொன்மையும்;
வாத வூரினில் வந்து,இனிது அருளிப்,
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்;

திருவார் பெருந்துறைச் செல்வன் ஆகிக்,
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்;
பூவலம் அதனிற் பொலிந்து,இனிது அருளிப்,
பாவ நாசம் ஆக்கிய பரிசும்;

தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து,
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்;
விருந்தினன் ஆகி, வெண்காடு அதனில்,
குருந்தின் கீழ்,அன்று, இருந்த கொள்கையும்;

பட்ட மங்கையிற் பாங்காய் இருந்து,அங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்;
வேடுவன் ஆகி, வேண்டுருக் கொண்டு,
காடது தன்னிற், கரந்த கள்ளமும்;

மெய்க்காட் டிட்டு; வேண்டுருக் கொண்டு,
தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்;
ஓரி யூரின் உகந்து,இனிது அருளிப்,
பாரிரும் பாலகன் ஆகிய பரிசும்;

பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்;
தேவூர் தென்பால் திகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்;

தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்;
இடைமருது அதனில் ஈண்ட இருந்து,
படிமப் பாதம் வைத்த அப்பரிசும்;

ஏகம் பத்தின் இயல்பாய் இருந்து,
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்;
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து,
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்;

சேவகன் ஆகித், திண்சிலை யேந்திப்,
பாவகம் பலபல காட்டிய பரிசும்;

கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்;
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்;
ஐயாறு அதனிற் சைவன் ஆகியும்;
துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்;
திருப்பனை யூரில் விருப்பன் ஆகியும்;

கழுமலம் அதனிற் காட்சி கொடுத்தும்;
கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்;
புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்;
குற்றா லத்துக் குறியாய் இருந்தும்;

அந்தமில் பெருமை அழலுருக் கரந்து,
சுந்தர வேடத்து ஒருமுதல் உருவுகொண்டு
இந்திர ஞாலம் போல வந்தருளி,
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்,
தானே யாகிய தயாபரன், எம்மிறை

சந்திர தீபத்துச், சாத்திரன் ஆகி,
அந்தரத்து இழிந்துவந்து, அழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்து, இருந்தருளியும்;
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்,
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்,
எந்தமை ஆண்ட பரிசது பகரின்

இறைவனுடைய கொடி, ஆறு, முரசு, படை, மாலை, ஊர்தி, நாடு, ஊர், பெயர், மலை எனும் பத்துச் சிறப்பு

ஆற்றல் அதுவுடை, அழகமர் திருவுரு,
நீற்றுக் கோடி நிமிர்ந்து, காட்டியும்;
ஊனந் தன்னை ஒருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே, ஆறா அருளியும்;

மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்;
அழுக்கடை யாமல் ஆண்டுகொண்டு அருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண்டு அருளியும்;

மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும்,
தூய மேனிச், சுடர்விடு சோதி
காதலன் ஆகிக், கழுநீர் மாலை
ஏலுடைத் தாக, எழில்பெற, அணிந்தும்;

அரியொடு பிரமற்கு அளவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்;
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்,

பத்திசெய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்
உத்தர கோச மங்கையூர் ஆகவும்,
ஆதி மூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய
தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்,

இருள்கடிந்து, அருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருள்மலை ஆகவும்,
எப்பெருந் தன்மையும், எவ்வெவர் திறமும்,
அப்பரிசு அதனால் ஆண்டு கொண்டருளி;

என்னை இங்கு இருத்தினன்

நாயி னேனை நலமலி தில்லையுள்,
கோல மார்தரு பொதுவினில், ‘ வருக ’என,
ஏல, என்னை ஈங்கொழித்து அருளி;

உடன் செல்ல இயலாத அடியார்களின் பரிவு

அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்;
ஒன்ற வொன்ற உடன்கலந்து அருளியும்;
எய்த வந்திலாதார் எரியிற் பாயவும்,
மாலது வாகி, மயக்கம் எய்தியும்,

பூதலம் அதனிற் புரண்டுவீழ்ந்து அலறியும்,
கால்விசைத்து ஓடிக், கடல்புக மண்டி,
‘நாத! நாத! ’ என்றழுது அரற்றிப்,
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்;
‘பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக’ என்று
இதஞ்சலிப்பு எய்தநின்று ஏங்கினர் ஏங்கவும்;

புலியூரின் பொழிவு

எழில்பெறும் இமயத்து இயல்புடை அம்பொன்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில், நடம்நவில்
கனிதரு செவ்வாய் உமையொடு, காளிக்கு,
அருளிய திருமுகத்து, அழகுறு சிறுநகை,

இறைவன், ஈண்டிய அடியவ ரோடும்,
பொலிதரு புலியூர்ப் புக்கு,இனிது அருளினன்
‘ ஒலிதரு கயிலை ’ உயர் கிழவோனே.

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மட்டுவார்குழலி அம்மை உடனமர்
அருள்மிகு சேயுமானார் திருவடிகள் போற்றி ! போற்றி !

3. திருஅண்டப்பகுதி

திருத்தில்லையில் அருளியது
சிவனது தூலசூக்குமத்தை வியந்தது :
சிவபெருமான் இல்லாத இடம் இல்லை என்பதை விளக்குவது
(இணைக்குறள் ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

பெருமையும் ஆற்றலும்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்,
அளப்பரும் தன்மை, வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன;

இன்னுழை கதிரில் துன்அணுப் புரையச்;
சிறிய வாகப் பெரியோன், தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்,
தோற்றமும், சிறப்பும், ஈற்றொடு புணரிய

மாப்பேர் ஊழியும், நீக்கமும், நிலையும்,
சூக்கமொடு, தூலத்துச், சூறை மாருதத்து
எறியது வளியின்
கொட்கப் பெயர்க்கும் குழகன்; முழுவதும்

முத்தொழிலுக்கும், வீடுபேற்றுக்கும், ஐம்பூதங்களுக்கும் முதல்வன்

படைப்போன் படைக்கும் பழையோன்; படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள்; காப்பவை
கரப்போன்; கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள்; திருத்தகும்

அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபேறாய், நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன்; நாள்தொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன்; திருத்தகு

மதியின் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்; மேதகு
காலின் ஊக்கங் கண்டோன்; நிழல்திகழ்

நீரின் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட
மண்ணின் திண்மை வைத்தோன்- என்றென்று
எனைப்பல கோடி, எனைப்பல பிறவும்,
அனைத் தனைத்து, அவ்வயின் அடைத்தோன் அஃதான்று

புகழ்தல்

முன்னோன் காண்க! முழுதோன் காண்க!
தன்னேர் இல்லோன் தானே காண்க!
ஏனத் தொல்லெயிறு அணிந்தோன் காண்க!
கானப் புலியுரி அரையோன் காண்க!

நீற்றோன் காண்க! நினைதொறும் நினைதொறும்,
ஆற்றேன் காண்க! அந்தோ! கெடுவேன்!
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க!
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன் காண்க!

பரமன் காண்க! பழையோன் காண்க!
பிரமன்,மால் காணாப் பெரியோன் காண்க!
அற்புதன் காண்க! அநேகன் காண்க!
சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க!

சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க!
பத்தி வலையில் படுவோன் காண்க!
ஒருவன் என்னும் ஒருவன் காண்க!
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க!

அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க!
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க!
அரியதில் அரிய அரியோன் காண்க!
மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க!

நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க!
மேலொடு, கீழாய், விரிந்தோன் காண்க!
அந்தமும், ஆதியும், அகன்றோன் காண்க!
பந்தமும், வீடும், படைப்போன் காண்க!

நிற்பதும், செல்வதும், ஆனோன் காண்க!
கற்பமும், இறுதியும், கண்டோன் காண்க!
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க!
தேவரும் அறியாச் சிவனே காண்க!

பெண்,ஆண், அலியெனும் பெற்றியன் காண்க!
கண்ணால் யானும் கண்டேன் காண்க!
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க!
கருணையின் பெருமை கண்டேன் காண்க!

புவனியில் சேவடி தீண்டினன் காண்க!
சிவனென யானும் தேறினன் காண்க!
அவனெனை ஆட்கொண்டு அருளினன் காண்க!
குவளைக் கண்ணி கூறன் காண்க!
அவளும், தானும் உடனே காண்க!

ஆனந்த மழை பொழியும் கடல்

பரமா னந்தப் பழங்கடல் அதுவே
கருமா முகிலின் தோன்றித்,
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்,
திருத்தகு மின்னொளி திசை-திசை விரிய,

ஐம்புலப் பந்தனை வாளரவு இரிய,
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப,
நீடெழில் தோன்றி, வாளொளி மிளிர,
எந்தம் பிறவியில் கோபம் மிகுத்து,

முரசெறிந்து, மாப்பெருங் கருணையின் முழங்கிப்,
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட,
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்,
செஞ்சுடர் வெள்ளம் திசை–திசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டம் கையற ஓங்கி,

இருமுச் சமயத்து ஒரு பேய்த்தேரினை,
நீர்நசை தரவரும், நெடுங்கண், மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித், தளர்வொடும்,
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன;

ஆயிடை, வானப் பேரியாற்று அகவயின்
பாய்ந்து,எழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்,
சுழித்து, எம்பந்த மாக்கரைபொருது, அலைத்து,இடித்து
ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்

இருவினை மாமரம் வேர்பறித்து, எழுந்து
உருவ, அருள்நீர் ஓட்டா, அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி, மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி, நிறையகில்

மாப்புகைக் கறைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி,
அருச்சனை வயலுள் அன்புவித்து இட்டுத்,
தொண்டு உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன், வாழ்க!

பேரின்பத்தில் திளைத்துத் திருவருளைப் புகழ்தல்

கரும்பணக் கச்சைக் கடவுள், வாழ்க!
அருந்தவர்க்கு அருளும் ஆதி, வாழ்க!
அச்சம் தவிர்த்த சேவகன், வாழ்க!
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன், வாழ்க!

சூழிரும் துன்பம் துடைப்போன், வாழ்க!
எய்தினர்க்கு ஆரமுது அளிப்போன், வாழ்க!
கூரிருள் கூத்தொடு குனிப்போன், வாழ்க!
பேரமைத் தோளி காதலன், வாழ்க!

ஏதிலர்க்கு ஏதில்எம் இறைவன், வாழ்க!
காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க!
நச்சரவு ஆட்டிய நம்பன், போற்றி!
பிச்செமை ஏற்றிய பெரியோன், போற்றி!

நீற்றொடு தோற்ற வல்லோன், போற்றி! நாற்றிசை
நடப்பன நடாஅய்க், கிடப்பன கிடாஅய்,
நிற்பன நிறீஇச்,
சொற்பதம் கடந்த தொல்லோன்;
உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்;

கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்;
விண்முதல் பூதம் வெளிப்பட வகுத்தோன்;
பூவின் நாற்றம் போன்றுயர்ந்து, எங்கும்
ஒழிவற நிறைந்து, மேவிய பெருமை;

இன்று எனக்கு எளிவந்து, அருளி,
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்;
இன்றெனக்கு எளிவந்து, இருந்தனன் போற்றி!
அளிதரும் ஆக்கை செய்தோன், போற்றி!

ஊற்றிருந்து உள்ளம் களிப்போன், போற்றி!
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்,
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்;

காணா மாணிக்கம் கைநெல்லி ஆயிற்று

மரகதக் குவாஅல், மாமணிப் பிறக்கம்,
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்,
திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்;
முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்;

ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த, உறைப்பவர்க்கு ஒளித்தும்;
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்;
'இத் தந்திரத்தில் காண்டும்'என்று இருந்தோர்க்கு,
அத் தந்திரத்தின், அவ்வயின், ஒளித்தும்;

முனிவற நோக்கி, நனிவரக் கௌவி,
ஆணெனத் தோன்றி, அலியெனப் பெயர்ந்து,
வாள்நுதல் பெண்ணென ஒளித்தும்; சேண்வயின்,
ஐம்புலன் செலவிடுத்து, அருவரை தொறும்போய்த்,

துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்;
ஒன்றுண்டு, இல்லை, என்றறிவு ஒளித்தும்;

'பண்டே பயில்தொறும், இன்றே பயில்தொறும்,
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்;
ஆர்மின்! ஆர்மின்! நாண்மலர்ப் பிணையலின்
தாள் தளை இடுமின்!

சுற்றுமின்! சூழ்மின்! தொடர்மின்! விடேன்மின்!
பற்றுமின்!' என்றவர் பற்றுமுற்று ஒளித்தும்;
தன்னேர் இல்லோன் தானேயான தன்மை
என்னேர் அனையோர் கேட்கவந்து இயம்பி,

அறைகூவி, ஆட்கொண்டு அருளி,
மறையோர் கோலம் காட்டி அருளலும்;
உளையா அன்பு என்புருக ஓலமிட்டு,
அலைகடல் திரையின் ஆர்த்தார்த்து ஓங்கித்,

தலை தடுமாறா வீழ்ந்து, புரண்டலறிப்,
பித்தரின் மயங்கி; மத்தரின் மதித்து;
நாட்டவர் மருளவும், கேட்டவர் வியப்பவும்,
கடக்களிறு ஏற்றாத் தடப்பெரு மதத்தின்

ஆற்றேன் ஆக, அவயவம் சுவைதரு
கோல் தேன் கொண்டு செய்தனன்;
ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித்து ஆங்கு, அன்று,

அருட்பெரும் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்;
தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்;

கருணைத் தேன் விளைத்த ஆனந்தம்

சொல்லுவது அறியேன்; வாழி! முறையோ?
தரியேன் நாயேன்; தான்எனைச் செய்தது
தெரியேன்; ஆ!ஆ! செத்தேன்; அடியேற்கு
அருளியது அறியேன்; பருகியும் ஆரேன்;
விழுங்கியும் ஒல்ல கில்லேன்;

செழும்,தண் பாற்கடல் திரைபுரை வித்து,
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப,
வாக்கிறந்து, அமுதம், மயிர்க்கால் தோறும்,
தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்தழை

குரம்பை தோறும், நாயுடல் அகத்தே
குரம்பைகொண்டு,இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்,
எற்புத் துளைதொறும், ஏற்றினன்; உருகுவது

உள்ளம்கொண்டு ஓர்உருச் செய்துஆங் கெனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்; ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறெனக், கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன்; என்னில்

கருணை வான் தேன் கலக்க,
அருளொடு பரா- அமுது ஆக்கினன்;
பிரமன், மால், அறியாப் பெற்றியோனே.

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பாகம்பிரியாள் அம்மை உடனமர்
அருள்மிகு மாதொருபாகனார் மலரடிகள் போற்றி ! போற்றி !

4. போற்றித்திருஅகவல்

திருத்தில்லையில் அருளியது
சகத்தின் உற்பத்தி, உயிர்கள் உறும் அல்லல்கள் அனைத்தையும் நீக்குபவன் சிவபெருமானே, என அவனைப் போற்றுதல்
(நிலைமண்டில ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

அரிய திருவடி எளிதாயிற்று

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ,
ஈரடி யாலே மூவுல களந்து,
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்,
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மால்,அன்று

அடி,முடி, அறியும் ஆதரவு அதனிற்,
கடுமுரண் ஏனம் ஆகி, முன்கலந்து,
ஏழ்தலம் உருவ இடந்து, பின்னெய்த்து,
ஊழி முதல்வ, சய!சய! என்று,

வழுத்தியும் காணா மலரடி இணைகள்,
வழுத்துதற்கு எளிதாய், வார்கடல் உலகினில்,

கருவிலிருந்து பிறப்பு வரை உள்ள இடர்

யானை முதலா எறும்பு ஈறாய,
ஊனமில், யோனியின் உள்வினை பிழைத்தும்;
மானுடப் பிறப்பினுள், மாதா உதரத்து,
ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்;

ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்;
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்;
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்;
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்;

அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்;
ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்;
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்;
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்;

ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்;
தக்க தசமதி, தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்;

பிறந்தபின் உள்ள இடர்

ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும், இருத்தியும், எனைப்பல பிழைத்தும்;
காலை மலமொடு, கடும்பகல், பசி,நிசி–
வேலை நித்திரை, யாத்திரை, பிழைத்தும்;

கருங்குழல், செவ்வாய்; வெண்ணகைக்; கார்மயில்
ஒருங்கிய சாயல்; நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து, கதிர்த்து, முன்பணைத்து,
எய்த்திடை வருந்த எழுந்து, புடைபரந்து,

ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்;
பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்;

கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்;
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்;
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்;
புல்வரம் பாய பலதுறைப் பிழைத்தும்;

மெய்ப்பொருள் காணத் தடையாக உள்ளவை

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி,
முனிவு இலாததோர் பொருளது கருதலும்,
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின;

ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி, நாத்தழும்பு ஏறினர்;
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர்; பெருகவும்

விரதமே பரம் ஆக, வேதியரும்,
சரதம் ஆகவே, சாத்திரம் காட்டினர்;
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவது ஆக, அரற்றி, மலைந்தனர்

மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித்து, ஆஅர்த்து,
உலோகாயதன் எனும் ஒண்டிறல் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி,
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்,

ஞானாசிரியனை உறுதியாகப் பற்றல்

தப்பாமே, தாம் பிடித்தது சலியாத்,
தழலது கண்ட மெழுகது போலத்,
தொழுது,உளம் உருகி, அழுது,உடல் கம்பித்து,
ஆடியும், அலறியும், பாடியும், பரவியும்,
‘கொடிறும், பேதையும் கொண்டது விடாது’எனும்

படியே ஆகி,நல் இடையறா அன்பின்,
பசுமரத்து ஆணி அறைந்தாற் போலக்,
கசிவது பெருகிக், கடலென மறுகி,

அகங்குழைந்து, அனுகுலமாய், மெய் விதிர்த்துச்,
சகம்பேய், என்று தம்மைச் சிரிப்ப,
நாணது ஒழிந்து, நாடவர் பழித்துரை
பூணது வாகக், கோணுதல் இன்றிச்,

சதுரிழந்து, அறிமால் கொண்டு, சாரும்
கதியது பரம அதிசய மாகக்,

கற்றா மனமெனக் கதறியும், பதறியும்,
மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது,

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து,
குருபரன் ஆகி, அருளிய பெருமையைச்,
சிறுமையென்று இகழாதே, திருவடி இணையைப்,
பிறிவினை அறியா நிழலது போல,

முன்பின் ஆகி, முனியாது, அத்திசை
என்புநைந்து உருகி, நெக்கு–நெக்கு ஏங்கி,
அன்பெனும் ஆறு கரையது புரள,
நன்புலன் ஒன்றி 'நாத'என்று அரற்றி,

உரை தடுமாறி, உரோமம் சிலிர்ப்பக்,
கரமலர் மொட்டித்து, இருதயம் மலரக்,
கண்களி கூர, நுண்துளி அரும்பச்,
சாயா அன்பினை, நாள்தொறும் தழைப்பவர்
தாயே ஆகி, வளர்த்தனை போற்றி!

போற்றி வணங்குதல்

மெய்தரு வேதியன் ஆகி, வினைகெடக்,
கைதர வல்ல கடவுள், போற்றி!
ஆடக மதுரை அரசே, போற்றி!
கூடல் இலங்கு குருமணி, போற்றி!

தென்தில்லை மன்றினுள் ஆடி, போற்றி!
இன்றெனக்கு ஆரமுது ஆனாய், போற்றி!
மூவா நான்மறை முதல்வா, போற்றி!
சேவார் வெல்கொடிச் சிவனே, போற்றி!

மின்னார் உருவ விகிர்தா, போற்றி!
கல்நார் உரித்த கனியே, போற்றி!
காவாய், கனகக் குன்றே, போற்றி!
ஆ!ஆ! என்றனக்கு அருளாய், போற்றி!

படைப்பாய், காப்பாய், துடைப்பாய், போற்றி!
இடரைக் களையும் எந்தாய், போற்றி!
ஈச, போற்றி! இறைவ, போற்றி!
தேசப் பளிங்கின் திரளே, போற்றி!

அரைசே, போற்றி! அமுதே, போற்றி!
விரைசேர் சரண விகிர்தா, போற்றி!
வேதி, போற்றி! விமலா, போற்றி!
ஆதி, போற்றி! அறிவே, போற்றி!

கதியே, போற்றி! கனியே, போற்றி!
நதிசேர் செஞ்சடை நம்பா, போற்றி!
உடையாய், போற்றி! உணர்வே, போற்றி!
கடையேன் அடிமை கண்டாய், போற்றி!

ஐயா, போற்றி! அணுவே, போற்றி!
சைவா, போற்றி! தலைவா, போற்றி!
குறியே, போற்றி! குணமே, போற்றி!
நெறியே, போற்றி! நினைவே, போற்றி!

வானோர்க்கு அரிய மருந்தே, போற்றி!
ஏனோர்க்கு எளிய இறைவா, போற்றி!
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழாமே அருள் அரசே, போற்றி!

தோழா, போற்றி! துணைவா, போற்றி!
வாழ்வே, போற்றி! என்வைப்பே, போற்றி!
முத்தா, போற்றி! முதல்வா, போற்றி!
அத்தா, போற்றி! அரனே, போற்றி!

உரை,உணர்வு, இறந்த ஒருவ, போற்றி!
விரிகடல் உலகின் விளைவே, போற்றி!
அருமையில் எளிய அழகே, போற்றி!
கருமுகில் ஆகிய கண்ணே, போற்றி!

மன்னிய திருவருள் மலையே, போற்றி!
என்னையும் ஒருவன் ஆக்கி, இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக, போற்றி!
தொழுதகை துன்பம் துடைப்பாய், போற்றி!
அழிவிலா ஆனந்த வாரி, போற்றி!

அழிவதும், ஆவதும், கடந்தாய், போற்றி!
முழுவதும் இறந்த முதல்வா, போற்றி!
மானேர் நோக்கி மணாளா, போற்றி!
வானகத்து அமரர் தாயே, போற்றி!

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய், போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய், போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய், போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய், போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய், போற்றி!
அளிபவர் உள்ளத்து அமுதே, போற்றி!

கனவிலும் தேவர்க்கு அரியாய், போற்றி!
நனவிலும் நாயேற்கு அருளினை, போற்றி!
இடைமருது உறையும் எந்தாய், போற்றி!
சடையிடைக் கங்கை தரித்தாய், போற்றி!

ஆரூர் அமர்ந்த அரசே, போற்றி!
சீரார் திருவை யாறா, போற்றி!
அண்ணா மலையெம் அண்ணா, போற்றி!
கண்ணார் அமுதக் கடலே, போற்றி!

ஏகம்பத்து உறை எந்தாய், போற்றி!
பாகம் பெண்ணுரு ஆனாய், போற்றி!
பராய்த்துறை மேவிய பரனே, போற்றி!
சிராப்பள்ளி மேவிய சிவனே, போற்றி!

மற்றோர் பற்றிங்கு அறியேன், போற்றி!

குற்றாலத்து எம் கூத்தா, போற்றி!
கோகழி மேவிய கோவே, போற்றி!
ஈங்கோய் மலையெம் எந்தாய், போற்றி!
பாங்கார் பழனத்து அழகா, போற்றி!

கடம்பூர் மேவிய விடங்கா, போற்றி!
அடைந்தவர்க்கு அருளும் அப்பா, போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே, போற்றி!

தென்னா டுடைய சிவனே, போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா, போற்றி!
ஏனக் குருளைக்கு அருளினை, போற்றி!
மானக் கயிலை மலையாய், போற்றி!

அருளிட வேண்டும் அம்மான், போற்றி!
இருள்கெட அருளும் இறைவா, போற்றி!
தளர்ந்தேன், அடியேன், தமியேன், போற்றி!
களங்கொளக் கருத அருளாய், போற்றி!

'அஞ்சேல்' என்றிங்கு அருளாய், போற்றி!
நஞ்சே அமுதா நயந்தாய், போற்றி!
அத்தா, போற்றி! ஐயா, போற்றி!
நித்தா, போற்றி! நிமலா, போற்றி!
பத்தா, போற்றி! பவனே, போற்றி!

பெரியாய், போற்றி! பிரானே, போற்றி!
அரியாய், போற்றி! அமலா, போற்றி!
மறையோர் கோல நெறியே, போற்றி!
முறையோ? தரியேன்! முதல்வா, போற்றி!

உறவே, போற்றி! உயிரே, போற்றி!
சிறவே, போற்றி! சிவமே, போற்றி!
மஞ்சா, போற்றி! மணாளா, போற்றி!
பஞ்சேர் அடியாள் பங்கா, போற்றி!

அலந்தேன், நாயேன், அடியேன், போற்றி!
இலங்கு சுடரெம் ஈசா, போற்றி!
கவைத்தலை மேவிய கண்ணே, போற்றி
குவைப்பதி மலிந்த கோவே, போற்றி!

மலைநாடு உடைய மன்னே, போற்றி!
கலையார் அரிகே சரியாய், போற்றி!
திருக்கழுக் குன்றில் செல்வா, போற்றி!
பொருப்பமர் பூவணத்து அரனே, போற்றி!

அருவமும், உருவமும் ஆனாய், போற்றி!
மருவிய கருணை மலையே, போற்றி!
துரியமும் இறந்த சுடரே, போற்றி!
தெரிவரிது ஆகிய தெளிவே, போற்றி!

தோளா முத்தச் சுடரே, போற்றி!
ஆளா னவர்கட்கு அன்பா, போற்றி!
ஆரா அமுதே, அருளே, போற்றி!
பேரா யிரமுடைப் பெம்மான், போற்றி!

தாளி அறுகின் தாராய், போற்றி!
நீளொளி ஆகிய நிருத்தா, போற்றி!
சந்தனச் சாந்தின் சுந்தர, போற்றி!
சிந்தனைக்கு அரிய சிவமே, போற்றி!

மந்தர மாமலை மேயாய், போற்றி!
எந்தமை உய்யக் கொள்வாய், போற்றி!
புலிமுலை புல்வாய்க்கு அருளினை, போற்றி!
அலைகடல் மீமிசை நடந்தாய், போற்றி!

கருங்குரு விக்கன்று அருளினை, போற்றி!
இரும்புலன் புலர இசைந்தனை, போற்றி!
படியுறப் பயின்ற பாவக, போற்றி!
அடியொடு, நடு,ஈறு, ஆனாய், போற்றி!

நரகொடு, சுவர்க்கம், நானிலம், புகாமற்,
பரகதி பாண்டியற்கு அருளினை, போற்றி!
ஒழிவற நிறைந்த ஒருவ, போற்றி!
செழுமலர்ச் சிவபுரத்து அரசே, போற்றி!

கழுநீர் மாலைக் கடவுள், போற்றி!
தொழுவார் மையல் துணிப்பாய், போற்றி!
பிழைப்பு, வாய்ப்பு,ஒன்று அறியா நாயேன்
குழைத்த சொல்மாலை கொண்டருள், போற்றி!

புரம்பல எரித்த புராண, போற்றி!
பரம் பரஞ்சோதிப் பரனே, போற்றி!
போற்றி! போற்றி! புயங்கப் பெருமான்!
போற்றி! போற்றி! புராண காரண!
போற்றி! போற்றி! சய,சய, போற்றி!

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு கயிலைநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



5. திருச்சதகம்

திருப்பெருந்துறையில் அருளியது

பத்தி வைராக்கிய விசித்திரம் : ஆன்ம அனுபவங்களைப் படிப்படியாகக் கூறுதல்

திருச்சிற்றம்பலம்

1. மெய்யுணர்தல்

(கட்டளைக் கலித்துறை)

என் செயலும், சிந்தையும், சொல்லும் உனக்கே ஏற்றருள்க

மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்து, உன்விரையார் கழற்கு,என்
கைதான் தலைவைத்துக், கண்ணீர்ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்தான்தவிர்ந்து, உன்னைப்,'போற்றி, சய,சய,போற்றி!' என்னும்
கைதான் நெகிழவிடேன்; உடையாய்! என்னைக் கண்டுகொள்ளே. 1

வேறு தெய்வத்தை எண்ணேன்

கொள்ளேன் புரந்தரன், மால்,அயன் வாழ்வு; குடிகெடினும்,
நள்ளேன் நினதுஅடி யாரொடு அல்லால்; நரகம்புகினும்,
எள்ளேன் திருவரு ளாலேஇருக்கப் பெறின்; இறைவா!
உள்ளேன் பிறதெய்வம், உன்னையல்லாது; எங்கள் உத்தமனே! 2

உனக்கே பித்தாகி ஒழிவது என்றோ?

உத்தமன், அத்தன், உடையான் அடியே நினைந்துருகி,
மத்த மனத்தொடு 'மால்இவன்' என்ன, மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட, ஊரூர் திரிந்து,எவரும்
தத்தம் மனத்தன பேச,எஞ்ஞான்று கொல் சாவதுவே? 3

எம்பிரானும் ஏனைய தெய்வமும் ஒன்றாகுமோ?

சாவ,முன்னாள் தக்கன் வேள்வித் தகர்த்தின்று, நஞ்சமஞ்சி,
'ஆவ!எந்தாய்! ' என்று அவிதா இடும்நம் மவரவரே,
மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு, மண்மேல்
தேவரென்றே இறுமாந்து, என்ன பாவம் திரிதவரே! 4

எனினும் தகுதியில்லேன் ஏற்றருள்க

தவமே புரிந்திலன்; தண்மலர்இட்டு முட்டாது இறைஞ்சேன்;
அவமே பிறந்த அருவினையேன், உனக்கு அன்பருள்ளாம்
சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்; நின்திருவடிக்கு, ஆம்
பவமே அருளுகண்டாய்! அடியேற்கு; எம் பரம்பரனே! 5

நிலைத்த அன்பு அருளுக

பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட்டாது, அடியே இறைஞ்சி,
'இரந்தஎல்லாம் எமக்கே பெறலாம்' என்னும் அன்பருள்ளம்
கரந்துநில்லாக் கள்வனே! நின்றன் வார்கழற்கு அன்பு,எனக்கும்
நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே. 6

அரியவன் எளியவனே

முழுவதும் கண்டவனைப் படைத்தான், முடிசாய்த்து, முன்னாள்,
செழுமலர் கொண்டெங்கும் தேட,அப்பாலன்; இப்பால், எம்பிரான்,
கழுதொடு காட்டிடை நாடகம் ஆடிக், கதியிலியாய்,
உழுவையின் தோலுடுத்து, உன்மத்தம் மேல்கொண்டு உழிதருமே. 7

கடையூழியில் காப்பவன்

உழிதரு காலும், கனலும், புனலொடு, மண்ணும்,விண்ணும்
இழிதரு காலம், எக்காலம் வருவது? வந்ததற்பின்,
உழிதரு காலத்த! உன்னடியேன் செய்த வல்வினையைக்
கழி,தரு காலமுமாய் அவைகாத்து, எம்மைக் காப்பவனே! 8

சிறுமைக்கும் ஒரு பெருமை

பவன், எம்பிரான், பனிமாமதிக் கண்ணி விண்ணோர்பெருமான்,
சிவன், எம்பிரான், என்னை ஆண்டுகொண்டான் என்சிறுமைகண்டும்
அவன் எம்பிரான்என்ன, நான் அடியேன்என்ன, இப்பரிசே,
புவன், எம்பிரான், தெரியும் பரிசாவது இயம்புகவே. 9

ஒரு வியப்பு

புகவே தகேன் உனக்கன்பருள், யான்;என் பொல்லாமணியே!
தகவே எனை உனக்காட்கொண்ட தன்மை? எப்புன்மையரை
மிகவே உயர்த்தி, விண்ணோரைப் பணித்தி; அண்ணா!அமுதே!
நகவே தகும் எம்பிரான் ! என்னைநீ செய்த நாடகமே. 10

உ. அறிவுறுத்தல்

(தரவு கொச்சகக் கலிப்பா)

இடையறா அன்பு அருளுக

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து, நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான், மிகப்பெரிதும் விரைகின்றேன்;
ஆடகச்சீர் மணிக்குன்றே! இடையறா அன்புனக்குஎன்
ஊடகத்தே நின்று,உருகத் தந்தருள்;எம் உடையானே! 11

அருள்பெரும் நாள் என்று?

யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக்கு என்கடவேன்?
வானேயும் பெறில்வேண்டேன்; மண்ணாள்வான் மதித்துமிரேன்;
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே!எம்பெருமான்! எம்
மானே! ‘உன்அருள்பெறுநாள் என்று?’என்றே, வருந்துவனே. 12

பாடின்றிப் பயன் வேண்டுகிறேன்

வருந்துவன்,நின் மலர்ப்பாதம் அவைகாண்பான்; நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன்; ஏத்தேன்;நாத் தழும்பேறப்;
பொருந்தியபொற் சிலைகுனித்தாய்! அருளமுதம் புரியாயேல்,
வருந்துவன்அத் தமியேன்; மற்றென்னே நான்ஆமாறே? 13

அகம் குழையாது அழிகின்றேன்

ஆமாறு,உன் திருவடிக்கே அகங்குழையேன்; அன்புருகேன்;
பூமாலை புனைந்தேத்தேன்; புகழ்ந்துரையேன்; புத்தேளிர்
கோமான்!நின் திருக்கோயில் தூகேன்,மெழுகேன், கூத்தாடேன்,
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே! 14

எல்லாம் நீயே: வாழ்த்துவது எப்படி ?

வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி,
ஊனாகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையுமாய்க்,
கோனாகி, ‘யான்,எனது’என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை, என்சொல்லி வாழ்த்துவனே! 15

பயன் கருதாது பணிவார் யார்?

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்; மனம்நின்பால்
தாழ்த்துவதும், தாம்உயர்ந்து, தம்மைஎல்லாம் தொழவேண்டிச்;
சூழ்த்தமது கரமுரலும் தாரோயை, நாயடியேன்,
பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான், யானும்உன்னைப் பரவுவனே. 16

காண்பவர் யார்?

பரவுவார் இமையோர்கள்; பாடுவன நால்வேதம்;
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள், ஒருபாகம்;
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள், மேன்மேல்;உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ, அரியானே? 17

நன்றியில்லேன்

அரியானே யாவர்க்கும்! அம்பரவா! அம்பலத்தெம்
பெரியானே! சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன்; வியந்தலறேன்; நயந்துருகேன்;
தரியேன்;நான் ஆமாறென்? சாவேன்;நான் சாவேனே! 18

சிற்றின்பத்துக்கு உருகிப் பேரின்பத்தை விடுவதா?

வேனில்வேள் மலர்க்கணைக்கும், வெண்ணகைச்,செவ் வாய்க்,கரிய
பானலார் கண்ணியர்க்கும், பதைத்துருகும் பாழ்நெஞ்சே!
ஊனெலாம் நின்றுருகப், புகுந்தாண்டான்; இன்றுபோய்
வானுளான்; காணாய்;நீ, மாளாவாழ் கின்றாயே. 19

அவலக்கடலில் வீழாதே

வாழ்கின்றாய்; வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய்; ஆழாமல் காப்பானை ஏத்தாதே,
சூழ்கின்றாய் கேடுனக்குச்; சொல்கின்றேன், பல்காலும்;
வீழ்கின்றாய் நீ,அவலக் கடலாய வெள்ளத்தே. 20

3. சுட்டறுத்தல்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

கல்நெஞ்சம்

வெள்ளந்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர்
பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில், கீழ்மே லாகப்,
பதைத்துருகும் அவர்நிற்க, என்னை ஆண்டாய்க்கு,
உள்ளந்தாள் நின்றுச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால், உடம்பெல்லாம் கண்ணாய், அண்ணா!
வெள்ளந்தான் பாயாதால், நெஞ்சம் கல்லாம்;
கண்இ ணையும் மரமாம்தீ வினையி னேற்கே. 21

நான் இவ்வாறு ஆகலாமோ?

வினையிலே கிடந்தேனைப், புகுந்து நின்று,
போது,'நான் வினைக்கேடன் ' என்பாய் போல,
'இனையன்நான் ' என்றுன்னை அறிவித்து, என்னை
ஆட்கொண்டு,எம் பிரான்ஆனாய்க்கு, இரும்பின் பாவை
அனையநான், பாடேன்; நின்றாடேன்; அந்தோ!
அலறிடேன்; உலறிடேன்; ஆவி சோரேன்;
முனைவனே! முறையோ,நான் ஆன வாறு?
முடிவுஅறியேன்; முதல்,அந்தம், ஆயி னானே. 22

அணுகும்முன் அருள் செய்தாயே!

ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்து, யான் யாவரினுங் கடையன்னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு,
நாதனே! 'நானுனக்கோர் அன்பன் என்பேன் '
ஆயினேன்; ஆதலால், ஆண்டு கொண்டாய்;
அடியார்தாம் இல்லையே? அன்றி மற்றோர்
பேயனேன்? இதுதான்நின் பெருமை அன்றே!
எம்பெருமான்! என்சொல்லிப் பேசு கேனே? 23

தலையாயவர் நிற்கக் கடையேனை ஆண்டாய்

பேசில்,தாம் ' ஈசனே, எந்தாய், எந்தை
பெருமானே!' என்றென்றே பேசிப் பேசிப்;
பூசில்,தாம் திருநீறே நிறையப் பூசிப்;
போற்றியெம் பெருமானே! என்று; பின்றா
நேசத்தால் பிறப்பிறப்பைக் கடந்தார்– தம்மை
ஆண்டானே! அவாவெள்ளக் கள்வ னேனை,
மாசற்ற மணிக்குன்றே! எந்தாய்! அந்தோ!
என்னை,நீ ஆட்கொண்ட வண்ணந் தானே? 24

இமையவர்க்கு அரியவன்: எளியனை ஆண்டான்

வண்ணந்தான், சேயதன்று; வெளிதே அன்று;
அநேகன்;ஏகன்; அணு;அணுவில் இறந்தாய்;என் றங்கு
எண்ணந்தான் தடுமாறி, இமையோர் கூட்டம்
எய்துமாறு அறியாத எந்தாய்! உன்றன்
வண்ணந்தான் அதுகாட்டி, வடிவு காட்டி,
மலர்க்கழல்கள் அவைகாட்டி, வழிஅற் றேனைத்,
திண்ணந்தான் பிறவாமல் காத்துஆட் கொண்டாய்;
எம்பெருமான்! என்சொல்லிச் சிந்திக் கேனே? 25

ஆட்கொண்ட அமுதக்கடல்

சிந்தனைநின் தனக்காக்கி, நாயினேன் தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி,
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு,உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர
வந்து,எனைஆட் கொண்டு,உள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனை;செந் தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டுமிலித் தனிய னேற்கே. 26

கடலில் ஆழாமல் கரை காட்டினான்

தனியனேன், பெரும்பிறவிப் பௌவத்து, எவ்வத்
தடந்திரையால், எற்றுண்டு, பற்றொன்று இன்றிக்,
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு, காமவான் சுறவின் வாய்ப்பட்டு,

‘ இனி,என்னே உய்யுமாறு? ’ என்றென்று எண்ணி,
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை,
முனைவனே! முதல்,அந்தம், இல்லா மல்லல்
கரைகாட்டி, ஆட்கொண்டாய், மூர்க்க னேற்கே. 27

புலனாகாதன எல்லாம் புலப்படுத்தினான்

கேட்டாரும் அறியாதான்; கேடொன்று இல்லான்;
கிளையிலான்; கேளாதே எல்லாம் கேட்டான்;
நாட்டார்கள் விழித்திருப்ப, ஞாலத்து உள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு, நாயி னேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப், பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து, என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து,ஆட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே! 28

அச்சம் தீர்த்தான்

விச்சைதான் இதுவொப்பது உண்டோ? கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடியன் ஆக்கி,
அச்சம்தீர்த்து ஆட்கொண்டான்; அமுதம் ஊறி,
அகம்நெகவே புகுந்து,ஆண்டான், அன்பு கூர;
அச்சன்,ஆண், பெண்,அலி,ஆ காசம் ஆகி,
ஆரழலாய், அந்தமாய், அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி, எங்கள்
சிவபெருமான், எம்பெருமான், தேவர் கோவே! 29

அருளால் விளைந்த பெருமிதம்

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்து,காத்து, அழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்; மூர்த்தி;
மூதாதை; மாதாளும் பாகத்து எந்தை;
யாவர்கோன்; என்னையும்வந் தாண்டு கொண்டான்;
யாமார்க்கும் குடியல்லோம்; யாதும் அஞ்சோம்;
மேவினோம் அவன் அடியார் அடியாரோடும்;
மேன்மேலும் குடைந்துஆடி, ஆடு வோமே. 30

4. ஆத்துமசுத்தி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மடிந்த மனம்

ஆடு கின்றிலை; கூத்துடையான் கழற்கு அன்பிலை; என்புருகிப்
பாடு கின்றிலை; பதைப்பதும் செய்கிலை; பணிகிலை; பாதமலர்
சூடு கின்றிலை; சூட்டுகின்றதும்இலை! துணையிலி பிண நெஞ்சே!
தேடு கின்றிலை; தெருவுதோறு அலறிலை; செய்வதொன்று அறியேனே. 31

மாறுபட்ட மனம்

அறிவிலாத எனைப், புகுந்து ஆண்டுகொண்டு அறிவதை அருளி,மேல்
நெறியெலாம்புல மாக்கிய எந்தையைப், பந்தனை அறுப் பானைப்,
பிறிவி லாதஇன் னருள்கள் பெற்றிருந்தும் மாறாடுதி;பிண நெஞ்சே!
கிறியெலாம் மிகக், கீழ்ப்படுத்தாய்; கெடுத்தாய் என்னைக் கெடுமாறே 32

நம்பத்தகாத மனம்

மாறி நின்றுஎனைக் கெடக்கிடந் தனையை,எம்மதியிலி மடநெஞ்சே!
தேறு கின்றிலம் இனியுனைச்சிக்கெனச் சிவனவன் திரள்தோள் மேல்
நீறு நின்றது கண்டனை; ஆயினும், நெக்கிலை; இக்காயம்
கீறு கின்றிலை; கெடுவதுன் பரிசிது; கேட்கவுங் கில்லேனே. 33

ஓய்வற்ற மனம்

கிற்றவா மனமே! கெடுவாய்; உடையான் அடிநா யேனை
விற்றெலாம் மிக ஆள்வதற்கு உரியவன் விரைமலர்த் திருப்பாதம்
முற்றிலா இளந்தளிர் பிரிந்து இருந்து,நீ உண்டன எல்லாம்முன்
அற்ற வாறும்,நின் னறிவும்,நின் பெருமையும் அளவறுக் கில்லேனே. 34

கருணைக்கு கசியா மனம்

அளவறுப் பதற்கு அரியவன், இமையவர்க்கு; அடியவர்க்கு எளியான்; நம்
களவறுத்து நின்று ஆண்டமை, கருத்தினுட் கசிந்துணர்ந்து இருந்தேயும்,
உளகறுத்து, உனைநினைந்து, உளம்பெருங் களன்செய்ததும் இலை; நெஞ்சே!
பளகறுத்து உடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே. 35

புகுவ தாவதும், போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற்கு
உகுவ தாவதும், எந்தை,எம் பிரான்,என்னை ஆண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவதும், நித்தலும், அமுதொடு, தேனொடு, பால்,கட்டி,
மிகுவ தாவதும், இன்றெனின், மற்றிதற்கு என்செய்கேன்
வினையேனே? 36

பிரியாதவனைப் பிரிந்து வாழ்வதா?

வினைஎன் போல் உடையார் பிறர்ஆர்? உடையான்,அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பு அன்று;மற்று அதனாலே,
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்தும்,நான் முட்டிலேன்,
தலைகீறேன்;
இனையன் பாவனை, இரும்பு;கல், மனம்;செவி, இன்னதென்று
அறியேனே. 37

அவனை அணுகா உயிர் எதற்கு

ஏனை யாவரும் எய்திடல் உற்று,மற்று இன்னதென்று அறியாத
தேனை, ஆன்நெயைக், கரும்பின்இன் தேறலைச், சிவனை,என்
சிவலோகக்
கோனை, மான்அன நோக்கிதன் கூறனைக் குறுகிலேன்; நெடுங்காலம்,
ஊனை யான்இருந்து ஓம்புகின்றேன்; கெடுவேன் உயிர் ஓயாதே. 38

தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ?

ஓய்வி லாதன, உவமனில்இறந்தன, ஒண்மலர்த் தாள் தந்து,
நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும் என்னை,நன் நெறிகாட்டித்,
தாயில் ஆகிய இன்னருள் புரிந்த,என் தலைவனை நனிகாணேன்;
தீயில் வீழ்கிலேன்; திண்வரை உருள்கிலேன்; செழுங்கடல் புகுவேனே? 39

சிற்றின்ப வாழ்வுக்கு அடிமையானேன்

வேனில் வேள்கணை கிழித்திட, மதிசுடும் அதுதனை நினையாதே,
மான்நி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்,
தேன்நி லாவிய திருவருள் புரிந்த,என் சிவன்நகர் புகப்போகேன்;
ஊனில் ஆவியை ஓம்புதல் பொருட்டு,இனும் உண்டுடுத்து இருந்தேனே. 40

5. கைம்மாறுகொடுத்தல்

(கலி விருத்தம்)

' வருக ' என்றான்; என்செய்தேன்?

இருகை யானையை ஒத்திருந்து என்னுளக்
கருவை யான்கண்டிலேன்; கண்டது எவ்வமே;
'வருக' என்று பணித்தனை; வானுளோர்க்கு
ஒருவனே! கிற்றிலேன்! கிற்பன் உண்ணவே. 41

கண் மாயம்

'உண்டு ஓர் ஒண்பொருள்' என்று உணர்வார்க்கெலாம்
பெண்டிர், ஆண்,அலி, என்றறி ஒண்கிலை;
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்;
கண்டும் கண்டிலேன்; என்னகண் மாயமே! 42

என்று காண்பேன்?

மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே, எனை ஆட்கொண்ட கூத்தனே,
ஞாலமே, விசும்பே, இவை வந்துபோம்
காலமே! உனை என்றுகொல் காண்பதே? 43

முட்டைக்குள் குஞ்சு

காணலாம் பரமே, கட்கு இறந்ததோர்
வாணிலாப் பொருளே, இங்கு,ஓர் பார்ப்பெனப்,
பாணனேன்! படிற்று ஆக்கையை விட்டு,உனைப்
பூணுமாறு அறியேன் புலன் போற்றியே. 44

ஆற்றல் மிக்க அன்பு இல்லையே!

' போற்றி ' என்றும், புரண்டும், புகழ்ந்தும்நின்று,
ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்;
ஏற்றுவந் ததிர், தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதொர் கொள்கைஎன் கொள்கையே. 45

என்னையும் பணி கொள்ளுவானோ?

கொள்ளும் கில்எனை, அன்பரில் கூய்ப்பணி
கள்ளும், வண்டும், அறாமலர்க் கொன்றையான்;
நள்ளும், கீழுளும், மேலுளும், யாவுளும்,
எள்ளும் எண்ணெயும்போல், நின்ற எந்தையே? 46

எல்லாம் அவனே!

எந்தை,யாய், எம்பிரான்; மற்றும் யாவர்க்கும்
தந்தை,தாய், தம்பிரான்; தனக்கு அஃதிலான்;
முந்தி என்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலும் அறிவரும் செல்வனே. 47

கண்டும் கைவிட்டேன்!

செல்வம், நல்குரவு,இன்றி; விண்ணோர், புழுப்,
புல்,வரம்பு இன்றி; யார்க்கும் அரும்பொருள்
எல்லையில் கழல் கண்டும் பிரிந்தனன்;
கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே! 48

பெருமிதம்

கட்டறுத்து,எனை ஆண்டு, கண்ணார, நீறு
இட்ட அன்பரொடு, யாவரும், காணவே,
பட்டி மண்டபம் ஏற்றினை, ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறி யேனையே. 49

நான் அறிவனோ?

அறிவனே! அமுதே! அடி நாயினேன்
அறிவனாகக் கொண்டோ, எனை ஆண்டது?
அறிவிலாமை அன்றே கண்டது, ஆண்டநாள்?
அறிவனோ, அல்லனோ? அருள், ஈசனே! 50

6. அனுபோகசுத்தி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

ஆட்கொண்டவனை நினைக்கவில்லையே!

ஈச னே!என் எம்மானே! எந்தை பெருமான்! என்பிறவி–
நாச னே!நான் யாதுமொன்று அல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு, நினைக்க மாட்டேன் கண்டாயே;
தேச னே!அம் பலவனே! செய்வது ஒன்றும் அறியேனே. 51

உடலைப் பேணும் பொய்யன்

செய்வது அறியாச் சிறுநாயேன், செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்; பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டும், கேட்டிருந்தும்,
பொய்ய னேன்நான் உண்டு,உடுத்து,இங்கு இருப்ப தானேன்; போரேறே! 52

கண்கெட்ட ஏறாய் அலைவதா?

போரே றே!நின் பொன்னகர்வாய் நீபோந்து அருளி, இருள்நீக்கி,
வாரேறு இளமென் முலையாளோடு உடன்வந் தருள, அருள்பெற்ற
சீரேறு அடியார் நின்பாதம் சேரக் கண்டும், கண்கெட்ட
ஊரேறாய், இங்கு உழல்வேனோ? கொடியேன் உயிர்தான் உலவாதே! 53

அன்பிலாப் பாவி எதுகொண்டு உய்வேன்?

உலவாக் காலம் தவமெய்தி, உறுப்பும் வெறுத்து,இங்கு உனைக்காண்பான்,
பலமா முனிவர் நனிவாடப், பாவியேனைப் பணி கொண்டாய்;
மலமாக் குரம்பை இதுமாய்க்க மாட்டேன்; மணியே! உனைக்காண்பான்,
அலவா நிற்கும் அன்பிலேன்; என்கொண்டு எழுகேன், எம்மானே? 54

ஊன்கூடு காப்பதானேன்

மானேர் நோக்கி உமையாள் பங்கா! வந்து,இங்கு ஆட்கொண்ட
தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! சிவனே! தென்தில்லைக்
கோனே! உன்தன் திருக்குறிப்புக் கூடுவார் நின் கழல்கூட,
ஊனார் புழுக்கூடு இதுகாத்து,இங்கு இருப்ப தானேன்; உடையானே! 55

கசியா உள்ளத்தின் கதி இதுதானே!

உடையானே!நின் தனை உள்கி, உள்ளம் உருகும், பெருங்காதல்
உடையார், உடையாய்! நின்பாதம் சேரக் கண்டு,இங்கு ஊர்நாயின்
கடையா னேன்,நெஞ்சு உருகாதேன், கல்லா மனத்தேன், கசியாதேன்,
முடையார் புழுக்கூடு இதுகாத்து,இங்கு இருப்ப தாக முடித்தாயே. 56

சிறுநினைவு கேடாய் முடிந்தது

முடித்த வாறும், என்றனக்கே தக்கதே; முன், அடியாரைப்
பிடித்த வாறும், சோராமல் சோரனேன்இங்கு, ஒருத்தி வாய்
துடித்த வாறும், துகிலிறையே சோர்ந்த வாறும், முகங்குறுவேர்
பொடித்த வாறும், இவையுணர்ந்து, கேடுஎன் தனக்கே சூழ்ந்தேனே. 57

நான் 'ஒரு அடியான் ' என்றால் நகைதான்

தேனைப், பாலைக், கன்னலின் தெளிவை, ஒளியைத், தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை, உம்பரானை, வம்ப னேன்,
'நான்நின் அடியேன்; நீஎன்னை ஆண்டாய்,' என்றால், அடியேற்குத்,
தானும் சிரித்தே அருளலாம் தன்மையாம், என் தன்மையே. 58

புகலிடம் ஏது?

தன்மை பிறரால் அறியாத தலைவா! பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டு,ஐயா! புறமே போக விடுவாயோ?
என்னை நோக்கு வார்யாரே? என்நான் செய்கேன்? எம்பெருமான்!
பொன்னே திகழும் திருமேனி எந்தாய்! எங்குப் புகுவேனே? 59

அன்பிலேன் எனினும் அருளுக

புகுவேன், எனதே நின்பாதம்; போற்றும் அடியார் உள்நின்று
நகுவேன், பண்டு தோள்நோக்கி, நாணம் இல்லா நாயினேன்
நெகுமன் பில்லை, நினைக்காண; நீஆண்டு அருள, அடியேனும்
தகுவனே? என் தன்மையே! எந்தாய், அந்தோ! தரியேனே! 60

7. காருணியத்திரங்கல்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

உடல் தாங்கேன்

தரிக்கிலேன் காய வாழ்க்கை; சங்கரா, போற்றி! வான
விருத்தனே, போற்றி! எங்கள் விடலையே, போற்றி! ஒப்பில்
ஒருத்தனே, போற்றி! உம்பர் தம்பிரான், போற்றி! தில்லை
நிருத்தனே, போற்றி! எங்கள் நின்மலா, போற்றி! போற்றி! 61

புறம் போக்காதே

போற்றியோ, நமச்சி வாய! புயங்கனே, மயங்கு கின்றேன்;
போற்றியோ, நமச்சி வாய! புகலிடம் பிறிதொன் றில்லை;
போற்றியோ, நமச்சி வாய! புறம்எனைப் போக்கல் கண்டாய்;
போற்றியோ, நமச்சி வாய! சய!சய! போற்றி! போற்றி! 62

வள்ளலுக்கு பொய்யர் விலக்காகுமோ?

போற்றி!என் போலும் பொய்யர் தம்மை ஆட்கொள்ளும் வள்ளல்;
போற்றி!நின் பாதம் போற்றி! நாதனே, போற்றி! போற்றி!
போற்றி!நின் கருணை வெள்ளப் புதுமதுப்; புவனம், நீர்,தீக்,
காற்று,இய மானன், வானம், இருசுடர்க், கடவு ளானே! 63

விரைவில் அருளுக

கடவுளே போற்றி! என்னைக் கண்டுகொண்டு, அருளு, போற்றி!
விடவுளே உருக்கி என்னை ஆண்டிட வேண்டும், போற்றி!
உடலிது களைந்திட்டு, ஒல்லை உம்பர்தந்து அருளு, போற்றி!
சடையுளே கங்கை வைத்த சங்கரா, போற்றி! போற்றி! 64

இங்கு வாழமாட்டேன்

சங்கரா, போற்றி! மற்றோர் சரணிலேன்; போற்றி! கோலப்
பொங்கரா அல்குல், செவ்வாய், வெண்ணகைக், கரிய வாட்கண்,
மங்கையோர் பங்க, போற்றி! மால்விடை ஊர்தி, போற்றி!
இங்கு,இவ் வாழ்வாற்ற கில்லேன்; எம்பிரான்! இழித்திட் டேனே. 65

பிழைத்தவை பொறுத்தருள்க

இழித்தனன் என்னை யானே; எம்பிரான், போற்றி! போற்றி!
பழித்திலேன் உன்னை; என்னை ஆளுடைப் பாதம் போற்றி!
பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை; போற்றி!
ஒழித்திடு இவ்வாழ்வு; போற்றி! உம்பர்நாட்டு எம் பிரானே! 66

திருச்சிற்றம்பலவன் என்னை ஆளுடையான்

எம்பிரான், போற்றி! வானத் தவரவர் ஏறு, போற்றி!
கொம்பரார் மருங்குல் மங்கை கூற,வெண் ணீற, போற்றி!
செம்பிரான், போற்றி! தில்லைத் திருச்சிற்றம் பலவ, போற்றி!
உம்பரா, போற்றி! என்னை ஆளுடை ஒருவ, போற்றி! 67

திருவடி அருளுக

ஒருவனே, போற்றி! ஒப்பில் அப்பனே, போற்றி! வானோர்
குருவனே, போற்றி! எங்கள் கோமளக் கொழுந்து, போற்றி!
'வருக'என்று, என்னை நின்பால் வாங்கிட வேண்டும், போற்றி!
தருகநின் பாதம் போற்றி! தமியனேன் தனிமை தீர்த்தே. 68

அன்பருக்கு அன்பன்

தீர்ந்தஅன் பாய அன்பர்க்கு அவரினும் அன்ப, போற்றி!
பேர்ந்தும்,என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை, போற்றி!
வார்ந்தநஞ்சு அயின்று, வானோர்க்கு அமுதம்ஈ வள்ளல், போற்றி!
ஆர்ந்தநின் பாதம், நாயேற்கு அருளிட வேண்டும், போற்றி! 69

எல்லாம் அவனே

போற்றி!இப் புவனம், நீர்,தீக், காலொடு, வானம் ஆனாய்;
போற்றி!எவ் உயிர்க்கும் தோற்றம் ஆகி,நீ, தோற்றம் இல்லாய்;
போற்றி!எல் லா உயிர்க்கும் ஈறாய், ஈறின்மை யானாய்;
போற்றி!ஐம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கை யானே. 70

8. ஆனந்தத்தழுந்தல்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

ஆனந்தம்

புணர்ப்பது ஒக்க, எந்தை! என்னை ஆண்டு, பூண நோக்கினாய்;
புணர்ப்ப தன்று இதென்ற போது, நின்னொடு என்னொடு,என்னிதாம்?
புணர்ப்ப தாக, அன்றிதாக, அன்பு நின் கழற் கணே
புணர்ப்ப தாக, அங்க ணாள, புங்க மான போகமே! 71

திருவடியல்லாது துணையில்லை

போகம் வேண்டி, வேண் டிலேன் புரந்த ராதி இன்பமும்;
ஏக!நின் கழல் இணை யலா திலேன், என் எம்பிரான்;
ஆகம் விண்டு, கம்பம் வந்து குஞ்சி அஞ்சலிக் கணே
ஆக, என்கை; கண்கள் தாரை ஆற தாக; ஐயனே! 72

மெய்யன்பு வேண்டும்

ஐய! நின்னது அல்ல தில்லை, மற்றொர் பற்று, வஞ்சனேன்;
பொய் கலந்த தல்ல தில்லை, பொய்ம்மையேன், என் எம்பிரான்,
மை கலந்த கண்ணி பங்க, வந்து நின் கழற்கணே
மெய் கலந்த அன்பர் அன்பு, எனக்கும் ஆக வேண்டுமே. 73

எப்பிறவியிலும் உன்னையே வணங்க வேண்டும்

வேண்டும், நின் கழற்கண் அன்பு; பொய்ம்மை தீர்த்து, மெய்ம்மையே
ஆண்டு கொண்டு, நாயினேனை, 'ஆவ' என்று அருளு, நீ;
பூண்டு கொண்டு, அடிய னேனும் 'போற்றி!போற்றி!' என்றும், என்றும்
மாண்டு மாண்டு, வந்து வந்து, மன்ன! நின் வணங்கவே. 74

நீயே மெய்ப்பொருள்

வணங்கும் நின்னை, மண்ணும், விண்ணும்; வேதம் நான்கும் ஓலமிட்டு
உணங்கு, நின்னை எய்தல் உற்று, மற்றோர் உண்மை இன்மையின்;
வணங்கி, யாம் விடேங்கள் என்ன, வந்து நின்று அருளுதற்கு
இணங்கு கொங்கை மங்கை பங்க! என் கொலோ நினைப்பதே? 75

ஐம்புலன்களுக்கு அப்பாலுள்ளவன்

நினைப் பதாக சிந்தை செல்லும் எல்லை, ஏய வாக்கினால்
தினைத் தனையும் ஆவ தில்லை சொல்லல்; ஆவ கேட்பவே
அனைத் துலகும்; ஆய நின்னை ஐம் புலன்கள் காண்கிலா;
எனைத்து, எனைத்து அது,எப் புறத்தது எந்தை பாதம் எய்தவே? 76

பாவியேனுக்கு இரங்கு

எய்த லாவது என்று நின்னை, எம்பிரான்? இவ் வஞ்சனேற்கு
உய்த லாவது உன்கண் அன்றி, மற்றொர் உண்மை இன்மையின்,
பைத லாவது என்று பாது காத்துஇரங்கு; பாவி யேற்கு
ஈத லாது, நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை; ஈசனே! 77

நீ அல்லது இல்லை

ஈசனே! நீ அல்லது இல்லை இங்கும் அங்கும் என்பதும்,
பேசினேன் ஓர் பேத மின்மை பேதையேன் என் எம்பிரான்!
நீச னேனை ஆண்டு கொண்ட நின்மலா! ஓர் நின்னலால்,
தேசனே! ஓர் தேவர் உண்மை சிந்தி யாது, சிந்தையே. 78

முன்பு அறியாது இருந்தேன்

சிந்தை, செய்கை, கேள்வி, வா்க்குச், சீரில்ஐம் புலன் களால்
முந்தை யான காலம் நின்னை எய்திடாத மூர்க்க னேன்,
வெந்து, ஐயா! விழுந்திலேன்; என் உள்ளம் வெள்கி விண்டிலேன்;
எந்தை யாய நின்னை இன்னம் எய்த லுற்று, இருப்பனே. 79

கலந்தது பிரிந்தும் வாழ்வா?

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு கொண்ட நின்னதாள்
கருப்பு மட்டு வாய் மடுத்து, எனைக் கலந்து போகவும்,
நெருப்பும் உண்டு; யானும் உண்டு இருந்தது, உண்ட தாயினும்,
விருப்பும் உண்டு நின்கண் என்கண் என்பது, என்ன விச்சையே! 80

9. ஆனந்தப்பரவசம்

(கலிநிலைத் துறை)

பொய் வளரவோ என்னை வைத்தாய்?

விச்சுக் கேடு பொய்க்காகாது என்று, இங்கு எனைவைத்தாய்;
இச்சைக் கானார் எல்லாரும் வந்து,உன் தாள் சேர்ந்தார்;
அச்சத் தாலே, ஆழ்ந்திடு கின்றேன்; ஆரூர் எம்
பிச்சைத் தேவா, என்நான் செய்கேன்? பேசா யே. 81

ஏசப்பட்டேன் ; ஆட்பட்டேன்

பேசப் பட்டேன் நின் அடியாரில்; திரு நீறே
பூசப் பட்டேன்; பூதலரால், உன் அடியா னென்று,
ஏசப் பட்டேன்; இனிப்படு கின்றது அமையா தால்;
ஆசைப் பட்டேன்; ஆட்பட்டேன்; உன் அடியே னே. 82

ஆட்கொள்ள வில்லையோ?

அடியே னல்லேன் கொல்லோ?தான், எனை ஆட்கொண் டிலைகொல்லோ?
அடியா ரானார் எல்லாரும் வந்து,உன் தாள் சேர்ந்தார்;
செடிசே ருடலம் இது,நீக்க மாட்டேன்; எங்கள் சிவலோகா!
கடியே னுன்னைக், கண்ணாரக் காணுமாறு, காணே னே; 83

கண்டேன்; காணும் வழி காணேன்

காணு மாறு காணேன்; உன்னை அந்நாள் கண்டேனும்
பாணே பேசி, என்தன்னைப் படுத்த தென்ன? பரஞ்சோதி!
ஆணே, பெண்ணே, ஆரமுதே, அத்தா செத்தே போயினேன்
ஏண்நா ணில்லா நாயினேன், என்கொண் டெழுகேன், எம்மானே? 84

பொய்யால் புறம் போந்தேன்

மானேர் நோக்கி, உமையாள்பங்கா, மறைஈறு அறியா மறையோனே,
தேனே! அமுதே! சிந்தைக்கு அரியாய்! சிறியேன் பிழைபொறுக்கும்
கோனே! சிறிதே கொடுமை பறைந்தேன்; சிவமா நகர்குறுகப்
போனா ரடியார்; யானும், பொய்யும், புறமே போந்தோமே. 85

மெய்யன்பு பெற இயலாதோ?

புறமே போந்தோம் பொய்யும், யானும்; மெய் யன்பு
பெறவே வல்லேன், அல்லா வண்ணம் பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன்று அறியாதார்;
சிறவே செய்து வழிவந்து, சிவனே! நின்தாள் சேர்ந்தாரே. 86

மயல் கொண்டு அழுகின்றேன்

தாராய், உடையாய்! அடியேற்கு உன்தாள் இணை யன்பு;
பேரா உலகம் புக்காரடியார்; புறமே போந்தேன் யான்;
ஊரா மிலைக்கக், குருட்டா மிலைத்திங்கு, உன்தாள் இணைஅன்புக்கு
ஆரா அடியேன், அயலே மயல்கொண்டு அழுகே னே. 87

பழுதானேன்

அழுகேன், நின்பால் அன்பாம் மனமாய்; அழல் சேர்ந்த
மெழுகே அன்னார், மின்னார், பொன்னார் கழல் கண்டு
தொழுதே, உன்னைத் தொடர்ந்தா ரோடும் தொட ராதே,
பழுதே பிறந்தேன்; என்கொண்டு உன்னைப் பணிகே னே? 88

என் வினையைப் பொடியாக்கு

பணிவார் பிணிதீர்த்து அருளிப், பழைய அடியார்க்கு உன்
அணியார் பாதம் கொடுத்தி; அதுவும் அரிது என்றால்,
திணியார் மூங்கில் அனையேன், வினையைப் பொடி யாக்கித்,
தணியார் பாதம், வந்து,ஒல்லை தாராய்; பொய்தீர் மெய்யானே! 89

அழுதால் அடையலாம்

யானே பொய்;என் நெஞ்சும் பொய்; என் அன்பும்பொய்;
ஆனால், வினையேன் அழுதால், உன்னைப் பெற லாமே?
தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! தித் திக்கும்
மானே! அருளாய் அடியேன் உனைவந் துறுமா றே. 90

10. ஆனந்தாதீதம்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மெய் மெய்யே: கடையவன் கடையவனே

மாறிலாத மாக் கருணை வெள்ளமே!
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை,
வேறிலாப் பதப் பரிசுபெற்ற, நின்
மெய்ம்மை அன்பர்,உன் மெய்ம்மை மேவினார்;
ஈறிலாத நீ, எளியையாகி வந்து,
ஒளிசெய் மானுடம் ஆக, நோக்கியும்,
கீறிலாத நெஞ்சு உடைய நாயினேன்;
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே. 91

பொய்யில் என்னைப் புகவிடலாமா?

மையிலங்கு நல் கண்ணி பங்கனே!
வந்துஎனைப் பணி கொண்டபின், மழக்
கையிலங்கு பொற் கிண்ணம் என்றலால்,
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்;
மெய்யிலங்கு வெண் ணீற்று மேனியாய்,
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்;
பொய்யிலங்கு எனைப் புகுத விட்டு,நீ
போவதோ? சொலாய், பொருத்த மாவதே? 92

என் வினைக்கு ஒரு முடிவு இல்லையா?

பொருத்தம் இன்மையேன்; பொய்ம்மை உண்மையேன்
போத' என்றெனைப் புரிந்து நோக்கவும்,
வருத்தம் இன்மையேன்; வஞ்சம் உண்மையேன்;
மாண்டிலேன்; மலர்க் கமல பாதனே!
அரத்த மேனியாய்! அருள்செய் அன்பரும்,
நீயும், அங்கெழுந்து அருளி, இங்கெனை
இருத்தினாய்; முறையோ? என் எம்பிரான்,
வம்பனேன் வினைக்கு இறுதி யில்லையே? 93

இல்லை நின்கழற்கு அன்புஅது, என்கணே;
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே!
கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு,
என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்;
எல்லை இல்லைநின் கருணை; எம்பிரான்!
ஏது கொண்டு,நான் ஏது செய்யினும்,
வல்லையே எனக்கு இன்னும் உன்கழல்
காட்டி, மீட்கவும், மறுவில் வானனே? 94

ஞான நாடகம் ஆடுவித்தான்

வான நாடரும் அறியொணாத நீ,
மறையில் ஈறுமுன் தொடரொணாத நீ,
ஏனை நாடரும் தெரியொணாத நீ,
என்னை இன்னிதாய் ஆண்டுகொண்ட வா,
ஊனை நாடகம் ஆடுவித்த வா,
உருகி, நான்உனைப் பருகவைத்த வா,
ஞான நாடகம் ஆடுவித்த வா
நைய வையகத்து உடைய விச்சையே. 95

பிச்சன் ஆக்கினான்

விச்சது இன்றியே, விளைவு செய்குவாய்;
விண்ணும், மண்ணகம் முழுதும், யாவையும்
வைச்சு வாங்குவாய்; வஞ்சகப் பெரும்
புலையனேனை, உன் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய்; பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய்; தாம்வளர்த்தது, ஓர்
நச்சு மாமரம் ஆயினும், கொலார்;
நானும் அங்ஙனே உடைய நாதனே! 96

அடியன் ஆக்கினான்

உடைய நாதனே, போற்றி! நின்னலால்
பற்று, மற்றெனக்கு ஆவது ஒன்றினி
உடையனோ? பணி; போற்றி! உம்பரார்-
தம்பரா பரா போற்றி! யாரினும்

கடையன் ஆயினேன்; போற்றி! என்பெரும்
கருணை யாளனே, போற்றி! என்னை,நின்
அடியன் ஆக்கினாய்; போற்றி! ஆதியும்,
அந்தம் ஆயினாய், போற்றி! அப்பனே! 97

எய்ப்பில் வைப்பு

அப்பனே, எனக்கு அமுதனே, ஆ
னந்தனே, அகம் நெகஅள்ளூறு தேன்
ஒப்பனே, உனக்கு உரிய அன்பரில்
உரியனாய், உனைப் பருக நின்றதோர்
துப்பனே, சுடர் முடியனே, துணை
யாளனே, தொழும் பாளர் எய்ப்பினில்
வைப்பனே! எனை வைப்பதோ, சொலாய்
நைய, வையகத்து எங்கள் மன்னனே? 98

என்னை அழையாயோ?

'மன்ன' எம்பிரான், 'வருக' என்னெனை;
மாலும், நான்முகத்து ஒருவன், யாரினும்
முன்ன, எம்பிரான் 'வருக' என்னெனை;
முழுதும் யாவையும் இறுதி உற்றநாள்
பின்ன, எம்பிரான் 'வருக' என்னெனைப்
பெய்கழற் கண்அன்பாய், என் நாவினாற்
பன்ன எம்பிரான், 'வருக' என்னெனைப்
பாவ நாச;நின் சீர்கள் பாடவே. 99

உன்னைக் கூடவேண்டும்

பாடவேண்டும் நான் போற்றி! நின்னையே
பாடி,நைந்து நைந்து உருகி, நெக்குநெக்கு
ஆடவேண்டும் நான்; போற்றி! அம்பலத்து
ஆடு நின்கழல் போது, நாயினேன்
கூடவேண்டும் நான்; போற்றி! இப்புழுக்
கூடு நீக்கெனைப்; போற்றி! பொய்யெலாம்
வீடவேண்டும் நான்; போற்றி! வீடுதந்து
அருளு; போற்றி!நின் மெய்யர் மெய்யனே. 100

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் யோகாம்பாள் அம்மை உடனமர்
அருள்மிகு ஆத்மநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி

6. நீத்தல்விண்ணப்பம்

திருஉத்தரகோசமங்கையில் அருளியது பிரபஞ்ச வைராக்கியம்
தன்னைச் சிவபெருமான் கைவிட்டு விடக்கூடாது என்று முறையிடுதல்
(கட்டளைக் கலித்துறை)

திருச்சிற்றம்பலம்

தளர்ந்தேன் தாங்கிக்கொள்

கடையவ னேனைக் கருணையினால் கலந்து, ஆண்டுகொண்ட
விடையவ னே! விட்டிடுதிகண்டாய்? விறல் வேங்கையின் தோல்
உடையவ னே! மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
சடையவ னே! தளர்ந்தேன்; எம்பிரான்! என்னைத் தாங்கிக்கொள்ளே. 1

புறம் அல்லேன்

கொள்ளேர் பிளவகலாத்தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும், விடுதிகண்டாய்? நின் விழுத்தொழும்பின்
உள்ளேன்; புறமல்லேன்; உத்தர கோச மங்கைக்கரசே,
கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு ஆண்டதுஎக் காரணமே? 2

ஆற்றங்கரை மரம்

காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரை,மரமாய்
வேர் உறுவேனை விடுதிகண்டாய்? விளங்கும் திருவா
ஊருறைவாய், மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
வாருறு பூண்முலையாள் பங்க, என்னை வளர்ப்பவனே. 3

விலகி விளங்குகின்றேன்

வளர்கின்ற நின்கருணைக் கையில் வாங்கவும் நீங்கி,இப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய்? வெண்மதிக் கொழுந்தொன்று
ஒளிர்கின்ற நீள்முடி உத்தர கோச மங்கைக்கரசே,
தெளிகின்ற பொன்னும், மின்னும், அன்னதோற்றச் செழுஞ்சுடரே. 4

ஊட்டிய அமுதை மறுத்தேன்

செழிகின்ற தீப்புகு விட்டிலில், சின்மொழி யாரில்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்டாய்? வெறிவாய் அறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர கோச மங்கைக்கரசே,
வழிநின்று, நின் அருளார் அமுதூட்ட மறுத்தனனே. 5

மறுத்தவனை வெறுக்காதே

மறுத்தனன் யான்,உன் அருளறி யாமையின், என்மணியே;
வெறுத்தெனை நீ விட்டிடுதிகண்டாய்? வினையின் தொகுதி
ஒறுத்து,எனை ஆண்டுகொள்; உத்தர கோச மங்கைக்கரசே,
பொறுப்பர் அன்றே பெரியோர், சிறுநாய்கள்தம் பொய்யினையே? 6

என் குறையை மறைத்து ஆண்டான்

பொய்யவனேனைப் பொருளென ஆண்டு,ஒன்று பொத்திக் கொண்ட
மெய்யவனே, விட்டிடுதி கண்டாய்? விடம் உண்மிடற்று
மையவனே, மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
செய்யவனே, சிவனே, சிறியேன் பவம் தீர்ப்பவனே. 7

என் பிழையை ஒழிக்கின்ற வழி எது?

தீர்க்கின்ற வாறென் பிழையை ‘ நின்சீரருள் என்கொல்?’என்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண்டாய்? விரவார் வெருவ,
ஆர்க்கின்ற தார்விடை உத்தர கோச மங்கைக்கரசே,
ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம் வினையேனை இருதலையே. 8

இருதலைக் கொள்ளியுள் எறும்பு

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து, நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்டாய்? வியன் மூவுலகுக்கு
ஒருதலைவா, மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே. 9

அருள் பெற்றும் பிறவியை வீணாக்குகின்றேன்

பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்று, ஆக்கையைப் போக்கப்பெற்று,
மெலிகின்ற என்னை விடுதிகண்டாய்? அளி தேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோச மங்கைக்கரசே,
வலிநின்ற திண்சிலையால் எரித்தாய் புரம், மாறுபட்டே. 10

வேறுபட்டேனை விடாதே

மாறுபட்டு அஞ்சென்னை வஞ்சிப்ப, யான்உன் மணிமலர்த்தாள்
வேறுபட்டேனை விடுதி கண்டாய்? வினையேன் மனத்தே
ஊறுமட்டே, மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
நீறுபட்டே, ஒளிகாட்டும் பொன் மேனி நெடுந்தகையே. 11

பொறிவழி நின்று அருளை இழந்தேன்

நெடுந்தகை,நீ, என்னை யாட்கொள்ள, யான்ஐம் புலன்கள்கொண்டு
விடுந்தகையேனை விடுதி கண்டாய்? விரவார் வெருவ,
அடுந்தகை வேல்வல்ல உத்தர கோச மங்கைக்கரசே,
கடுந்தகையேன், உண்ணும் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே. 12

கருணைக்கு இணங்காதேன்

கடலினுள் நாய்நக்கி ஆங்கு,உன் கருணைக் கடலின்உள்ளம்
விடல் அரியேனை விடுதி கண்டாய்? விடலில்லடியார்
உடலிலமே மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
மடலின்மட்டே, மணியே, அமுதே, என் மதுவெள்ளமே. 13

அருள் பெற்றும் துன்பத்தை விடமுடியவில்லையே

வெள்ளத்துள் நாவற்றி ஆங்கு,உன் அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்? விரும்பும் அடியார்
உள்ளத்துள்ளாய், மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
கள்ளத்துளேற்கு, அருளாய் களியாத களி, எனக்கே. 14

அருள் அணுகியும் நான் விலகினேன்

களிவந்த சிந்தையொடு, உன்கழல் கண்டும், கலந்தருள
வெளிவந்திலேனை விடுதி கண்டாய்? மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோச மங்கைக்கரசே,
எளிவந்த எந்தை பிரான்,என்னை ஆளுடை என்னப்பனே! 15

அலுத்தேன் ' அஞ்சேல் ' என்னாய்

என்னை'அப்பா, அஞ்சல்,' என்பவர் இன்றி,நின்று எய்த்தலைந்தேன்;
மின்னையொப்பாய், விட்டிடுதி கண்டாய்? உவமிக்கின், மெய்யே
உன்னையொப்பாய்; மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
அன்னையொப்பாய்; எனக்கு அத்தனொப்பாய்; என் அரும்பொருளே! 16

பொருளே, தமியேன் புகலிடமே, நின் புகழ்இகழ்வார்
வெருளே, எனைவிட்டிடுதி கண்டாய்? மெய்ம்மையார் விழுங்கும்
அருளே, அணிபொழில் உத்தர கோச மங்கைக்கரசே,
இருளே, வெளியே, இகபரம் ஆகி இருந்தவனே. 17

திருவுள்ளம் எப்படியோ அப்படியே

இருந்தென்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள்; ஒற்றிவை; என்னினல்லால்,
விருந்தினனேனை, விடுதி கண்டாய்? மிக்க நஞ்சமுதா
அருந்தினனே, மன்னும் உத்தர கோச மங்கைக்கரசே,
மருந்தினனே, பிறவிப் பிணிப் பட்டு மடங்கினர்க்கே. 18

என்வினையை ஒழி

மடங்களன் வல்வினைக் காட்டை,நின் மன்னருள் தீக்கொளுவும்
விடங்க, என்றன்னை விடுதிகண்டாய்? என்பிறவியை வே
ரொடும்களைந்து ஆண்டுகொள்; உத்தர கோச மங்கைக்கரசே,
கொடுங்கரிக் குன்றுரித்து, அஞ்சுவித்தாய், வஞ்சிக் கொம்பினையே. 19

கொழு கொம்பில்லாக்கொடி

கொம்பர் இல்லாக் கொடிபோல் அலமந்தனன்; கோமளமே,
வெம்புகின்றேனை விடுதி கண்டாய்? விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள்ளாய்; மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே,
அம்பரமே, நிலனே, அனல்,காலொடு, அப்பு, ஆனவனே. 20

புலன்கள் துவைக்கின்றன

ஆனைவெம் போரில், குறுந்தூறு எனப்புலனால் அலைப்புண்டு
ஏனையெந்தாய், விட்டிடுதி கண்டாய்? வினையேன், மனத்துத்
தேனையும், பாலையும், கன்னலையும், அமுதத்தையும், ஒத்து,
ஊனையும், என்பினையும், உருக்கா நின்ற ஒண்மையனே. 21

அறிவதற்கு அறியவன் அருகிலுள்ளான்

ஒண்மையனே, திருநீற்றை உத்தூளித்து ஒளி மிளிரும்
வெண்மையனே, விட்டிடுதி கண்டாய்? மெய் அடியவர்கட்கு
அண்மையனே, என்றும் சேயாய் பிறர்க்;கறிதற் கரிதாம்
பெண்மையனே, தொன்மை ஆண்மையனே, அலிப் பெற்றியனே. 22

நல்லன கொண்டு தீயன செய்தேன்

பெற்றது கொண்டு, பிழையே பெருக்கிச், சுருக்குமன்பின்
வெற்றடியேனை, விடுதி கண்டாய்? விடிலோ கெடுவேன்;
மற்று,அடியேன் தன்னைத், தாங்குநரில்லை; என் வாழ்முதலே,
உற்று,அடியேன், மிகத் தேறிநின்றேன்; எனக்கு உள்ளவனே. 23

தக்கன விடுத்து தகாதனவே செய்தேன்

உள்ளனவே நிற்க, இல்லன செய்யும் மையல்துழனி
வெள்ளனலேனை விடுதி கண்டாய்? வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத்து உரியாய், புலன்,நின்கண் போதலொட்டா,
மெள்ளெனவே மொய்க்கும் நெய்க்குடம் தன்னை எறும்பெனவே. 24

எறும்பிடை நாங்கூழ்

எறும்பிடை நாங்கூழ் எனப்,புலனால் அரிப்புண்டு, அலந்த
வெறும் தமியேனை விடுதிகண்டாய்? வெய்ய கூற்றொடுங்க,
உறுங்கடிப் போதவையே உணர்வு உற்றவர் உம்பர்உம்பர்
பெறும் பதமே, அடியார் பெயராத பெருமையனே. 25

அருள் விலக அச்சம் பெருகுகின்றது

பெருநீர் அறச்,சிறு மீன்துவண்டு ஆங்கு, நினைப்பிரிந்து
வெருநீர்மை யேனை விடுதிகண்டாய்? வியன் கங்கைபொங்கி
வருநீர்மடுவுள், மலைச்சிறு தோணி வடிவின், வெள்ளைக்
குருநீர் மதிபொதியும் சடை, வானக் கொழுமணியே! 26

இன்பத்தில் இழிந்தேன் : தூய்மை செய்

கொழுமணி ஏர்நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்று,குன்றி
விழும் அடியேனை விடுதிகண்டாய்? மெய்ம் முழுதுங்கம்பித்து,
அழும் அடியாரிடை ஆர்த்துவைத்து, ஆட்கொண்டு அருளி,என்னைக்
கழுமணியே, இன்னும் காட்டு கண்டாய்,நின் புலன்கழலே. 27

பொய் நெறியில் மயங்குகின்றேன்

புலன்கள் திகைப்பிக்க, யானும் திகைத்து,இங்கோர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதிகண்டாய்? விண்ணும், மண்ணும், எல்லாம்
கலங்க, முந்நீர் நஞ்சமுதுசெய்தாய்; கருணா கரனே!
துலங்குகின்றேன், அடியேன்; உடையாய், என் தொழுகுலமே. 28

குற்றம் களைந்தாய்

குலங்களைந்தாய்; களைந்தாய் என்னைக் குற்றம்; கொற்றச்சிலையாம்
விலங்கல் எந்தாய், விட்டிடுதிகண்டாய்? பொன்னின் மின்னுகொன்றை
அலங்கல் அந்தாமரை மேனியப்பா, ஒப்பி லாதவனே,
மலங்கள் ஐந்தால் சுழல்வன், தயிரில் பொருமத்துறவே. 29

கடையும் தயிர்போல் கலங்குகின்றேன்

மத்துறு தண்தயிரில், புலன் தீக்கதுவக் கலங்கி,
வித்துறு வேனை விடுதிகண்டாய்? வெண்டலை மிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து, குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ்சாந் தணி சச்சையனே. 30

அனைத்தும் நீயே

சச்சையனே, மிக்க தண்புனல், விண்,கால், நிலம்,நெருப்பாம்
விச்சையனே, விட்டிடுதி கண்டாய்? வெளியாய், கரியாய்
பச்சையனே, செய்ய மேனியனே, ஒண் படஅரவக்
கச்சையனே கடந்தாய் தடந் தாள அடற்கரியே. 31

அஞ்சி அழிந்தேன்

அடற்கரி போல்,ஐம் புலன்களுக்கஞ்சி, அழிந்த என்னை
விடற்கரியாய், விட்டிடுதி கண்டாய்? விழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரியாய், சுடர் மாமணியே, சுடு தீச்சுழலக்,
கடற்கரிதாய் எழு நஞ்சமுதாக்கும் கறைக் கண்டனே. 32

கருணையில் களித்தேன் : கண்டது செய்கின்றேன்

கண்டது செய்து, கருணைமட்டுப் பருகிக் களித்து,
மிண்டுகின்றேனை விடுதி கண்டாய்? நின் விரைமலர்த்தாள்
பண்டு தந்தாற்போல் பணித்துப், பணிசெயக் கூவித்து,என்னைக்
கொண்டு, என்எந்தாய், களையாய் களையாய குதுகுதுப்பே. 33

ஆசையோ உன்குறிப்பில் : செய்கையோ என்குறிப்பே!

குதுகுதுப்பு இன்றிநின்று, என்குறிப்பே செய்து, நின்குறிப்பில்
விதுவிதுப்பேனை விடுதி கண்டாய்? விரையார்ந்து, இனிய
மதுமதுப் போன்று,என்னை வாழைப் பழத்தின் மனங்கனிவித்து,
எதிர்வது எப்போது? பயில்விக், கயிலைப் பரம்பரனே. 34

பிறவி என்னும் பெரும்பாம்பு சீறுகின்றது

பரம்பரனே, நின் பழஅடி யாரொடும் என்படிறு
விரும்பரனே, விட்டிடுதி கண்டாய்? மென் முயற்கறையின்
அரும்பு,அர, நேர்வைத்து அணிந்தாய், பிறவி ஐவாயரவம்
பொரும், பெருமான் வினையேன்மனம் அஞ்சிப், பொதும்புறவே. 35

மூளாத்தீயில் உள்ளே கனன்று வாடுகின்றேன்

பொதும்புறு தீப்போல் புகைந்தெரியப், புலன் தீக்கதுவ,
வெதும்புறுவேனை விடுதி கண்டாய்? விரையார் நறவம்
ததும்பும் மந்தாரத்தில் தாரம்பயின்று, மந்தம் முரல்வண்டு
அதும்பும் கொழுந்தேன் அவிர்சடை வானத்து அடலரைசே. 36

'அஞ்சல்' என அருளுக

அரைசே, அறியாச் சிறியேன் பிழைக்கு'அஞ்சல்' என்னினல்லால்,
விரைசேர் முடியாய், விடுதிகண்டாய்? வெண் நகைக்,கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற் பதப்புயங்கா,
வரைசேர்ந்து அடர்ந்தென்ன, வல்வினை; தான்வந்து அடர்வனவே. 37

சிற்றின்பம் விழைந்து பேரின்பம் விடுத்தேன்

அடர்புலனால், நின் பிரிந்தஞ்சி, அஞ்சொல் நல்லாரவர்தம்
விடர்விடலேனை விடுதி கண்டாய்? விரிந்தே எரியும்
சுடரனையாய், சுடுகாட் டரசே, தொழும்பர்க்கு அமுதே,
தொடர்வரியாய், தமியேன் தனி நீக்கும் தனித்துணையே. 38

என்னை நினைத்து உன்னை மறந்தேன்

தனித்துணை நீநிற்க, யான்தருக்கித், தலையால் நடந்த
வினைத் துணையேனை விடுதிகண்டாய்? வினையே னுடைய
மனத்துணையே, என்றன் வாழ்முதலே, எனக்கு எய்ப்பில்வைப்பே,
தினைத் துணையேனும் பொறேன், துயராக்கையின் திண்வலையே. 39

இழிந்தன விழைந்தேன்

வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு,
மிலைத்து, அலைந்தேனை விடுதிகண்டாய்? வெண் மதியின்ஒற்றைக்
கலைத்தலையாய், கருணா கரனே, கயிலாயம் என்னும்
மலைத்தலைவா, மலையாள் மணவாள, என் வாழ்முதலே. 40

சிறியன சூழ நடுங்குகின்றேன்

முதலைச் செவ்வாய்ச்சியர் வேட்கை வெந்நீரில், கடிப்பமூழ்கி,
விதலைச் செய்வேனை, விடுதிகண்டாய்? விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய்காயம் பொறேன்; சிவனே, முறையோ? முறையோ?
திதலைச்செய் பூண்முலை மங்கைபங்கா, என் சிவகதியே! 41

ஞானக்கழல் அடைவேனுக்கு ஊன உடல் ஏன்?

கதியடியேற்கு உன் கழல்தந்து அருளவும், ஊன்கழியா
விதியடியேனை விடுதி கண்டாய்? வெண் தலைமுழையில்
பதியுடை வாளரப் பார்த்து,இறை பைத்துச், சுருங்க,அஞ்சி,
மதிநெடு நீரில் குளித்து,ஒளிக்கும் சடை மன்னவனே. 42

அறியாதேன் பெற்ற ஆனந்த ஒளி

மன்னவனே, ஒன்று மாறறியாச் சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே, விட்டிடுதி கண்டாய்? மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவனே, சொல் கழிந்தவனே, கழியாத் தொழும்பர்
முன்னவனே, பின்னும் ஆனவனே, இம் முழுதையுமே. 43

காமக் கனலில் விழுந்த வெண்ணெய்

முழுதயில் வேற்கண்ணியர் எனும் மூரித் தழல்முழுகும்
விழுதனையேனை விடுதி கண்டாய்? நின் வெறிமலர்த்தாள்
தொழுது செல்வானத் தொழும்பரில் கூட்டிடு; 'சோத்தெம்'பிரான்;
பழுதுசெய்வேனை விடேல்; உடையாய், உன்னைப் பாடுவனே. 44

மறைத்தாய் மறந்தேன்

பாடிற்றிலேன்; பணியேன்; மணி, நீ,ஒளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றிலேனை விடுதி கண்டாய்? வியந்து, ஆங்கலறித்
தேடிற்றிலேன்; 'சிவன் எவ்விடத்தான்? எவர் கண்டனர்?'என்று
ஓடிற்றிலேன்; கிடந்து உள்ளுருகேன்; நின்று உழைத்தனனே. 45

காமக்கனியை மொய்க்கும் ஈ

உழைதரு நோக்கியர் கொங்கைப்,பலாப் பழத்து ஈயினொப்பாய்,
விழைதரு வேனை விடுதிகண்டாய்? விடின், " வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன், குணமிலி, மானிடன், தேய்மதியன்,
பழைதரு மாபரன் " என்றென்று அறைவன், பழிப்பினையே. 46

தொண்டு மறந்த தொண்டன்

பழிப்பில்நின் பாதப் பழந்தொழும்பு எய்தி, விழப்,பழித்து,
விழித்திருந்தேனை விடுதி கண்டாய்? வெண் மணிப்பணிலம்
கொழித்து, மந்தாரம் மந்தாகினி நுந்தும், பந்தப்பெருமை,
தழிச்சிறை நீரில், பிறைக்கலம், சேர்தரு தாரவனே. 47

உன் அடியார்க்கு அடியேன்

தாரகைபோலும் தலைத்தலை மாலைத், தழலரப் பூண்
வீர,என்தன்னை விடுதிகண்டாய்? விடில், என்னை மிக்கார்
'ஆரடியான்?' என்னின், ' உத்தரகோச மங்கைக் கரசின்
சீரடியார் அடியான் ' என்று, நின்னைச் சிரிப்பிப்பனே. 48

உனக்கே ஆளானேன்

சிரிப்பிப்பன், சீறும் பிழைப்பைத்; தொழும்பையும் ஈசற்கென்று
விரிப்பிப்பன்; என்னை விடுதிகண்டாய்? விடின், " வெங்கரியின்
உரிப்பிச்சன், தோலுடைப் பிச்சன், நஞ்சூண்பிச்சன், ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன், என்னையும் ஆளுடைப்பிச்சன் "என்று, ஏசுவனே. 49

என் பிழைக்கு மனம் உடைந்தேன் : கைவிடுவாயோ?

ஏசினும்,யான், உன்னை ஏத்தினும், என்பிழைக் கேகுழைந்து
வேசறுவேனை விடுதி கண்டாய்? செம் பவளவெற்பின்
தேசுடையாய்; என்னை ஆளுடையாய்; சிற்றுயிர்க்கு இரங்கிக்
காய்சின ஆலம் உண்டாய் அமுதுண்ணக் கடையவனே. 50

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மங்களநாயகி அம்மை உடனமர்
அருள்மிகு மங்களநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

7. திருவெம்பாவை

திருவண்ணாமலையில் அருளியது; சத்தியை வியந்த மார்கழித் திங்களில் நீராடுதற்குக் கன்னியர்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பிச் சிவபெருமான் பெருமையைப் பாடுதல்
(வெண்டளையால் வந்த தரவுஇணைக் கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

முதலும், முடிவும் இல்லா பேரொளி

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள்தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி, மெய்ம்மறந்து,
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே!என்னே!!
ஈதேஎந் தோழி பரிசு?'ஏலோர் எம்பாவாய்! 1

அருள் தரவரும் ஒளி

'பாசம் பரஞ்சோதிக்கு' என்பாய், இராப்பகல்நாம்
பேசும்போது; எப்போது? இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! 'நேரிழையீர்!
சீ! சீ! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடமீதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்?யாம் ஆர்?'ஏலோர் எம்பாவாய்! 2

உள்ளத்தின் அழகு

"முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்து, எதிரெழுந்து,'என்
அத்தன், ஆனந்தன், அமுதன் ' என்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்துன் கடைதிறவாய் "
'பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!'

புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற், பொல்லாதோ?
எத்தோநின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?
'சித்தம் அழகியார் பாடாரோ, நம்சிவனை? '
இத்தனையும் வேண்டும் எமக்கு'ஏலோர் எம்பாவாய்! 3

கண்ணுக்கு இனியான்

'ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ? '
'வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ? '
எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம்; 'அவ்வளவும்
கண்ணைத் துயின்று,அவமே காலத்தைப் போக்காதே '
விண்ணுக்கு ஒருமருந்தை, வேத விழுப்பொருளைக்,
கண்ணுக்கு இனியானைப், பாடிக் கசிந்து,உள்ளம்
உண்ணெக்கு, நின்றுருக, யாம்மாட்டோம்; நீயேவந்து
எண்ணிக், குறையில், துயில்' ஏலோர் எம்பாவாய்! 4

குற்றங்களை போக்கவந்த குணம்

மாலறியா, நான்முகனும் காணா,மலையினை, " நாம்
போலறிவோம்," என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்
ஞாலமே, விண்ணே, பிறவே, அறிவரியான்
கோலமும், நம்மைஆட் கொண்டு,அருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச், "சிவனே! சிவனே!" என்று
ஓலம் இடினும், உணராய், உணராய்காண்!
ஏலக் குழலி பரிசு'ஏலோர் எம்பாவாய்! 5

தானேவந்து அருள்செயும் தலைவன்

மானே!நீ, நென்னலை, " நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன் " என்றலும், நாணாமே
போன திசைபகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே, அறிவரியான்
தானேவந்து, எம்மைத் தலையளித்துஆட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு,உன் வாய்திறவாய்!
ஊனேஉருகாய், உனக்கே உறும்; எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடு'ஏலோர் எம்பாவாய்! 6

சின்னங்கள் கேட்டால் ' சிவன் ' என்று தொழுவோம்

அன்னே, இவையும் சிலவோ? பலஅமரர்
உன்னற்கு அரியான், ஒருவன், இருஞ்சீரான்,
சின்னங்கள் கேட்பச் "சிவன்"என்றே வாய்திறப்பாய்;
" தென்னா " என்னாமுன்னம், தீசேர் மெழுகொப்பாய்;
"என்னானை, என்னரையன், இன்னமுது, " என்றெல்லோமும்
சொன்னோம்கேள், வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்,
என்னே துயிலின் பரிசு?'ஏலோர் எம்பாவாய்! 7

அருட்பெருங்கடல் : ஏழைப்பங்காளன்

கோழி சிலம்பச், சிலம்பும் குருகெங்கும்;
ஏழில் இயம்ப, இயம்பும்வெண் சங்கெங்கும்;
கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை,
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ?
வாழிஈ தென்ன உறக்கமோ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு!'ஏலோர் எம்பாவாய்! 8

அடியார் தாள் பணிவோம்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எம்கணவர் ஆவார்; அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோம்'ஏலோர் எம்பாவாய்! 9

அவனைப் பாடும் பரிசு எது?

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒருபால்; திருமேனி ஒன்றல்லன்;
வேதமுதல்; விண்ணோரும், மண்ணும், துதித்தாலும்,

ஓத உலவா ஒருதோழம் தொண்டருளன்;
கோதில் குலத்து,அரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்!
ஏதவன்ஊர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசு?'ஏலோர் எம்பாவாய்! 10

வழிவழி அடியோம் வாழ்ந்தோம்

மொய்யார் தடம்பொய்கை புக்கு, முகேரென்னக்
கையாற் குடைந்து, குடைந்து,உன் கழல்பாடி,
ஐயா! வழியடியோம், வாழ்ந்தோங்காண்; ஆரழல்போல்
செய்யா! வெண்ணீறாடீ! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா!நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம், உய்ந்தொழிந்தோம்;
எய்யாமல் காப்பாய் எமை'ஏலோர் எம்பாவாய்! 11

படைத்தலும், காத்தலும், கரத்தலும் ஓர் விளையாட்டு

ஆர்த்த பிறவித் துயர்கெட,நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்; நல்தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்; இவ்வானும், குவலயமும், எல்லோமும்,
காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி,
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப, வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய, அணிகுழல்மேல் வண்டார்ப்பப்,
பூத்திகழும் பொய்கை குடைந்து,உடையான் பொற்பாதம்
ஏத்தி, இருஞ்சுனைநீர் ஆடு'ஏலோர் எம்பாவாய்! 12

பூம்புனலே! நீ அம்மையப்பனோ?

பைங்குவளைக் கார்மலரால், செங்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகினத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும், எங்கோனும், போன்றிசைந்த
பொங்கு மடுவில், புகப்பாய்ந்து, பாய்ந்து;நம்
சங்கம் சிலம்பச்; சிலம்பு கலந்தார்ப்பக்;
கொங்கைகள் பொங்கக்; குடையும் புனல்பொங்கப்;
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடு'ஏலோர் எம்பாவாய்! 13

அன்னையைப் பாடுவோம்

காதார் குழையாடப், பைம்பூண் கலனாடக்,
கோதை குழலாட, வண்டின் குழாமாடச்,
சீதப் புனலாடிச், சிற்றம்பலம் பாடி,
வேதப் பொருள்பாடி, அப்பொருளா மாபாடிச்,
சோதி திறம்பாடிச், சூழ்கொன்றைத் தார்பாடி,
ஆதி திறம்பாடி, அந்தம்ஆ மாபாடிப்,
பேதித்து நம்மை, வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி, ஆடு'ஏலோர் எம்பாவாய்! 14

பித்தாக ஆட்கொண்ட வித்தகர்

ஓரொருகால் " எம்பெருமான் " என்றென்றே, நம்பெருமான்,
சீரொருகால் வாயோவாள்; சித்தம் களிகூர,
நீரொருகால் ஓவா, நெடுந்தாரை கண்பனிப்பப்,
பாரொருகால் வந்தனையாள்; விண்ணோரைத் தான்பணியாள்;
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்,
வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி,
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடு'ஏலோர் எம்பாவாய்! 15

அருள் மழை

முன்னிக், கடலைச் சுருக்கி எழுந்து,உடையாள்
என்னத் திகழ்ந்து,எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து,எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பித், திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, நம்தம்மை ஆளுடையாள்-
தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள்,நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை'ஏலோர் எம்பாவாய்! 16

வீடுவீடாகத் தேடி ஆட்கொண்டான்

செங்கண் அவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்,
கொங்குண் கருங்குழலி! நம்தம்மைக் கோதாட்டி,
இங்கு,நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்,

செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை,
அங்கண் அரசை, அடியோங்கட்கு ஆரமுதை,
நங்கள் பெருமானைப், பாடி, நலந்திகழப்,
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடு'ஏலோர் எம்பாவாய்! 17

கண்ணார் அமுதம்

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து, கார்கரப்பத்,
தண்ணார் ஒளிமழுங்கித், தாரகைகள் தாமகலப்,
பெண்ணாகி, ஆணாய், அலியாய்ப், பிறங்கொளிசேர்
விண்ணாகி, மண்ணாகி, இத்தனையும் வேறாகிக்,
கண்ணார் அமுதமுமாய், நின்றான் கழல்பாடிப்,
பெண்ணே! இப்பூம்புனல்பாய்ந்து ஆடு'ஏலோர் எம்பாவாய்! 18

எது எவ்வாறாயினும் நமக்கு என்ன?

'உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்!'என்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்,
எங்கள் பெருமான், உனக்குஒன்று உரைப்போம்கேள்!
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க;
கங்குல், பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க;
இங்குஇப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்,
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு'ஏலோர் எம்பாவாய்! 19

ஐந்தொழில் இயற்றும் திருவடி காப்பதாக

போற்றி! அருளுக,நின் ஆதியாம் பாதமலர்,
போற்றி! அருளுக,நின் அந்தமாம் செந்தளிர்கள்,
போற்றி!எல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்,
போற்றி!எல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்,
போற்றி!எல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்,
போற்றி!மால், நான்முகனும், காணாத புண்டரிகம்,
போற்றி!யாம் உய்ய,ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்,
போற்றி!யாம் மார்கழிநீர் ஆடு'ஏலோர் எம்பாவாய்! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் உண்ணாமுலை அம்மை உடனமர்
அருள்மிகு அண்ணாமலையார் திருவடிகள் போற்றி ! போற்றி !

8. திருஅம்மானை

திருவண்ணாமலையில் அருளியது; ஆனந்தக் களிப்பு
அந்தமிலா ஆனந்தம் தரும் சிவபெருமானை அம்மானை ஆடும் பெண்கள் புகழ்ந்து பாடுதல்
(ஒப்புமை பற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

வலிய வந்த அருள்

செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும், காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி,
எங்கள் பிறப்பறுத்திட்டு, எந்தரமும் ஆட்கொண்டு,
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்,
அங்கணன், அந்தணனாய், அறைகூவி, வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண்; அம்மானாய்! 1

நான் வாரா வழிக்கு அவன் வந்தான்

பாரார், விசும்புள்ளார், பாதாளத்தார், புறத்தார்,
ஆராலும் காண்டற்கு அரியான்; எமக்கெளிய
பேராளன்; தென்னன்; பெருந்துறையான்; பிச்சேற்றி,
வாரா வழியருளி, வந்து,என் உளம்புகுந்த
ஆரா அமுதாய், அலை கடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 2

சிந்தனையை உருக்கும் சிவபெருமான்

இந்திரனும், மால்,அயனும், ஏனோரும், வானோரும்,
அந்தரமே நிற்கச், சிவன்அவனி வந்தருளி,
எந்தரமும் ஆட்கொண்டு, தோள்கொண்ட, நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்கும் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப், பரிமேற்கொண் டான்,தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண்; அம்மானாய்! 3

தானே வந்து அருள் செய்த தாய்

வான்வந்த தேவர்களும், மால்,அயனோடு, இந்திரனும்
கான்நின்று வற்றியும், புற்றெழுந்தும், காண்பரிய

தான்வந்து, நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு,
ஊன்வந்து, ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந்து, அமுதின் தெளிவின் ஒளிவந்த,
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண்; அம்மானாய்! 4

கல்லைக் கனியாக்கும் கருணை

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை,
வல்லாளன், தென்னன், பெருந்துறையான், பிச்சேற்றிக்,
கல்லைப் பிசைந்து கனியாக்கித், தன்கருணை
வெள்ளத்து அழுத்தி, வினைகடிந்த வேதியனைத்,
தில்லை நகர்புக்குச், சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 5

கேட்டாயோ? அவன் செய்தவை

கேட்டாயோ தோழி! கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ், தென்னன் பெருந்துறையான்
காட்டா தனஎல்லாம் காட்டிச், சிவம்காட்டி,
தாள்தா மரைகாட்டித், தன்கருணைத் தேன்காட்டி,
நாட்டார் நகைசெய்ய, நாம்மேலை வீடெய்த,
ஆள்தான் கொண்டாண்டவா பாடுதுங்காண்; அம்மானாய்! 6

உள்குவார் உள்ளத்தான்

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்,
சேயானைச், சேவகனைத், தென்னன் பெருந்துறையின்
மேயானை, வேதியனை, மாதிருக்கும் பாதியனை,
நாயான நம்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்,
தாயான, தத்துவனைத், தானே உலகேழும்
ஆயானை, ஆள்வானைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 7

மண் சுமந்து புண் சுமந்தான்

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன், பெம்மான், பெருந்துறையான்,
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்துஈசன்,
கண்சுமந்த நெற்றிக் கடவுள், கலிமதுரை

மண்சுமந்து கூலிகொண்டு, அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண்; அம்மானாய்! 8

அண்டம் வியப்புறும்

துண்டப் பிறையான், மறையான், பெருந்துறையான்,
கொண்ட புரிநூலான், கோலமா ஊர்தியான்,
கண்டம் கரியான், செம்மேனியான், வெண்ணீற்றான்,
அண்டமுதல் ஆயினான், அந்தமிலா ஆனந்தம்,
பண்டைப் பரிசே, பழவடியார்க்கு ஈந்தருளும்;
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண்; அம்மானாய்! 9

தமிழ் அளிக்கும் தெய்வம்

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை,
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்,
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்,
பெண்ணாளும் பாகனைப், பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி, நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 10

அப்பாலைக்கு அப்பாலாம் ஆனந்தம்

செப்பார் முலைபங்கன், தென்னன், பெருந்துறையான்,
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்,
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன், ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 11

உண்மையின் காட்சி

மைப்பொலியும் கண்ணி!கேள்; மால்,அயனோடு, இந்திரனும்,
எப்பிறவி யும்தேட, என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண்டு, இனிப்பிறவா மேகாத்து,
மெய்ப்பொருட்கண் தோற்றமாய், மெய்யே நிலைபேறாய்,
எப்பொருட்கும் தானேயாய், யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம், நம்சிவனைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 12

அன்பர்க்கு மெய்யன்

கையார் வளைசிலம்பக், காதார் குழையாட,
மையார் குழல்புரளத், தேன்பாய, வண்டொலிப்பச்,
செய்யானை, வெண்ணீறு அணிந்தானைச், சேர்ந்தறியாக்
கையானை, எங்கும் செறிந்தானை, அன்பர்க்கு
மெய்யானை, அல்லாதார்க்கு அல்லாத வேதியனை,
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 13

தொண்டு கொண்ட வானவன்

ஆனையாய்க், கீடமாய், மானுடராய்த், தேவராய்,
ஏனைப் பிறவாய்ப், பிறந்து,இறந்து, எய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி, என்வினையை ஓட்டுகந்து,
தேனையும், பாலையும், கன்னலையும் ஒத்து,இனிய
கோனவன்போல் வந்து,என்னைத், தன்தொழும்பில்
– கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண்; அம்மானாய்! 14

மறக்கருணை

சந்திரனைத் தேய்த்தருளித், தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டு, எச்சன் தலையரிந்து,
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்,
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த,
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண்; அம்மானாய்! 15

உள் கலந்த தேன்

ஊனாய், உயிராய், உணர்வாய், என்னுட்கலந்து
தேனாய், அமுதமுமாய்த், தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழிஎமக்குத் தந்தருளும்,
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார், சீரொளிசேர்
ஆனா அறிவாய், அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண்; அம்மானாய்! 16

என்ன என்ன செய்வேன் ?

சூடுவேன் பூங்கொன்றை; சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன்; கூடி, முயங்கி, மயங்கிநின்று,

ஊடுவேன்; செவ்வாய்க்கு உருகுவேன்; உள்ளுருகித்
தேடுவேன்; தேடிச், சிவன்கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்து மலர்வேன்; அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண்; அம்மானாய்! 17

அருளால் வந்த ஒளி

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை,
வெளிவந்த மால்,அயனும், காண்பரிய வித்தகனைத்,
தெளிவந்த தேறலைச், சீரார் பெருந்துறையில்
எளிவந்து, இருந்து,இரங்கி, எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்து,என் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ,
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 18

இன்னமுது

முன்னானை, மூவர்க்கும்; முற்றுமாய், முற்றுக்கும்
பின்னானைப்; பிஞ்ஞகனைப்; பேணு பெருந்துறையின்
மன்னானை; வானவனை; மாதியலும் பாதியனைத்;
தென்னானைக் காவானைத்; தென்பாண்டி நாட்டானை;
‘ என்னானை, என்னப்பன் ’ என்பார்கட்கு இன்னமுதை
அன்னானை; அம்மானைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 19

மாசு நீக்கிய மாண்பு

பெற்றி பிறர்க்கரிய பெம்மான், பெருந்துறையான்,
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித், தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக், குணங்கொண்டு, கோதாட்டிச்,
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றி,இப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்,
பற்றிய, பேரானந்தம் பாடுதுங்காண்; அம்மானாய்! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் உண்ணாமுலை அம்மை உடனமர்
அருள்மிகு அண்ணாமலையார் திருவடிகள் போற்றி ! போற்றி !

9. திருப்பொற்சுண்ணம்

திருத்தில்லையில் அருளியது; ஆனந்த மனோலயம்
சிவபெருமானுக்குக் கலவைப் பொடி இடிக்கும் போதும் அவன் புகழ் பாடுதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

தெய்வத் தாயர் துணை செய்க

முத்துநல் தாமம்,பூ மாலை,தூக்கி,
முளைக்குடம், தூபம்,நல் தீபம்,வைம்மின்!
சத்தியும், சோமியும், பார்மகளும்,
நாமக ளோடு பல்லாண்டிசைமின்!
சித்தியும், கௌரியும், பார்ப்பதியும்,
கங்கையும், வந்து, கவரிகொண்மின்!
அத்தன், ஐயாறன், அம்மானைப்பாடி,
ஆடப், பொற்சுண்ணம் இடித்தும்,நாமே! 1

எல்லீரும் வம்மின்

பூவியல் வார்சடை எம்பிராற்குப்,
பொற்திருச் சுண்ணம் இடிக்கவேண்டும்,
மாவின் வடுவகிர் அன்னகண்ணீர்!
வம்மின்கள், வந்து,உடன் பாடுமின்கள்;
கூவுமின், தொண்டர் புறம்நிலாமே;
குனிமின், தொழுமின்; எம்கோன்,எம்கூத்தன்,
தேவியும் தானும்வந்து, எம்மையாளச்,
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்,நாமே! 2

இடத்தைத் தூய்மை செய்வோம்

சுந்தர நீறுஅணிந்தும், மெழுகித்
தூயபொன் சிந்தி, நிதிபரப்பி,
இந்திரன் கற்பகம் நாட்டி,எங்கும்
எழிற்சுடர் வைத்துக், கொடிஎடுமின்;
அந்தரர் கோன்,அயன் தன்பெருமான்,
ஆழியான் நாதன், நல்வேலன்தாதை,
எந்தரம்ஆள் உமையாள் கொழுநற்கு,
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும்,நாமே! 3

கருவிகளை அழகுபடுத்துவோம்

காசணிமின்கள், உலக்கை எல்லாம்;
காம்பணிமின்கள், கறை யுரலை;
‘ நேசம்உடைய அடிய வர்கள்
நின்றுநிலாவுக ’ என்று வாழ்த்தித்,
தேசம்எல்லாம் புகழ்ந்தாடும், கச்சித்
திருவேகம்பன் செம்பொன் கோயில்பாடிப்,
பாசவினையைப் பறித்து நின்று,
பாடிப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 4

தொண்டு செய்ய முந்துவோம்

அறுகு எடுப்பார் அயனும்,அரியும்;
அன்றி, மற்றுஇந்திர னோடு,அமரர்,
நறுமுறு தேவர் கணங்கள்எல்லாம்,
நம்மில் பின்பல்லது, எடுக்கவொட்டோம்;
செறிவுடை மும்மதில் எய்தவில்லி,
திருவேகம்பன், செம்பொன் கோயில்பாடி,
முறுவல் செவ்வாயினீர்! முக்கண்அப்பற்கு,
ஆடப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 5

காண உலகங்கள் போதாது

உலக்கை பல ஓச்சுவார்பெரியர்,
உலகமெலாம் உரல் போதாதுஎன்றே;
கலக்க அடியவர் வந்துநின்றார்,
காண உலகங்கள் போதாதென்றே;
நலக்க, அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி,
மகிழ்ந்து,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 6

எங்கும் ஓரே ஆரவாரம்

சூடகம், தோள்வளை, ஆர்ப்பஆர்ப்பத்,
தொண்டர் குழாமெழுந்து ஆர்ப்பஆர்ப்ப,
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப,
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்,

பாடகம் மெல்லடி ஆர்க்கும்மங்கை
பங்கினன், எங்கள் பராபரனுக்கு,
ஆடக மாமலை அன்னகோவுக்கு,
ஆடப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 7

ஆனந்தம் பொங்குகிறது

வாள்தடங் கண்மட, மங்கைநல்லீர்!
வரிவளைஆர்ப்ப, வண்கொங்கை பொங்கத்,
தோள்திரு முண்டம் துதைந்துஇலங்கச்,
'சோத்தெம்,பிரான்!' என்றுசொல்லிச் சொல்லி,
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதம்காட்டி,
நாயிற் கடைப்பட்ட நம்மை,இம்மை,
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி,
ஆடப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 8

மெய் என்னும் மஞ்சளைப் பூசுவோம்

வையகம் எல்லாம் உரலதாக,
மாமேரு என்னும் உலக்கைநாட்டி,
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி;
மேதகு தென்னன், பெருந்துறையான்,
செய்ய திருவடி பாடிப்பாடிச்,
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி,
ஐயன், அணிதில்லை வாணனுக்கே,
ஆடப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 9

எல்லாம் ஒரே ஆட்டம், சித்தம் சிவனோடு ஆட

முத்தணி கொங்கைகள் ஆடஆட,
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்,
சித்தம் சிவனொடும் ஆடஆடச்,
செங்கயற் கண்பனி ஆடஆடப்,
பித்து எம்பிரானொடும் ஆடஆடப்,
பிறவி பிறரொடும் ஆடஆட,
அத்தன் கருணையொடு ஆடஆட,
ஆடப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 10

தேடுவோம், பாடுவோம், ஆடுவோம்

மாடு, நகைவாள் நிலாஎறிப்ப,
வாய்திறந்து அம் பவளம்துடிப்பப்,
பாடுமின், நந்தம்மை ஆண்டவாறும்,
பணிகொண்ட வண்ணமும்; பாடிப்பாடித்
தேடுமின், எம்பெரு மானைத்;தேடிச்,
சித்தம் களிப்பத், திகைத்துத்,தேறி,
ஆடுமின்; அம்பலத்து ஆடினானுக்கு,
ஆடப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 11

மாணிக்கக் கூத்தன்

மையமர் கண்டனை, வானநாடர்
மருந்தினை, மாணிக்கக் கூத்தன்தன்னை,
ஐயனை, ஐயர் பிரானை,நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை, மெய்யர்மெய்யைப்;
போதரிக் கண்ணிணைப், பொன்தொடித்தோள்,
பையரவு அல்குல், மடந்தைநல்லீர்!
பாடிப்;பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 12

இது என்ன உறவு?

மின்னிடைச், செந்துவர் வாய்க்,கருங்கண்,
வெண்ணகைப், பண்ணமர் மென்மொழியீர்!
என்னுடை ஆரமுது, எங்கள்அப்பன்,
எம் பெருமான், இமவான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன்,தகப்பன்,
தமையன்,எம் ஐயன் தாள்கள்பாடிப்,
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்!
பொன்திருச் சுண்ணம் இடித்தும்,நாமே! 13

பொங்கிய காதல்

சங்கம் அரற்றச், சிலம்புஒலிப்பத்,
தாழ்குழல் சூழ்தரு மாலைஆடச்,
செங்கனி வாய்இதழும் துடிப்பச்,
சேயிழையீர்! சிவலோகம் பாடிக்,

கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே,
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்,
பொன்திருச் சுண்ணம் இடித்தும்,நாமே! 14

சித்தம் புகுந்த இனிமை

ஞானக் கரும்பின் தெளிவைப்,பாகை,
நாடற்கு அரிய நலத்தை,நந்தாத்
தேனைப், பழச்சுவை ஆயினானைச்,
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப், பிறப்பறுத்து, ஆண்டுகொண்ட
கூத்தனை; நாத்தழும் பேறவாழ்த்திப்,
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்!
பாடிப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 15

ஆட்கொண்ட வகையைப் பாடுவோம்

ஆவகை, நாமும்வந்து, அன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி,விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டுஅறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்,
சிவபெருமான், புரம் செற்றகொற்றச்
சேவகன், நாமங்கள் பாடிப்பாடிச்,
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்,நாமே! 16

சார்ந்தவற்றை எல்லாம் பாடுவோம்

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்,
சிவபுரம் பாடித், திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி,
மால்விடை பாடி, வலக்கைஏந்தும்
ஊனக மாமழுச், சூலம்,பாடி,
உம்பரும் இம்பரும் உய்ய,அன்று,
போனகமாக, நஞ்சு உண்டல்பாடிப்,
பொன்திருச் சுண்ணம் இடித்தும்,நாமே! 17

வெம்மையும், தண்மையும் பாடுவோம்

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி,
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்,
கயந்தனைக் கொன்று,உரி போர்த்தல்பாடிக்,
காலனைக் காலால் உதைத்தல்பாடி,
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி,
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின்று, ஆடிஆடி,
நாதற்குச், சுண்ணம் இடித்தும்,நாமே! 18

எங்கள் செல்வத்தைப் பாடுவோம்

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி,
மத்தமும் பாடி, மதியும்பாடிச்,
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்,
சிற்றம்பலத்து எங்கள் செல்வம்பாடிக்,
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்,
கங்கணம் பாடிக், கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி,
ஈசற்குச், சுண்ணம் இடித்தும்,நாமே! 19

வேறுபாடு ஏது?

வேதமும், வேள்வியும், ஆயினார்க்கு;
மெய்ம்மையும், பொய்ம்மையும், ஆயினார்க்குச்;
சோதியுமாய், இருள் ஆயினார்க்குத்;
துன்பமுமாய், இன்பம் ஆயினார்க்குப்;
பாதியுமாய், முற்றும் ஆயினார்க்குப்;
பந்தமுமாய், வீடும் ஆயினார்க்கு;
ஆதியும், அந்தமும், ஆயினார்க்கு;
ஆடப்,பொற் சுண்ணம் இடித்தும்,நாமே! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் காமக்கண்ணி அம்மை உடனமர்
அருள்மிகு தழுவக்குழைந்தநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

10. திருக்கோத்தும்பி

திருத்தில்லையில் அருளியது: சிவனோடு ஐக்கியம்
சிவபெருமானின் திருவருளில் ஈடுபடும்படி தும்பியிடம் கூறுதல்
(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

அறியாப் பெரியோன்

பூவேறு கோனும், புரந்தரனும், பொற்பமைந்த
நாவேறு செல்வியும், நாரணனும், நான்மறையும்,
மாவேறு சோதியும், வானவரும், தாமறியாச்
சேவேறு சேவடிக்கே – சென்றூதாய்; கோத்தும்பீ! 1

ஆண்டிலனேல் நான் யார்?

நானார்? என்உள்ளமார்? ஞானங்களார்? என்னையாரறிவார்?
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல்? மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே – சென்றூதாய்; கோத்தும்பீ! 2

ஓய்விலா ஆனந்தம்

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே,
நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும்,
அனைத்தெலும்பு உள்நெக, ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்பு உடையானுக்கே – சென்றூதாய்; கோத்தும்பீ! 3

கண்ணப்பன் எங்கே? நான் எங்கே?

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்,
என்னப்பன், என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி,
வண்ணப் பணித்து,என்னை 'வா'வென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்நீற்றற்கே – சென்றூதாய்; கோத்தும்பீ! 4

பற்றற்றார் பற்று

'அத்தேவர் தேவர்; அவர்தேவர்;' என்று,இங்ஙன்,
பொய்த்தேவு பேசிப், புலம்புகின்ற பூதலத்தே,

பத்தேதும் இல்லாது,என் பற்றற,நான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவற்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 5

சித்தம் தெளிந்தேன்

வைத்தநிதி, பெண்டீர், மக்கள்,குலம், கல்வி,என்னும்
பித்த உலகில், பிறப்போடு இறப்பு,என்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 6

மனத்து அமுதை மறப்பேனோ?

சட்டோ நினைக்க, மனத்தமுதாம், சங்கரனைக்,
கெட்டேன், மறப்பேனோ? கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்;
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 7

நன்றாக வைத்த நம்பெருமான்

ஒன்றாய், முளைத்து,எழுந்து, எத்தனையோ கவடுவிட்டு,
நன்றாக வைத்து,என்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்றாதை; தாதைக்கும், எம்மனைக்கும், தம்பெருமான்!
குன்றாத செல்வற்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 8

இறப்பு எது? பிறப்பு எது?

கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற, கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே, தான்எனக்கு,
மரணம், பிறப்பு,என்று, இவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 9

நடவாக் கன்றின் தாய்

நோயுற்று, மூத்து,நான் நுந்துகன்றாய், இங்கிருந்து,
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்,
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 10

கல் நெஞ்சு உருக்கிய கருணை

"வன்னெஞ்சக் கள்வன், மனவலியன் ", என்னாதே,
கன்னெஞ்சு உருக்கிக், கருணையினால் ஆண்டுகொண்ட,
அன்னம் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னம் கழலுக்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 11

பிழை பொறுக்கும் பெருமை

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்,
பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்,
' சீ ' யேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 12

இருவரே அறிந்ததும், உலகமெல்லாம் அறிந்ததும்

நான்தனக்கு அன்பின்மை நானும், தானும்,அறிவோம்;
தானென்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்;
ஆன கருணையும் அங்குற்றே தான்;அவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய்; கோத்தும்பீ! 13

அப்புறமும், இப்புறமும்

கருவாய், உலகினுக்கு அப்புறமாய், இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி,
அருவாய், மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 14

தேன் உந்து சேவடி

நானும்,என் சிந்தையும், நாயகனுக்கு எவ்விடத்தோம்
தானும்,தன் தையலும், தாழ்சடையோன் ஆண்டிலனேல்?
வானும், திசைகளும், மாகடலும், ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 15

வான் கருணை

உள்ளப் படாத திருவுருவை உள்ளுதலும்,
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்,எம் பிரான்,என்னை வேறேஆட் –
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 16

என் ஆருயிர்

பொய்யாய செல்வத்தே புக்கு,அழுந்தி, நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை, ஆட்கொண்ட
ஐயா!என் ஆருயிரே! அம்பலவா! என்று,அவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 17

பழங்கோலம்

தோலும், துகிலும்; குழையும், சுருள்தோடும்;
பால்வெள்ளை நீறும், பசுஞ்சாந்தும்; பைங்கிளியும்,
சூலமும்; தொக்க வளையும்; உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்; கோத்தும்பீ! 18

இகழாது வந்தான்

“ கள்வன், கடியன், கலதி,இவன் ” என்னாதே,
வள்ளல், வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத்து உறுதுயர், ஒன்றொழியா வண்ணம்,எல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 19

இறுமாந்தேன்

பூமேல் அயனோடு, மாலும் ‘புகலரிது’ என்று
ஏமாறி நிற்க, அடியேன் இறுமாக்க,
நாய்மேல் தவிசிட்டு, நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய்; கோத்தும்பீ! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் ஞானப்பூங்கோதை அம்மை உடனமர்
அருள்மிகு காளத்திநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

11. திருத்தெள்ளேணம்

திருத்தில்லையில் அருளியது; சிவனோடு அடைவு
கைகளைக் கொட்டிக் கொண்டு மகளிர் ஈடுபடும் ஒருவகை விளையாட்டு
(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பேராயிரமுடைய பெருமான்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை,
உருநாம் அறிய,ஓர் அந்தணனாய், ஆண்டுகொண்டான்;
ஒருநாமம், ஓருருவம், ஒன்றுமில்லாற்கு, ஆயிரம்
திருநாமம் பாடி,நாம் தெள்ளேணம் கொட்டாமோ! 1

பிறவி ஒழித்தான்

திருவார் பெருந்துறை மேயபிரான், என்பிறவிக்
கருவேர் அறுத்தபின், யாவரையும் கண்டதில்லை;
அருவாய், உருவமும் ஆயபிரான், அவன்மருவும்
திருவாரூர் பாடி,நாம் தெள்ளேணம் கொட்டாமோ! 2

நம்மை உருக்கும் சிவம்

அரிக்கும், பிரமற்கும், அல்லாத தேவர்கட்கும்,
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம், வந்து,நம்மை
உருக்கும் , பணிகொள்ளும், என்பதுகேட்டு, உலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 3

புது ஒளி

அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்து,என்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும், நாம்ஒழிந்து,
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 4

உளம் புகுந்த திரு

அருமந்த தேவர், அயன்,திருமாற்கு, அரியசிவம்
உருவந்து, பூதலத்தோர் உகப்பெய்தக், கொண்டருளிக்,
கருவெந்து வீழக் கடைக்கணித்து,என் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 5

ஆனந்தக் கண்ணீர்

அரையாடு நாகம் அசைத்தபிரான், அவனியின்மேல்,
வரையாடு மங்கைதன் பங்கொடும்,வந்து, ஆண்டதிறம்
உரையாட, உள்ளொளியாட, ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 6

வலிந்து ஆண்டு கொண்டான்

ஆ!ஆ! அரி,அயன், இந்திரன்,வானோர்க்கு, அரியசிவன்,
'வா,வா' என் றென்னையும் பூதலத்தேவலித் தாண்டுகொண்டான்;
பூவார் அடிச்சுவடு என்தலைமேல் பொறித்தலுமே,
தேவான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 7

மறந்தும் மறவேன்

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போடு இறப்பென்னும்
அறம்,பாவம்,என்றிரண்டு அச்சந்தவிர்த்து,என்னை ஆண்டுகொண்டான்
மறந்தேயும் தன்கழல்நான் மறவாவண்ணம் நல்கிய,அத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ! 8

கல்லில் நார் உரித்தான்

கல்நார் உரித்தென்ன, என்னையுந்தன் கருணையினால்
பொன்னார் கழல்பணித்து, ஆண்டபிரான் புகழ்பாடி,
மின்னேர் நுடங்கிடைச், செந்துவர்வாய், வெண்ணகையீர்!
'தென்னா, தென்னா'என்று தெள்ளேணம் கொட்டாமோ! 9

கனவு அன்று

கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவளைத் தோளியொடும் புகுந்தருளி,
நனவே எனைப்பிடித்து, ஆட்கொண்டவா நயந்து,நெஞ்சம்,
சினவேற் கண்நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ! 10

மயல் மாண்டது

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்,எனைக்கலந் தாண்டலுமே,
அயல்மாண்டு, அருவினைச் சுற்றமும்மாண்டு, அவனியின்மேல்
மயல்மாண்டு, மற்றுள்ள வாசகம்மாண்டு, என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 11

தித்திக்கும் பத்திக் கடல்

முத்திக்கு உழன்று முனிவர்குழாம் நனிவாட,
அத்திக்கு அருளி; அடியேனை ஆண்டுகொண்டு,
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி,
தித்திக்கு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 12

தன் அடிக்கே ஆளாக்கினான்

பார்பாடும், பாதாளர் பாடும்,விண்ணோர் தம்பாடும்,
ஆர்பாடும், சாரா வகையருளி, ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி, நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடி,நாம் தெள்ளேணம் கொட்டாமோ! 13

நுண்ணியனாய் வந்தான்

மாலே, பிரமனே, மற்றொழிந்த தேவர்களே,
நூலே, நுழைவரியான், நுண்ணியனாய் வந்து,அடியேன்
பாலே புகுந்து, பரிந்துருக்கும் பாவகத்தால்,
சேலேர் கண்நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ! 14

பருகற்கு இனிய கருணை

உருகிப் பெருகி, உளங்குளிர முகந்துகொண்டு,
பருகற்கு இனிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித், திகழ்தென்னன் வார்கழலே நினைந்து,அடியோம்
திருவைப் பரவி,நாம் தெள்ளேணம் கொட்டாமோ! 15

என்றும் புதியவன்

புத்தன்; புரந்தராதியர் அயன்மால் போற்றிசெயும்
பித்தன்; பெருந்துறை மேயபிரான்; பிறப்பறுத்த
அத்தன்; அணிதில்லை அம்பலவன்; அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ! 16

தடுமாற்றம் தவிர்ந்தது

உவலைச் சமயங்கள், ஒவ்வாத சாத்திரம்,ஆம்
சவலைக் கடல்உளனாய்க் கிடந்து, தடுமாறும்
கவலைக் கெடுத்துக், கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவி,நாம் தெள்ளேணம் கொட்டாமோ! 17

எல்லாம் அவன் அடியில் ஒடுங்கியது

வான்கெட்டு, மாருதம்மாய்ந்து, அழல்,நீர், மண்,கெடினும்,
தான்கெட்டல் இன்றிச், சலிப்பறியாத் தன்மையனுக்கு,
ஊன்கெட்டு, உயிர்கெட்டு, உணர்வுகெட்டு,என் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ! 18

கண்ணார வந்து நின்றான்

விண்ணோர் முழுமுதல்; பாதாளத் தார்வித்து;
மண்ணோர் மருந்து;அயன், மாலுடைய வைப்பு;அடியோம்
கண்ணார, வந்துநின்றான்; கருணைக் கழல்பாடித்,
'தென்னா, தென்னா'என்று தெள்ளேணம் கொட்டாமோ! 19

அவன் ஆடலைப்பாடுவோம்

குலம்பாடிக், கொக்கிறகும் பாடிக், கோல்வளையாள்
நலம்பாடி, நஞ்சுண்ட வாபாடி, நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடி,நாம் தெள்ளேணம் கொட்டாமோ! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் அழகாலமர்ந்த நாயகி உடனமர்
அருள்மிகு பூந்தோட்ட நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

12. திருச்சாழல்

திருத்தில்லையில் அருளியது ; சிவனுடைய கருணை
தடையும் விடையுமாக அமைந்த திருப்பாட்டு
(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

எல்லா உயிர்க்கும் இயல்பு ஆனான்

பூசுவதும் வெண்ணீறு, பூண்பதுவும் பொங்கரவம்,
பேசுவதும் திருவாயால் மறைபோலும்? காண்,ஏடீ!
பூசுவதும், பேசுவதும், பூண்பதுவும், கொண்டென்னை?
ஈசனவன், எவ்வுயிர்க்கும் இயல்பானான்; சாழலோ! 1

எல்லார்க்கும் ஈசன்

என்னப்பன், எம்பிரான், எல்லார்க்கும் தான்ஈசன்;
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்?ஏடீ!
மன்னுகலை, துன்னுபொருள் மறைநான்கே, வான்சரடாத்,
தன்னையே கோவணமாச், சாத்தினன்,காண்; சாழலோ! 2

தான் தனியன் : ஆனால்?

கோயில் சுடுகாடு, கொல்புலித்தோல் நல்லாடை,
தாயுமிலி, தந்தையிலி, தான்தனியன்; காண்;ஏடீ!
தாயுமிலி, தந்தையிலி, தான்தனியன்; ஆயிடினும்,
காயில், உலகனைத்தும் கற்பொடி,காண் சாழலோ! 3

தண்டித்தால் வெற்றியே

அயனை, அநங்கனை, அந்தகனைச், சந்திரனை,
வயனங்கள் மாயா வடுச்செய்தான்; காண்,ஏடீ!
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்,
சயமன்றோ வானவர்க்குத், தாழ்குழலாய்? சாழலோ! 4

மறக் கருணை

தக்கனையும், எச்சனையும், தலையறுத்துத், தேவர்கணம்
தொக்கனவந்து அவர்தம்மைத் தொலைத்ததுதான் என்?ஏடீ!
தொக்கனவந்து அவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்து,
– அங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற்று அருளினன்,காண்; சாழலோ! 5

ஆணவம் ஒழித்த அழல்

அலரவனும், மாலவனும், அறியாமே, அழலுருவாய்,
நிலமுதற்கீழ், அண்டமுற, நின்றதுதான் என்?ஏடீ!
நிலமுதற்கீழ், அண்டமுற, நின்றிலனேல், இருவரும்தம்
சலமுகத்தால், ஆங்காரம் தவிரார்,காண்; சாழலோ! 6

வெள்ளம் காத்த சடை

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே, மற்றொருத்தி
சலமுகத்தால், அவன்சடையில் பாயுமது என்?ஏடீ!
சலமுகத்தால் அவன்சடையில் பாய்ந்திலளேல், தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து, பெருங்கேடாம்; சாழலோ! 7

உலகம் பிழைக்க உண்ட நஞ்சு

கோலாலம் ஆகிக், குரைகடல்வாய், அன்று,எழுந்த
ஆலாலம் உண்டான்; அவன்சதுர்தான் என்?ஏடீ!
ஆலாலம் உண்டிலனேல், அன்றயன்,மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண்; சாழலோ! 8

உலகம் வாழ பெண் உகந்தான்

தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான்; பெரும்பித்தன் காண்;ஏடீ!
பெண்பால் உகந்திலனேல், பேதாய்! இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி, வீடுவர்காண்; சாழலோ! 9

ஆனந்தவான் பொருள்

தானந்தம் இல்லான், தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான், காண்;ஏடீ!
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்,
வானுந்து தேவர்கட்கு,ஓர் வான்பொருள்,காண்; சாழலோ! 10

நங்காய்! இதென்னதவம்? நரம்போடு எலும்பணிந்து,
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காண்;ஏடீ!
கங்காளம் ஆமாகேள்; காலாந்த ரத்துஇருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண்; சாழலோ! 11

ஆட்படுவார் யார்? வழியடியாரைப் பார்

கானார் புலித்தோல், உடை;தலை,ஊண்; காடு,பதி;
ஆனால், அவனுக்கிங்கு ஆட்படுவார் ஆர்?ஏடீ!
ஆனாலும், கேளாய்; அயனும், திருமாலும்,
வானாடர் கோவும், வழியடியார்; சாழலோ! 12

கலைமணம் காத்த திருமணம்

மலையரையன் பொற்பாவை, வாள்நுதலாள், பெண்திருவை
உலகறியத், தீவேட்டான் என்னுமது என்?ஏடீ!
உலகறியத், தீவேளாது ஒழிந்தனனேல், உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்கள்,எல்லாம் கலங்கிடுங்காண்; சாழலோ! 13

வெறியாட்டம் வென்ற களியாட்டம்

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்,
தான்புக்கு நட்டம் பயிலுமது என்?ஏடீ!
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல், தரணியெல்லாம்,
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண்; சாழலோ! 14

உகந்தது உலகம் காக்கும் எருது

கடகரியும், பரிமாவும், தேரும்,உகந்து ஏறாதே,
இடபம்உகந்து ஏறியவாறு, எனக்கறிய இயம்பு;ஏடீ!
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபம்அதாய்த் தாங்கினான் திருமால்காண்; சாழலோ! 15

அறமும் வேண்டும் மறமும் வேண்டும்

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை,
அன்று,ஆலின் கீழிருந்து,அங்கு, அறமுரைத்தான், காண்;ஏடீ!
அன்று,ஆலின் கீழிருந்து,அங்கு, அறமுரைத்தான் ஆயிடினும்,
கொன்றான்காண், புரமூன்றும் கூட்டோடே; சாழலோ! 16

அம்பலத்தானை யாவர் அறிவார் ?

அம்பலத்தே கூத்தாடி, அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும், தேவனென்று நண்ணுமது என்?ஏடீ!
நம்பனையும் ஆமாகேள்; நான்மறைகள் தாமறியா,
'எம்பெருமான், ஈசா!'வென்று ஏத்தினன்,காண்; சாழலோ! 17

மலர் வழிபாட்டின் பயன்

சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி,
நலமுடைய நாரணற்கு,அன்று, அருளியவாறு என்? ஏடீ!
நலமுடைய நாரணன்,தன் நயனம்இடந்து, அரனடிக்கீழ்
அலராக இட,ஆழி அருளினன்காண்; சாழலோ! 18

தன் பெருமை தான் அறியான்

அம்பரமாம், புள்ளித்தோல்; ஆலாலம், ஆரமுதம்;
எம்பெருமான் உண்டசதுர், எனக்கறிய இயம்பு;ஏடீ?
எம்பெருமான் ஏதுடுத்து,அங்கு ஏதமுது செய்திடினும்,
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண்; சாழலோ! 19

உலகு இயற்கை உணர வேண்டாமா?

அருந்தவருக்கு, ஆலின்கீழ், அறமுதலா நான்கினையும்
இருந்து,அவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பு;ஏடீ!
அருந்தவருக்கு, அறமுதல்நான்கு அன்றருளிச் செய்திலனேல்,
திருந்த,அவருக்கு, உலகியற்கை தெரியா,காண்; சாழலோ! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் ஏலவார்க்குழலி அம்மை உடனமர்
அருள்மிகு விற்குடி வீரட்டநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

13. திருப்பூவல்லி

திருத்தில்லையில் அருளியது; மாயாவிசயம் நீக்குதல்
மலர்கள் கொய்யும் போது மகளிர் சிவபெருமான் புகழைப் பாடுதல்
(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

அவன் அருள் பெற்றேன் பிற ஒழிந்தேன்

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே,
துணையான சுற்றங்கள் அத்தனையும், துறந்தொழிந்தேன்;
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ! 1

கட்டு அறுத்த தேன்

எந்தை,எம்தாய்,சுற்றம், மற்றுமெல்லாம், என்னுடைய
பந்தம் அறுத்து,என்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்;
அந்த இடைமருதில், ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவி,நாம் பூவல்லி கொய்யாமோ! 2

வினை ஒழிந்தது

நாயிற் கடைப்பட்ட நம்மையும்ஓர் பொருட்படுத்துத்,
தாயிற் பெரிதும் தயாவுடைய தம்பெருமான்,
மாயப் பிறப்பறுத்து ஆண்டான்;என் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ! 3

மறக்கருணை

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே,
எண்பட்ட தக்கன், அருக்கன்,எச்சன், இந்து,அனல்,
விண்பட்ட பூதப் படை,வீர பத்திரரால்
புண்பட்ட வா,பாடிப் பூவல்லி கொய்யாமோ! 4

நாடி வந்தான், ஆடி நின்றேன்

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்,
ஊனாடி, நாடிவந்து, உள்புகுந்தான்; உலகர்முன்னே
நானாடி ஆடிநின்று, ஓலமிட; நடம்பயிலும்,
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ! 5

நான்கு மூன்று

எரிமூன்று, தேவர்க்கு இரங்கி,அருள் செய்தருளிச்,
சிரமூன்று அறத்,தன் திருப்புருவம் நெரித்தருளி,
உருமூன்று மாகி, உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ! 6

வணங்க, வாழ்த்த, இணங்க

வணங்கத், தலைவைத்து; வார்கழல்,வாய் வாழ்த்தவைத்து,
இணங்கத்,தன் சீரடியார் கூட்டமும்வைத்து; எம்பெருமான்,
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே, ஆடுகின்ற
குணங்கூரப் பாடி,நாம் பூவல்லி கொய்யாமோ! 7

நெறி அருளினான் : முறி முறிந்தது

நெறிசெய்து அருளித்,தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டு,என்னை ஆண்டபிரான் குணம்பரவி,
முறிசெய்து, நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வா,பாடிப் பூவல்லி கொய்யாமோ! 8

பல் நாள் பரவப் பாதமலர் அருளினான்

பன்னாள் பரவிப் பணிசெய்யப், பாதமலர்
என்ஆகம் துன்னவைத்த பெரியோன், எழிற்சுடராய்க்
கல்நார் உரித்து,என்னை ஆண்டுகொண்டான்; கழலிணைகள்
பொன்னான வா,பாடிப் பூவல்லி கொய்யாமோ! 9

என் தலைமேல் வைத்த திருவடி

பேராசையாம் இந்தப் பிண்டமறப், பெருந்துறையான்,
சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்,
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி,
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ! 10

குளிர்ந்த கோலம்

பாலும், அமுதமும், தேனுடனாம், பராபரமாய்க்,
கோலம் குளிர்ந்து,உள்ளம் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம்; அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ! 11

கூடுதல் இயலுமோ?

வானவன், மால்,அயன், மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவ னாய்நின்று, கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்யப்,
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ! 12

மாமுனிவர் ஏத்த மறை அருளினான்

அன்று,ஆல நீழற்கீழ் அருமறைகள், தானருளி,
நன்றாக வானவர், மாமுனிவர், நாள்தோறும்,
நின்று,ஆர ஏத்தும் நிறைகழலோன், புனைகொன்றைப்
பொன்தாது பாடி,நாம் பூவல்லி கொய்யாமோ! 13

என் உள்ளத்தில் தீட்டிய ஓவியம்

படமாக, என்னுள்ளே, தன்னிணைப்போது அவையளித்து,இங்கு,
இடமாகக் கொண்டிருந்து ஏகம்பம் மேயபிரான்,
தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா,
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ! 14

மறக்கருணை

அங்கி, அருக்கன், இராவணன், அந்தகன்,கூற்றன்,
செங்கண் அரி,அயன், இந்திரனும், சந்திரனும்,
பங்கமில் தக்கனும், எச்சனும்,தம் பரிசழியப்,
பொங்கியசீர் பாடி,நாம் பூவல்லி கொய்யாமோ! 15

பணி செய்து, பணி கொண்டான்

திண்போர் விடையான், சிவபுரத்தார் போரேறு,
மண்பால், மதுரையில் பிட்டமுது செய்தருளித்,
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட,
புண்பாடல் பாடி,நாம் பூவல்லி கொய்யாமோ! 16

என் உள்ளத்து உளான்

முன்னாய மாலயனும், வானவரும், தானவரும்,
பொன்னார் திருவடி தாமறியார்; போற்றுவதே?
என்னாகம் உள்புகுந்து ஆண்டுகொண்டான், இலங்கணியாம்
பன்னாகம் பாடி,நாம் பூவல்லி கொய்யாமோ! 17

அகம் மகிழும் சிலம்பு ஒலி

சீரார் திருவடித், திண்சிலம்பு, சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய், அடியேன் அகமகிழத்,
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான், திருநடஞ்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ! 18

புத்தி புகுந்தான்

அத்தி உரித்து,அது போர்த்தருளும் பெருந்துறையான்,
பித்த வடிவுகொண்டு, இவ்வுலகில் பிள்ளையுமாம்,
முத்தி முழு-முதல் உத்தரகோச மங்கைவள்ளல்,
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ! 19

குற்றேவல் கொண்டான்

மாவார ஏறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப், பெருந்துறையான்,
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்,
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பெருநலமுலை அம்மை உடனமர்
அருள்மிகு மருதவாணர் திருவடிகள் போற்றி ! போற்றி !

14. திருவுந்தியார்

திருத்தில்லையில் அருளியது; ஞானவெற்றி
மகளிர் உந்திக் குதித்து விளையாடும் போது சிவபெருமான் புகழைப் பாடுதல்
(கலித்தாழிசை)

திருச்சிற்றம்பலம்

வில் வளைந்தது, முப்புரம் உளைந்தது

வளைந்தது வில்லு; விளைந்தது பூசல்;
உளைந்தன முப்புரம் உந்தீ பற!
ஒருங்குடன் வெந்தவாறு உந்தீ பற! 1

அம்பும் வேண்டுமோ

ஈரம்பு கண்டிலம், ஏகம்பர் தங்கையில்;
ஓரம்பே முப்புரம் உந்தீ பற!
ஒன்றும் பெருமிகை உந்தீ பற! 2

அச்சு முறிந்தது, அழிந்தன முப்புரம்

தச்சு விடுத்தலும், தாமடி இட்டலும்,
அச்சு முறிந்ததென்று உந்தீ பற!
அழிந்தன முப்புரம் உந்தீ பற! 3

காவலுக்கு மூவர்

உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல்கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தீ பற!
இளமுலை பங்கனென்று உந்தீ பற! 4

ஓடினார் தேவர்கள்

சாடிய வேள்வி சரிந்திடத், தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீ பற!
உருத்திர நாதனுக்கு உந்தீ பற! 5

திருமால் பிழைத்தார்

ஆ!ஆ! திருமால், அவிப்பாகம் கொண்டு,அன்று,
சாவாது இருந்தானென்று உந்தீ பற!
சதுர்முகன் தாதையென்று உந்தீ பற! 6

கை இழந்த தீக்கடவுள்

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென்று உந்தீ பற!
கலங்கிற்று வேள்வியென்று உந்தீ பற! 7

மகளை இகழலாமோ

பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னே?ஏடி! உந்தீ பற!
பணைமுலை பாகனுக்கு உந்தீ பற! 8

இந்திரன் குயிலானான்

புரந்தரனார் ஒரு பூங்குயில் ஆகி,
மரந்தனில் ஏறினார் உந்தீ பற!
வானவர் கோனென்றே உந்தீ பற! 9

தலைவன் தலை இழந்தான்

வெஞ்சின வேள்வி வியாத்திரனார் தலை
துஞ்சின வாபாடி உந்தீ பற!
தொடர்ந்த பிறப்பற உந்தீ பற! 10

ஆட்டுத் தலையைக் கூட்டியது

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீ பற!
கொங்கை குலுங்கநின்று உந்தீ பற! 11

ஒருவன் கண் இழந்தான்

உண்ணப் புகுந்த பகனொளித்து ஓடாமே,
கண்ணைப் பறித்தவாறு உந்தீ பற!
கருக்கெட, நாமெலாம் உந்தீ பற! 12

எவ்வளவு கேடு

நாமகள்நாசி, சிரம் பிரமன், படச்,
சோமன் முகம்நெரித்து உந்தீ பற!
தொல்லை வினைகெட உந்தீ பற! 13

ஓட வழி எங்கே

நான்மறையோனும், மகத்து இயமான் படப்
போம்வழி தேடுமாறு உந்தீ பற!
புரந்தரன் வேள்வியில் உந்தீ பற! 14

பல் இழந்தான்

சூரியனார் தொண்டை வாயினில் பற்களை
வாரி, நெரித்தவாறு உந்தீ பற!
மயங்கிற்று வேள்வியென்று உந்தீ பற! 15

வேள்வி தொலைந்தது

தக்கனார், அன்றே, தலையிழந்தார்; தக்கன்
மக்களைச் சூழநின்று உந்தீ பற!
மடிந்தது வேள்வியென்று உந்தீ பற! 16

பால் கொடுத்த தாதை

பாலக னார்க்கு,அன்று, பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீ பற!
குமரன்தன் தாதைக்கே உந்தீ பற! 17

நான்முகன் அந்தோ!

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை அரிந்ததென்று உந்தீ பற!
உகிரால் அரிந்ததென்று உந்தீ பற! 18

இராவணன் ஆணவத்தால் வந்த கேடு

தேரை நிறுத்தி, மலையெடுத்தான் சிரம்
ஈரைந்தும் இற்றவாறு உந்தீ பற!
இருபதும் இற்றதென்று உந்தீ பற! 19

எல்லோர்க்கும் காவல்

ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவலென்று உந்தீ பற!
அதற்கப்பாலும் காவலென்று உந்தீ பற! 20

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் சிவகாமி அம்மை உடனமர்
அருள்மிகு ஞானப் பெருங்கூத்தர் திருவடிகள் போற்றி ! போற்றி !

15. திருத்தோணோக்கம்

திருத்தில்லையில் அருளியது; பிரபஞ்ச சுத்தி
ஒருவர் தோளை ஒருவர் பார்த்துக் கொண்டு விளையாடும் மகளிர் விளையாட்டு
(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பொய்யை மெய் என மயங்கோம்

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே, எனக்கருதிப்,
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம் ஆகாமே,
தீர்த்தாய்; திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா!உன் சேவடி கூடும்வண்ணம் தோணோக்கம்! 1

பிறப்பு இறப்பு என மயங்கோம்

என்றும் பிறந்து,இறந்து, ஆழாமே, ஆண்டுகொண்டான்;
கன்றால் விளவெறிந்தான், பிரமன், காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை அம்பலவன்; குணம்பரவித்,
துன்றார் குழலினீர்! தோணோக்கம் ஆடாமோ! 2

கோடையைக் குளிர்வித்த சேடை

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்,
செருப்புற்ற சீரடி, வாய்க்கலசம், ஊனமுதம்,
விருப்புற்று, வேடனார் சேடறிய; மெய்குளிர்ந்து,அங்கு
அருட்பெற்று, நின்றவா தோணோக்கம் ஆடாமோ! 3

சொல்ல வழிதந்த கருணை

கற்போலும் நெஞ்சம் கசிந்துருகக், கருணையினால்
நிற்பானைப் போல,என் நெஞ்சினுள்ளே புகுந்தருளி,
நற்பால் படுத்தென்னை, நாடறியத் தான்இங்ஙன்,
சொற்பாலது ஆனவா தோணோக்கம் ஆடாமோ! 4

ஒருவன் பலவானான்

நிலம்,நீர், நெருப்பு,உயிர் நீள்விசும்பு, நிலாப்,பகலோன்,
புலனாய மைந்தனோடு, எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்

உலகேழ் எனத்,திசை பத்தெனத்,தான் ஒருவனுமே
பலவாகி, நின்றவா தோணோக்கம் ஆடாமோ! 5

சித்தத்தைச் சிவமாக்கிய கருணை

புத்தன் முதலாய, புல்லறிவில் பல்சமயம்,
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்,
சித்தம் சிவமாக்கிச், செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ! 6

சண்டீசர்

தீதில்லை; மாணி, சிவகருமம், சிதைத்தானைச்,
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப, ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்! 7

எல்லாம் மறந்தோம்

மானம் அழிந்தோம்; மதிமறந்தோம்; மங்கைநல்லீர்!
வானம் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்;
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்,நாம், அவ்வணமே
ஆனந்த மாகிநின்று ஆடாமோ தோணோக்கம்! 8

காவலரின் தொன்மை

எண்ணுடை மூவர் இராக்கதர்கள், எரிபிழைத்துக்,
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்,
எண்ணிலி இந்திரர், எத்தனையோ பிரமர்களும்,
மண்மிசை மால்பலர், மாண்டனர்காண் தோணோக்கம்! 9

கண் மலர் அளித்த கண்ணன்

பங்கயம் ஆயிரம் பூவினில்,ஓர் பூக்குறையத்,
தங்கண் இடந்து,அரன் சேவடிமேல் சாத்தலுமே,
சங்கரன், எம்பிரான், சக்கரம்மாற்கு அருளியவாறு,
எங்கும் பரவி,நாம் தோணோக்கம் ஆடாமோ! 10

தூய்மையாயின

காமன் உடல்;உயிர், காலன்;பல் காய்கதிரோன்;
நாமகள் நாசி; சிரம்,பிரமன்; கரம்,எரியைச்;
சோமன் கலை;தலை தக்கனையும், எச்சனையும்;
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ! 11

ஆணவம் தொலைத்த அழல்

பிரமன், அரி,என்ற இருவரும்,தம் பேதைமையால்,
'பரமம், யாம்பரம்' என்றவர்கள் பதைப்பொடுங்க,
அரனார், அழலுருவாய், அங்கே, அளவிறந்து,
பரமாகி, நின்றவா தோணோக்கம் ஆடாமோ! 12

பொழுது போக்கிப் புறக்கணித்தேன்

ஏழைத் தொழும்பனேன், எத்தனையோ, காலமெல்லாம்,
பாழுக்கு இறைத்தேன், பரம்பரனைப் பணியாதே;
ஊழிமுதல், சிந்தாத நன்மணி,வந்து, என்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ! 13

உளம் புகுந்தான், உயர்ந்தேன்

உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந்து, உளம்புகலும்,
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே,
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்,
துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ! 14

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு பஞ்சப்பள்ளி நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

16. திருப்பொன்னூசல்

திருத்தில்லையில் அருளியது; அருட்சுத்தி
ஊஞ்சலில் ஆடிக்கொண்டே சிவபெருமானைப் புகழ்ந்து பாடுதல்
(ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

ஆரா அமுதின் அருள்

சீரார் பவளங்கால், முத்தம் கயிறு,ஆக
ஏராரும் பொற்பலகை ஏறி, இனிதமர்ந்து,
நாரா யணன்அறியா நாண்மலர்த்தாள், நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடிப்,
போரார்வேட் கண்மடவீர்! பொன்னூசல் ஆடாமோ! 1

திருவடித்தேன் தித்திக்கின்றது

மூன்று,அங்கு இலங்கு நயனத்தன், மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்,
தேன்தங்கித், தித்தித்து, அமுதூறித், தான்தெளிந்து,அங்கு,
ஊன்தங்கி நின்று,உருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங்கு இடைமருது பாடிக், குலமஞ்ஞை
போன்று,அங்கு, அனநடையீர்! பொன்னூசல் ஆடாமோ! 2

திருநீறு பூசப்பட்டேன்

முன்,ஈறும், ஆதியும் இல்லான்; முனிவர்குழாம்,
பன்னூறு கோடி இமையோர்கள், தாம்நிற்பத்,
தன்நீறு எனக்கருளித், தன்கருணை வெள்ளத்து
மன்னூற, மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மாளிகை பாடிப்,
பொன்னேறு பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 3

தூய புகழ் பாடுவோம்

நஞ்சமர் கண்டத்தன்; அண்டத் தவர்நாதன்;
மஞ்சுதோய் மாட,மணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடும் கூடி, அடியவர்கள்
நெஞ்சுளே நின்று,அமுதம் ஊறிக், கருணைசெய்து,
துஞ்சல், பிறப்பறுப்பான்; தூய புகழ்பாடிப்,
புஞ்சமார் வெள்வளையீர்! பொன்னூசல் ஆடாமோ! 4

உய்யக்கொண்ட கூத்தன்

ஆணோ, அலியோ, அரிவையோ, என்றிருவர்;
காணாக் கடவுள்; கருணையினால், தேவர்குழாம்
நாணாமே உய்ய,ஆட் கொண்டருளி, நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன்; குணம்பரவிப்,
பூணார் வனமுலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 5

குற்றம் நீக்கி ஆண்டான்

மாதாடு பாகத்தன்; உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான்; அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு,என் தொல்பிறவித்
தீதோடா வண்ணம் திகழப், பிறப்பறுப்பான்;
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 6

பணிந்தார் பாவங்கள் போக்குவான்

உன்னற்கு அரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த, மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப், பாவங்கள் பற்றறுப்பான்;
அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில்போல்
என்னத்தன்; என்னையும்ஆட் கொண்டான்; எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 7

அகம் குழைந்து ஆடுவோம்


கோல வரைக்குடுமி வந்து, குவலயத்துச்
சால அமுதுண்டு, தாழ்கடலின் மீதெழுந்து,
ஞால மிகப்,பரிமேல் கொண்டு, நமையாண்டான்;
சீலம் திகழும்திரு உத்தர கோசமங்கை,
மாலுக்கு அரியானை, வாயார நாம்பாடிப்,
பூலித்து, அகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ! 8

கொன்றைச் சடையான் குணம் பரவுவோம்

தெங்குலவு சோலைத்திரு உத்தர கோசமங்கை
தங்கு,உலவு சோதித் தனியுருவம் வந்தருளி,
எங்கள் பிறப்பறுத்திட்டு, எந்தரமும் ஆட்கொள்வான்,
பங்குலவு கோதையும், தானும், பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான், குணம்பரவிப்,
பொங்குலவு பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ! 9

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மங்களநாயகி அம்மை உடனமர்
அருள்மிகு மங்களநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



17. அன்னைப்பத்து

திருத்தில்லையில் அருளியது ; ஆத்தும பூரணம்
சிவபெருமானிடத்து மாறாத பற்றுக் கொண்டு பாடுதல்
(கலிவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

இந்நாதனாரே நாதர்

வேத மொழியர், வெண்ணீற்றர், செம்மேனியர்,
நாதப் பறையினர்; அன்னே! என்னும்:
நாதப் பறையினர், நான்முகன் மாலுக்கும்
நாதர், இந்நாதனார்; அன்னே! என்னும். 1

ஆனந்தக் கண்ணீர் தருகிறார்

கண்ணஞ் சனத்தர், கருணைக் கடலினர்,
உண்ணின்று உருக்குவர்; அன்னே! என்னும்:
உண்ணின்று உருக்கி, உலப்பிலா, ஆனந்தக்
கண்ணீர் தருவரால்; அன்னே! என்னும். 2

சித்தத்து அழகியார்

நித்த மணாளர், நிரம்ப அழகியர்,
சித்தத்து இருப்பரால்; அன்னே! என்னும்:
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர், ஆனந்தரால்; அன்னே! என்னும். 3

என் உள்ளம் வாடும்

ஆடரப், பூண்;உடைத், தோல்;பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவாறு! அன்னே! என்னும்:
வேடம் இருந்தவா, கண்டுகண்டு, என்னுள்ளம்
வாடும்; இதுஎன்னே! அன்னே! என்னும். 4

ஓடும் உள்ளத்தை ஒடுக்கினார்

நீண்ட கரத்தர், நெறிதரு குஞ்சியர்,
பாண்டி நன்னாடரால்; அன்னே! என்னும்:

பாண்டி நன்னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டு,அன்பு செய்வரால்; அன்னே! என்னும். 5

என்ன அதிசயம்

உன்னற்கு அரியசீர் உத்தர மங்கையர்,
மன்னுவது என்நெஞ்சில்; அன்னே! என்னும்:
மன்னுவது என்நெஞ்சில்; மால்,அயன், காண்கிலார்;
என்ன அதிசயம்! அன்னே! என்னும். 6

உள்ளம் கவர்ந்தார்

வெள்ளைக் கலிங்கத்தர், வெண்திரு முண்டத்தர்,
பள்ளிக் குப்பாயத்தர்; அன்னே! என்னும்:
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரி மேற்கொண்டு,என்
உள்ளங் கவர்வரால்; அன்னே! என்னும். 7

ஆளும் அடிகளார்

தாளி அறுகினர், சந்தனச் சாந்தினர்,
ஆளெம்மை ஆள்வரால்; அன்னே! என்னும்:
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாளம் இருந்தவாறு! அன்னே! என்னும். 8

என் உள்ளம் நைகின்றதே!

தையலோர் பங்கினர், தாபத வேடத்தர்,
ஐயம் புகுவரால்! அன்னே! என்னும்:
ஐயம் புகுந்து,அவர் போதலும், என்னுள்ளம்
நையும்; இதுஎன்னே! அன்னே! என்னும். 9

பித்தேறினேன்

கொன்றை மதியமும், கூவிள, மத்தமும்,
துன்றிய சென்னியர்; அன்னே! என்னும்:
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே,
இன்றெனக்கு ஆனவாறு! அன்னே! என்னும். 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு நந்தம்பாடி நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

18. குயில்பத்து

திருத்தில்லையில் அருளியது; ஆத்தும இரக்கம்
சிவபெருமானிடத்துக் குயிலைத் தூது அனுப்பிப் பாடுவது
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

சொல்லுக்கு அடங்காதது

கீதம் இனிய குயிலே! கேட்டியேல், எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில், பாதாளம் ஏழினுக்கு அப்பால்;
சோதி மணிமுடி சொல்லில், சொல்லிறந்து நின்ற தொன்மை;
ஆதி; குணமொன்றும், இல்லான்; அந்தமிலான்; வரக் கூவாய்! 1

வண்டோதரிக்கு அருளினான்

ஏர்தரும் ஏழுலகு ஏத்த, எவ்வுருவும் தன் உருவாய்,
ஆர்கலி சூழ்தென் இலங்கை, அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயால், குயிலே! தென்பாண்டி நாடனைக் கூவாய்! 2

ஞாலம் விளங்க இருந்தான்

நீல உருவில் குயிலே! நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகில் திகழும் கொடிமங்கை உள்ளுறை கோயில்,
சீலம் பெரிதும் இனிய திரு உத்தரகோச மங்கை,
ஞாலம் விளங்க இருந்த நாயகனை, வரக் கூவாய்! 3

வான் பழித்து மண் புகுந்தான்

தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே! இது கேள்நீ,
வான்பழித்து, இம்மண் புகுந்து, மனிதரை ஆட்கொண்ட வள்ளல்;
ஊன்பழித்து, உள்ளம் புகுந்து,என் உணர்வது ஆய ஒருத்தன்;
மான்பழித்து ஆண்டமென் நோக்கி மணாளனை, நீவரக் கூவாய்! 4

வான் நின்று இழிந்த ஞாயிறோ?

சுந்தரத்து இன்பக் குயிலே! சூழ்சுடர் ஞாயிறு போல,
அந்தரத்தே நின்று இழிந்து,இங்கு, அடியவர் ஆசை அறுப்பான்;

முந்தும், நடுவும், முடிவும், ஆகிய மூவர் அறியாச்
சிந்துரச் சேவடி யானைச், சேவகனை, வரக் கூவாய்! 5

இன்பம் தரும் அன்பன்

இன்பம் தருவன்; குயிலே! ஏழுலகும் முழு தாளி;
அன்பன்; அமுதளித்து ஊறும் ஆனந்தன்; வான்வந்த தேவன்;
நன்பொன் மணிச்சுவடு ஒத்த நற்பரி மேல் வருவானைக்,
கொம்பின் மிழற்றும் குயிலே! கோகழி நாதனைக், கூவாய்! 6

மூவேந்தன்

உன்னை உகப்பன்; குயிலே! உன்துணைத் தோழியும் ஆவன்;
பொன்னை அழித்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்,
மன்னன், பரிமிசை வந்த வள்ளல், பெருந்துறை மேய
தென்னவன், சேரலன், சோழன், சீர்ப்புயங்கன்; வரக் கூவாய்! 7

அண்டம் கடந்த விரிசுடர்

வா,இங்கே, நீ,குயில் பிள்ளாய்! மாலொடு நான்முகன் தேடி,
ஓவி,அவர் உன்னி நிற்ப, ஒண்தழல் விண்பிளந்து ஓங்கி,
மேவி,அன்று, அண்டம் கடந்து, விரிசுடராய், நின்ற மெய்யன்;
தாவிவரும் பரிப் பாகன்; தாழ் சடையோன்; வரக் கூவாய்! 8

பொன்மேனி அமுது

காருடைப் பொன்திகழ் மேனிக், கடிபொழில் வாழுங், குயிலே!
சீருடைச் செங்கம லத்தில் திகழுரு வாகிய செல்வன்;
பாரிடைப் பாதங்கள் காட்டிப், பாசம் அறுத்து,எனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை; நீ,வரக் கூவாய்! 9

‘ என் தமராம் இவன் ’ என்றான்

கொந்தணவும் பொழிற் சோலைக் கூங்குயிலே! இது கேள்நீ;
அந்தணன் ஆகிவந்து, இங்கே, அழகிய சேவடி காட்டி,
‘எம்தமராம் இவன்’ என்று, இங்கு,என்னையும் ஆட்கொண்டு அருளும்
செந்தழல் போல் திருமேனித் தேவர்பிரான்; வரக் கூவாய்! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் தவளவெண்ணகை அம்மை உடனமர்
அருள்மிகு திருப்பாலைவன நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

19. திருத்தசாங்கம்

திருத்தில்லையில் அருளியது; அடிமை கொண்ட முறைமை
பத்து உறுப்புக்களைப் பாடும் முறையில் இறைவனைப் புகழ்வது
(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

பெயர்

ஏரார் இளங்கிளியே! எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துஉரையாய் – ஆரூரன்,
செம்பெருமான், 'வெண்மலரான், பாற்கடலான், செப்புவபோல்,
'எம்பெருமான், தேவர்பிரான்' , என்று. 1

நாடு

ஏதமிலா இன்சொல் மரகதமே! ஏழ்பொழிற்கும்
நாதன், நமைஆளுடையான், நாடுஉரையாய் – காதலவர்க்கு
அன்புஆண்டு, மீளா அருள்புரிவான் நாடு,என்றும்,
தென்பாண்டி நாடே, தெளி. 2

ஊர்

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய்! நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதிஎன்? – கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேல், சிவபுரம்போல், கொண்டாடும்
உத்தர கோசமங்கை ஊர். 3

ஆறு

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீ! நம்சிந்தைசேர்
ஐயன், பெருந்துறையான், ஆறுஉரையாய் – தையலாய்!
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தம் காண்,உடையான் ஆறு. 4

மலை

கிஞ்சுகவாய் அஞ்சுகமே! கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய் – நெஞ்சத்து

இருளகல வாள்வீசி, இன்பமரும் முத்தி
அருளுமலை என்பதுகாண், ஆய்ந்து. 5

ஊர்தி

இப்பாடே வந்து,இயம்பு; கூடுபுகல் என்?கிளியே!
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதுஎன்னே? – எப்போதும்
தேன்புரையும் சிந்தையராய்த், தெய்வப்பெண் ஏத்திசைப்ப,
வான்புரவி ஊரும், மகிழ்ந்து. 6

படை

கோற்றேன் மொழிக்கிள்ளாய்! கோதில் பெருந்துறைக்கோன்,
மாற்றாரை வெல்லும் படைபகராய் – ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக, மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண், கைக்கொள் படை. 7

முரசு

இன்பால் மொழிக்கிள்ளாய்! எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசுஇயம்பாய் – அன்பால்,
பிறவிப் பகைகலங்கப், பேரின்பத்து ஓங்கும்,
பருமிக்க நாதப் பறை. 8

மாலை

ஆய மொழிக்கிள்ளாய்! அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார்என்? – தீயவினை
நாளும் அணுகாவண்ணம் நாயேனை ஆளுடையான்,
தாளிஅறுகுஆம், உவந்த தார். 9

கொடி

சோலைப் பசுங்கிளியே! தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடிகூறாய், – சாலவும்,
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறுஆம், கொடி. 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பெரியநாயகி அம்மை உடனமர்
அருள்மிகு அழகியநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

20. திருப்பள்ளியெழுச்சி

திருப்பெருந்துறையில் அருளியது; திரோதான சுத்தி
இறைவனைத் துயில் எழுப்பும் முறையில் அவனைப் புகழ்வது
(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

புலர்ந்தது பொழுது

போற்றி!என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி,நின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு,நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடையாய்! எனை உடையாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 1

அகன்றது இருள்

அருணன்,இந் திரன்திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்
கடிமலர் மலர,மற்று அண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே!பள்ளி எழுந்தரு ளாயே! 2

எழுந்தன அனைத்தும்

கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி;ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு, நமக்குத்
தேவ!நற் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரியாய்! எமக்கு எளியாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 3

இயம்பினர் வாழ்த்து

இன்னிசை வீணையர், யாழினர், ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர், ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர், ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர், ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால்,
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு, இன்னருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 4

பாடுகின்றார், ஆடுகின்றார்

பூதங்கள் தோறும்நின் றாயெனின், அல்லால்,
'போக்கிலன், வரவிலன்' என,நினைப் புலவோர்,
கீதங்கள் பாடுதல், ஆடுதல், அல்லால்,
கேட்டறி யோம்,உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரியாய்! எங்கள் முன்வந்து,
ஏதங்கள் அறுத்து,எம்மை ஆண்டு,அருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 5

வணங்குவதே இனிமையும், இயல்பும்

பப்பற, வீட்டிருந்து உணரும்நின் அடியார்,
பந்தனை வந்தறுத் தார்;அவர் பலரும்,
மைப்புறு கண்ணியர், மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்,அணங்கின் மண வாளா!
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப்பு அறுத்து,எமை ஆண்டு,அருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 6

இவன், அவன்

அது,பழச் சுவையென, அமுதென; அறிதற்கு
அரிதென, எளிதென; அமரரும் அறியார்;
இது,அவன் திருவுரு; இவன்,அவன்; எனவே
எங்களை ஆண்டுகொண்டு, இங்கெழுந்து அருளும்,
மதுவளர் பொழில்,திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்!திருப் பெருந்துறை மன்னா!

எதுஎமைப் பணிகொளு மாறு?அது கேட்போம்;
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 7

தேடி வந்த தெய்வம்

முந்திய முதல்,நடு, இறுதியும், ஆனாய்;
மூவரும் அறிகிலர்; யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும், நீயும்,நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்,
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டி,வந் தாண்டாய்!
ஆரமு தே!பள்ளி எழுந்தரு ளாயே! 8

உலகுக்கு உயிர்

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே!உன தொழுப்படி யோங்கள்,
மண்ணகத் தேவந்து, வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்!வழி அடியோம்
கண்ணகத் தேநின்று, களிதரு தேனே!
கடலமு தே!கரும் பே!விரும் படியார்
எண்ணகத் தாய்!உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 9

மாண்புற்றது மண்ணுலகம்

“புவனியிற் போய்ப்பிற வாமையில், நாள்நாம்
போக்குகின் றோம்அவமே; இந்தப் பூமி,
சிவனுய்யக் கொள்கின்ற வாறு”என்று நோக்கித்,
திருப்பெருந் துறையுறை வாய்!திரு மாலாம்
அவன்விருப்பு எய்தவும், மலரவன் ஆசைப்
படவும்,நின் அலர்ந்தமெய்க் கருணையும், நீயும்,
அவனியிற் புகுந்து,எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தே!பள்ளி எழுந்தரு ளாயே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் யோகாம்பாள் அம்மை உடனமர்
அருள்மிகு ஆத்மநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

21. கோயில்மூத்ததிருப்பதிகம்

திருத்தில்லையில் அருளியது; அநாதியாகிய சற்காரியம்
அடியார் கூட்டத்தில் இருத்த வேண்டுவது
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

அடியார் நடுவுள் இருக்க வேண்டும்

உடையாள், உன்றன் நடுவு,இருக்கும்;
உடையாள் நடுவுள், நீயிருத்தி;
அடியேன் நடுவுள், இருவீரும்
இருப்ப தானால், அடியேன்,உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே! என்கருத்து
முடியும் வண்ணம், முன்னின்றே! 1

வழுவினேன் வா என்று அருளாயோ?

முன்னின்று ஆண்டாய், எனைமுன்னம்;
யானும், அதுவே முயல்வுற்றுப்,
பின்னின்று, ஏவல் செய்கின்றேன்;
பிற்பட்டு ஒழிந்தேன்; பெம்மானே!
என்னின்று, அருளி வரநின்று,
'போந்திடு' என்னா விடில்,அடியார்,
உன்னின்று, 'இவனார்' என்னாரோ?
பொன்னம் பலக்கூத்து உகந்தானே! 2

திருமுகம் அல்லால் திக்கு எனக்கு ஏது?

உகந்தானே! அன்புடை அடிமைக்கு;
உருகா உள்ளத்து உணர்விலியேன்,
சகந்தான் அறிய முறையிட்டால்,
' தக்க வாறன்று ' என்னாரோ?
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ, வாழ்ந்தாய்; அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்,முடிவேன்;
பொன்னம் பலத்தெம் முழுமுதலே! 3

அருள் நினைந்து அழுவது அல்லால் என் செய்வேன்?

முழுமுதலே! ஐம் புலனுக்கும்,
மூவர்க்கும், என் தனக்கும்,
வழிமுதலே! நின் பழவடியார்
திரள், வான் குழுமிக்
கெழுமுதலே! அருள் தந்திருக்க
இரங்கும் கொல்லோ? என்று
அழுமதுவே அன்றி, மற்றுஎன்
செய்கேன்? பொன்னம் பலத்தரைசே! 4

மறைய நின்ற மாமணி

' அரைசே! பொன்னம் பலத்தாடும்
அமுதே!' என்று,உன் அருள்நோக்கி,
இரைதேர் கொக்கொத்து, இரவுபகல்,
ஏசற்று இருந்தே வேசற்றேன்;
கரைசேர் அடியார் களிசிறப்பக்,
காட்சி கொடுத்து,உன் அடியேன்பால்,
பிரைசேர் பாலின் நெய்போலப்,
பேசாது இருந்தால், ஏசாரோ? 5

திருக்கோலம் சேவிப்பது எப்போது?

ஏசா நிற்பர், என்னை;உனக்கு
அடியான் என்று, பிறரெல்லாம்
பேசா நிற்பர்; யான்தானும்
பேணா நிற்பேன், நின்னருளே;
தேசா! நேசர் சூழ்ந்திருக்கும்
திரு வோலக்கம் சேவிக்க,
ஈசா! பொன்னம் பலத்தாடும்
எந்தாய்! இனித்தான் இரங்காயே! 6

அருகில் வர அழையாயோ?

' இரங்கும் நமக்குஅம் பலக்கூத்தன் '
என்றென்று, ஏமாந்து இருப்பேனை,
அருங்கற் பனைகற் பித்து,ஆண்டாய்;
ஆள்வார்இலி மாடு ஆவேனோ?
நெருங்கும் அடியார் களும்,நீயும்,
நின்று, நிலாவி, விளையாடும்

மருங்கே சார்ந்து வர,எங்கள்
வாழ்வே, 'வா'வென் றருளாயே! 7

பிரிந்தால் கூடலாகாதா?

அருளாது ஒழிந்தால், அடியேனை,
' அஞ்சேல் ' என்பார் ஆர்,இங்கு?
பொருளா, என்னைப் புகுந்து,ஆண்ட
பொன்னே! பொன்னம் பலக்கூத்தா!
மருளார் மனத்தோடு, உனைப்பிரிந்து,
வருந்து வேனை, 'வா'வென்று,உன்
தெருளார் கூட்டம் காட்டாயேல்,
செத்தே போனால், சிரியாரோ? 8

திருவருளில் திளைக்கும் அடியார்

சிரிப்பார்; களிப்பார்; தேனிப்பார்;
திரண்டு, திரண்டு,உன் திருவார்த்தை
விரிப்பார்; கேட்பார்; மெச்சுவார்;
வெவ்வேறு இருந்து,உன் திருநாமம்
தரிப்பார்; 'பொன்னம் பலத்தாடும்
தலைவா' என்பார்; அவர்முன்னே
நரிப்பாய், நாயேன் இருப்பேனோ?
நம்பி! இனித்தான் நல்காயே! 9

உறுதியுள்ளேன் உயிர்தாங்கேன்

' நல்காது ஒழியான் நமக்கு'என்றுன்
நாமம் பிதற்றி, நயனநீர்
மல்கா, வாழ்த்தா, வாய்குழறா,
வணங்கா, மனத்தால் நினைந்துருகிப்,
பல்கால் உன்னைப் பாவித்துப்,
பரவிப், ' பொன்னம்பலம் ' என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி,
அருளாய்! என்னை உடையானே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் கரும்படுசொல்லம்மை உடனமர்
அருள்மிகு சாட்சிநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

22. கோயில்திருப்பதிகம்

திருத்தில்லையில் அருளியது; அநுபோக இலக்கணம்
திருவருளோடு கலக்கும் போது ஏற்படும் பேரின்ப நிலையை உரைத்தல்
(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

உள் எழுந்த அமுது

மாறி நின்று,என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து; அமுதே
ஊறி நின்று;என்னுள் எழுபரஞ் சோதி!
உள்ளவா காண வந்தருளாய்;
தேறலின் தெளிவே! சிவபெரு மானே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே! என்னுடைய அன்பே! 1

கைம்மாறும் உண்டோ?

அன்பினால், அடியேன் ஆவியோ டாக்கை,
ஆனந்த மாய்க் கசிந்துருக,
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்;
யான்,இதற்கு இலனோர் கைம்மாறு;
முன்புமாய்ப், பின்பும் முழுதுமாய்ப், பரந்த
முத்தனே! முடிவிலா முதலே!
தென்பெருந் துறையாய்! சிவபெரு மானே!
சீருடைச் சிவபுரத்து அரைசே! 2

உரைப்பது எப்படி?

அரைசனே! அன்பர்க்கு; அடியனே னுடைய
அப்பனே! ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின்று, உருக்கிப்,
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே!
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே!
திருப்பெருந் துறையுறை சிவனே!

உரை,உணர்வு, இறந்துநின்று, உணர்வதோர் உணர்வே!
யான்,உன்னை உரைக்குமாறு, உணர்த்தே. 3

திணிந்த இருளில் தெளிந்த ஒளி

உணர்ந்தமா முனிவர், உம்பரோடு, ஒழிந்தார்
உணர்வுக்கும், தெரிவரும் பொருளே!
இணங்கிலி! எல்லா உயிர்கட்கும் உயிரே!
எனைப்பிறப்பு அறுக்கும் எம்மருந்தே!
திணிந்ததோர் இருளில், தெளிந்த தூவெளியே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
குணங்கள்தாம் இல்லா இன்பமே! உன்னைக்
குறிகினேற்கு இனியென்ன குறையே? 4

அணை கடந்த அருள் வெள்ளம்

குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய், மறையின் பொருளுமாய், வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே!
சிறைபெறா நீர்போல், சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைவனே! நீ,என் உடலிடம் கொண்டாய்;
இனி,உன்னை என் இரக்கேனே? 5

கண்ணுறக் கண்டு களித்தேன்

இரந்திரந்து உருக, என்மனத்து உள்ளே
எழுகின்ற சோதியே! இமையோர்
சிரந்தனில் பொலியும் கமலச் சேவடியாய்!
திருப்பெருந் துறையுறை சிவனே!
நிரந்த ஆகாயம், நீர்,நிலம், தீ,கால்
ஆய்,அவை அல்லையாய், ஆங்கே,
கரந்ததோர் உருவே! களித்தனன், உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்டு, இன்றே. 6

உள் எழுந்த ஞாயிறு

இன்று,எனக்கு அருளி, இருள்கடிந்து, உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்;
நீயலால் பிறிது மற்றின்மை;
சென்றுசென்று, அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து, ஒன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றும் நீயல்லை; அன்றியொன்று இல்லை
யாருன்னை அறியகிற் பாரே? 7

ஆனந்த ஒளியில் அயல் ஏது ?

பார்,பதம், அண்டம், அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே!
நீருறு தீயே! நினைவதேல், அரிய
நின்மலா! நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
யார்உறவு எனக்கு,இங்கு? ஆர்அயல் உள்ளார்?
ஆனந்தம் ஆக்குமென் சோதி! 8

போக விடுவேனோ?

சோதியாய்த் தோன்றும் உருவமே! அருவாம்
ஒருவனே! சொல்லுதற்கு அரிய
ஆதியே! நடுவே! அந்தமே! பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே!
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
யாதுநீ போவது,ஓர் வகை?எனக்கு அருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 9


சிந்தையே கோயில்

தந்தது, உன்தன்னைக்; கொண்டது, என்தன்னை;
சங்கரா! ஆர்கொலோ, சதுரர்?

அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாதுநீ பெற்றதொன்று, என்பால்?
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்!
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடம் கொண்டாய்;
யானிதற்கு இலன்,ஓர் கைம்மாறே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு குடநாடுப்பெருமான் திருவடிகள் போற்றி ! போற்றி !



23. செத்திலாப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; சிவானந்தம் அளவறுக் கொணாமை
உலகப்பற்றையும் உயிர்ப்பற்றையும் விடுமாறு வேண்டுதல்
(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பிரிந்தும் வாழ்வா? செய்வகை அறியேன்

பொய்யனேன் அகம்நெகப் புகுந்து, அமுதூறும்,
புதுமலர்க் கழல்இணை யடி பிரிந்தும்,
கையனேன், இன்னும் செத்திலேன்; அந்தோ!
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே! அரசே! அருட்பெருங் கடலே!
அத்தனே! அயன்,மாற்கு, அறிய ஒண்ணாச்
செய்ய மேனியனே! செய்வகை அறியேன்;
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 1

சொல்லிய சொல் ஒரு சொல்லே

புற்றுமாய், மரமாய்ப்; புனல், காலே,
உண்டியாய்; அண்ட வாணரும், பிறரும்,
வற்றியாரும், நின் மலரடி காணா
மன்ன! என்னையோர் வார்த்தையுட் படுத்துப்,
பற்றினாய்; பதையேன்; மனம்மிக உருகேன்;
பரிகிலேன்; பரியா உடல் தன்னைச்
செற்றிலேன்; இன்னும் திரிதரு கின்றேன்;
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 2

பெற்ற அருளால் பிறழ்வது செய்தேன்

புலைய னேனையும், பொருளென நினைந்து,உன்
அருள்புரிந் தனை, புரிதலும், களித்துத்
தலையி னால் நடந்தேன்; விடைப்பாகா!
சங்கரா! எண்ணில் வானவர்க்கு எல்லாம்
நிலையனே! அலை நீர்விடம் உண்ட
நித்தனே! அடையார் புரம் எரித்த

சிலையனே! எனைச் செத்திடப் பணியாய்;
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 3

என்னை ஆண்டது எதற்கோ?

அன்பர் ஆகி,மற்று, அருந்தவம் முயல்வார்,
அயனும், மாலும்;மற்று, அழலுறு மெழுகாம்
என்பராய், நினைவார் எனைப் பலர்;
நிற்க இங்கு,எனை, எற்றினுக்கு ஆண்டாய்?
வன்பராய் முருடு ஒக்கும்என் சிந்தை;
மரக்கண்; என்செவி இரும்பினும் வலிது;
தென்பராய்த் துறையாய்! சிவ லோகா!
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 4

பிரிவுறா அருள் வேண்டும்

ஆட்டுத் தேவர்தம் விதியொழித்து, அன்பால்,
'ஐயனே' என்று,உன் அருள்வழி இருப்பேன்;
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே!
நாதனே! உனைப் பிரிவுறா அருளைக்
காட்டித், தேவ,நின் கழலிணை காட்டிக்,
காய மாயத்தைக் கழித்து,அருள் செய்யாய்;
சேட்டைத் தேவர்தம் தேவர் பிரானே!
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 5

போக்கிடம் காணேன்

அறுக்கி லேன்உடல் துணிபடத்; தீப்புக்கு
ஆர்கி லேன்;திரு வருள்வகை அறியேன்;
பொறுக்கி லேன்உடல்; போக்கிடம் காணேன்;
போற்றி! போற்றி!என் போர்விடைப் பாகா!
இறக்கி லேன்,உனைப் பிரிந்து; இனிதிருக்க,
என்செய் கேன்?'இது செய்க'என்று அருளாய்;
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 6

சேயன் சேயனாகி அலறுவதா?

மாய னே!மறி கடல்விடம் உண்ட
வானவா! மணி கண்டத்தெம் அமுதே!
நாயி னேன்,உனை நினையவும் மாட்டேன்;
நமச்சி வாய'என்று, உன்னடி பணியாப்,
பேயன் ஆகிலும், பெருநெறி காட்டாய்;
பிறை குலாஞ்சடைப் பிஞ்ஞகனே! யோ
சேயன் ஆகிநின்று, அலறுவது அழகோ?
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 7

இடர்ப்படுவதும் இனிதோ?

போது சேர்அயன், பொருகடல் கிடந்தோன்,
புரந்த ராதிகள் நிற்க,மற்று என்னைக்
கோது மாட்டி,நின் குரைகழல் காட்டிக்,
குறிக்கொள்க என்று,நின் தொண்டரில் கூட்டாய்;
யாது செய்வது,என்று இருந்தனன்; மருந்தே!
அடிய னேன்இடர்ப் படுவதும் இனிதோ?
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 8

திருவடி மலரில் சேர்த்தருள்


ஞாலம் இந்திரன், நான்முகன், வானவர்
நிற்க,மற் றெனை நயந்து,இனிது ஆண்டாய்;
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்!
கங்கை யாய்!அங்கி தங்கிய கையாய்!
மாலும் ஓலமிட்டு அலறும்அம் மலர்க்கே,
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்;
சேலும், நீலமும், நிலவிய வயல்சூழ்
திருப்பெருந் துறை மேவிய சிவனே! 9

களிப்பு எலாம் கலக்க மாயிற்றே!

அளித்து வந்து,எனக்கு ‘ஆவ’ என்றருளி,
அச்சம் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்,
திளைத்தும், தேக்கியும், பருகியும், உருகேன்;
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வானவா! மலை மாதொரு பாகா!
களிப்பெலாம் மிகக் கலங்கிடு கின்றேன்;
கயிலை மாமலை மேவிய கடலே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு வேலம்புத்தூர்ப் பெருமான் திருவடிகள் போற்றி ! போற்றி !



24. அடைக்கலப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; பக்குவ நிண்ணயம்
திருவருளே உண்மையானது என்பதை உணர்த்துதல்
(கலவைப்பாட்டு)

திருச்சிற்றம்பலம்

அழுக்கு மனத்து அடியேன்

செழுக்கமலத் திரளன,நின் சேவடி சேர்ந்தமைந்த,
பழுத்தமனத்து அடியர் உடன்போயினர்; யான்பாவியேன்;
புழுக்கணுடைப் புன்குரம்பைப், பொல்லாக், கல்விஞானமிலா,
அழுக்குமனத்து அடியேன்; உடையாய்! உன்அடைக்கலமே. 1

சிறுமையைப் பொறுக்கும் பெருமை

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையை, நின்பெருமையினால்
பொறுப்பவனே! அராப்பூண்பவனே! பொங்குகங்கை சடைச்
செறுப்பவனே! நின் திருவருளால், என்பிறவியைவேர்
அறுப்பவனே! உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 2

மனத்தின் உள்ளே வரும் சதுரன்

பெரும்பெருமான், என்பிறவியை வேர் அறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான், சதுரப் பெருமான், என்மனத்தினுள்ளே
வரும்பெருமான், மலரோன், நெடுமால், அறியாமல்நின்ற
அரும்பெருமான்! உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 3

துன்ப வெள்ளத்தைக் கடக்கும் தோணி

பொழிகின்றதுன்பப் புயல்வெள்ளத்தில்,நின் கழற்புணை கொண்டு,
இழிகின்றஅன்பர்கள் ஏறினர்,வான்; யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று, மாதர்த் திரைபொரக் காமச்சுறவெறிய,
அழிகின்றனன்; உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 4

உன்திறம் மறந்து துன்புறுகின்றேன்

சுருள்புரி கூழையர் சூழலில்பட்டு, உன்திறம்மறந்து,இங்கு,
இருள்புரி யாக்கையிலே கிடந்து,எய்த்தனன்; மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன்பங்க, விண்ணோர்பெருமான்
அருள்புரியாய்; உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 5

வாழி! எப்போது வந்து வணங்குவேன் ?

மாழை, மைப்பாவிய கண்ணியர் வன்மத்துஇட உடைந்து,
தாழியைப் பாவுதயிர்போல், தளர்ந்தேன்; தடமலர்த்தாள்,
வாழி! எப்போதுவந்து, எந்நாள்,வணங்குவன் வல்வினையேன்?
ஆழியப்பா! உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 6

பிழைக்கு இரங்கும் பேரருளே! அடைக்கலம்

மின்கணினார், நுடங்கும்இடையார், வெகுளிவலையில் அகப்பட்டுப்,
புன்கணனாய்ப், புரள்வேனைப், புரளாமல் புகுந்துஅருளி,
என்கணிலே அமுதூறித், தித்தித்து,என் பிழைக்குஇரங்கும்
அங்கணனே! உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 7

உய்யத் திருவுளமோ? எது செய்யத் திருவுளமோ?

மாவடு வகிரன்ன கண்ணிபங்கா! நின்மலரடிக்கே
கூவிடுவாய்? கும்பிக்கே இடுவாய்? நின்குறிப்பறியேன்;
பாவிடையாடு குழல்போல், கரந்துபரந்தது, உள்ளம்
ஆ!கெடுவேன்; உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 8

நெறி அறியேன்

பிறிவறியாஅன்பர், நின்அருட் பெய்கழல் தாளிணைக்கீழ்,
மறிவறியாச் செல்வம் வந்துபெற்றார், உன்னைவந்திப்பதோர்
நெறியறியேன்; நின்னையே அறியேன்; நின்னையேஅறியும்
அறிவறியேன்; உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 9

விழுங்குகின்றேன் விக்கினேன்

வழங்குகின்றாய்க்கு உன்அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு,
விழுங்குகின்றேன்; விக்கினேன், வினையேன், என்விதியின்மையால்;
தழங்குஅரும் தேன்அன்னதண்ணீர் பருகத்தந்து ,உய்யக்கொள்ளாய்;
அழுங்குகின்றேன்; உடையாய்! அடியேன் உன்அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு சாந்தம்புத்தூர்ப் பெருமான் திருவடிகள் போற்றி ! போற்றி !

25. ஆசைப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; ஆத்தும இலக்கணம்
அடியார் பெருமக்களையும் இறைவனையும் காண விரும்புதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

உன் அழைப்பு எப்போது?

கருடக் கொடியோன் காண மாட்டாக் கழற்சேவடி, என்னும்
பொருளைத் தந்து,இங்கு, என்னைஆண்ட பொல்லா மணியே! யோ
இருளைத் துரந்திட்டு, ' இங்கே வா'என்று, அங்கே, கூவும்
அருளைப் பெறுவான், ஆசைப் பட்டேன் கண்டாய்; அம்மானே! 1

ஊனச்சிறையில் தங்கேன்

மொய்ப்பால் நரம்பு கயிறாக, மூளை, என்பு, தோல்,போர்த்த
குப்பாயம் புக்கு, இருக்க கில்லேன்; கூவிக்கொள்ளாய்; கோவே! யோ
எப்பா லவர்க்கும் அப்பால்ஆம் என் ஆரமுதே! ஓ!
அப்பா! காண ஆசைப் பட்டேன் கண்டாய்; அம்மானே! 2

என்முகம் நோக்காயோ?

சீவார்ந்து, ஈமொய்த்து, அழுக்கொடு திரியும் சிறுகுடில் இதுசிதையக்
கூவாய்; கோவே! கூத்தா! காத்தாட் கொள்ளும் குருமணியே!
தேவா! தேவர்க்கு அரியானே! சிவனே! சிறிதுஎன் முகநோக்கி,
' ஆ!ஆ! ' என்ன, ஆசைப் பட்டேன் கண்டாய்; அம்மானே! 3

உன்ஒளி நோக்க அருள்செய்

மிடைந்து,எலும்பு ஊத்தை, மிக்குஅழுக்கு ஊறல், வீறிலி, நடைக்கூடம்
தொடர்ந்தெனை நலியத், துயர் உறுகின்றேன்; சோத்தம்!எம் பெருமானே!
உடைந்து,நைந்து, உருகி, உன்னொளி நோக்கி, உன்திரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான், ஆசைப்பட்டேன் கண்டாய்; அம்மானே! 4

பற்றிலேன் : ஆண்டு கொண்ட அமுதே

அளிபுண் அகத்துப், புறந்தோல் மூடி, அடியேன் உடையாக்கை,
புளியம் பழமொத்து இருந்தேன்; இருந்தும், விடையாய்! பொடியாடீ!

எளிவந்து, என்னை ஆண்டு கொண்ட என் ஆரமுதே!ஓ!
'அளியேன்' என்ன, ஆசைப் பட்டேன் கண்டாய்; அம்மானே! 5

அலுத்தேன், அடியேனை உய்யக் கொள்

எய்த்தேன் நாயேன்; இனியிங்கு இருக்க கில்லேன்; இவ்வாழ்க்கை
வைத்தாய்; வாங்காய்; வானோர் அறியா மலர்ச் சேவடியானே!
முத்தா! உன்தன் முகவொளி நோக்கி,முறுவல் நகைகாண,
அத்தா! சால ஆசைப் பட்டேன் கண்டாய்! அம்மானே! 6

ஆயிரம் பேர் அம்மானே! வாராய்!

பாரோர், விண்ணோர், பரவி ஏத்தும் பரனே! பரஞ்சோதீ!
வாராய்; வாரா உலகம் தந்து, வந்துஆட் கொள்வானே!
பேர் ஆயிரமும் பரவித் திரிந்து; ' எம்பெருமான் ' எனஏத்த,
ஆரா அமுதே! ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே! 7

உடல் முழுதும் உன்னை வணங்கவே

கையால் தொழுது,உன் கழல் சேவடிகள் கழுமத் தழுவிக்கொண்டு,
எய்யாது என்றன் தலைமேல் வைத்து,'எம் பெருமான்! பெருமான்!'என்று,
ஐயா! என்றன் வாயால் அரற்றி, அழல்சேர் மெழுகொப்ப,
ஐயாற்று அரசே! ஆசைப் பட்டேன் கண்டாய்; அம்மானே! 8

தொண்டரோடு கூட்டு கண்டாய்

செடியார் ஆக்கைத் திறம்அற வீசிச், சிவபுர நகர்புக்குக்,
கடியார் சோதி கண்டு கொண்டு,என் கண்இணை களிகூரப்,
படிதான் இல்லாப் பரம்பரனே! உன்பழ அடியார் கூட்டம்,
அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டாய்; அம்மானே! 9

ஞானச்சுடரே! 'அஞ்சேல்' என்று அருள்

வெஞ்சேல் அனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு,
நைஞ்சேன், நாயேன்; ஞானச் சுடரே! நானோர் துணைகாணேன்;
பஞ்சேர் அடியாள் பாகத்து ஒருவா! பவளத் திருவாயால்,
'அஞ்சேல்' என்ன, ஆசைப் பட்டேன் கண்டாய்; அம்மானே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மின்னனையாள் அம்மை உடனமர்
அருள்மிகு திருப்பூவண நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

26. அதிசயப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; முத்தி இலக்கணம்
இறையருளை நினைந்து நினைந்து வியப்படைதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

உருகா உள்ளம்

வைப்பு, மாடுஎன்று, மாணிக்கத்து ஒளியென்று, மனத்திடை உருகாதே,
செப்பு நேர்முலை மடவரலியர் தங்கள் திறத்திடை நைவேனை
ஒப்பு இலாதன, உவமனில் இறந்தன, ஒண்மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 1

நீதி நினையா நெஞ்சு

நீதி யாவன யாவையும் நினைக்கிலேன்; நினைப்பவரொடும் கூடேன்;
ஏதமே பிறந்து, இறந்து, உழல்வேன்றனை 'என்னடியான்' என்று,
பாதி மாதொடும் கூடிய பரம்பரன், நிரந்தரமாய் நின்ற
ஆதி ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 2

வல்வினை போயிட ஆண்டான்

முன்னை என்னுடைய வல்வினை போயிட, முக்கண்அதுஉடை யெந்தை,
தன்னை யாவரும் அறிவதற்கு அரியவன், எளியவன் அடியார்க்குப்,
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில் இளமதி அதுவைத்த
அன்னை, ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 3

பித்தன் ஆண்ட பித்தன்

'பித்தன்' என்று,எனை உலகவர் பகர்வதோர் காரணம் இது;கேளீர்;
ஒத்துச் சென்று,தன் திருவருள் கூடிடும் உபாயம்அது அறியாமே,
செத்துப் போய்,அரு நரகிடை வீழ்வதற்கு ஒருப்படு கின்றேனை,
அத்தன், ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 4

அடியார் பால் செல்லேன்

பரவு வார்அவர் பாடுசென்று அணைகிலேன்; பன்மலர்பறித் தேத்தேன்;
குரவுவார் குழலார் திறத்தே நின்று, குடிகெடு கின்றேனை

இரவு நின்று,எரி யாடிய எம்மிறை, எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 5

ஞானிகளோடு கூடேன்

எண்ணிலேன் திருநாம அஞ்செழுத்தும்; என் ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலை ஞானிகள் தம்மொடு; நல்வினை நயவாதே,
மண்ணிலே பிறந்து, இறந்து, மண்ணாவதற்கு ஒருப்படு கின்றேனை,
அண்ணல், ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 6

பொய்யை மெய்யெனக் கொண்டேன்

பொத்தை ஊன்சுவர்; புழுப்பொதிந்து, உளுத்துஅசும்பு ஒழுகிய, பொய்க்கூரை;
இத்தை, மெய்யெனக் கருதிநின்று, இடர்க்கடல் சுழித்தலைப் படுவேனை
முத்து, மாமணி, மாணிக்க, வயிரத்த, பவளத்தின் முழுச்சோதி,
அத்தன், ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 7

தள்ளியவன் தூக்கினான்!

நீக்கி, முன்னெனைத் தன்னொடு நிலாவகை, குரம்பையில் புகப்பெய்து;
நோக்கி; நுண்ணிய, நொடியன சொற்செய்து; நுகமின்றி விளாக்கைத்துத்;
தூக்கி; முன்செய்த பொய்யறத், துகளறுத்து; எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி; ஆண்டு;தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 8

மலரின் மணம்

உற்ற ஆக்கையின் உறுபொருள், நறுமலர் எழுதரு நாற்றம்போல்,
பற்றல் ஆவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள் பாராதே,
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொல் தெளியாமே,
அத்தன், ஆண்டு,தன் அடியாரில் கூட்டிய அதிசயம் கண்டாமே! 9

பொய் நெறி நீக்கிய மெய் நெறி

இருள்தி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச் சிறுகுடில், இது:இத்தைப்
பொருள்எனக் களித்து, அருநர கத்திடை விழப்புகு கின்றேனைத்
தெருளும் மும்மதில், நொடிவரை இடிதரச், சினப்பதத் தொடுசெந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய அதிசயம் கண்டாமே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் திருமறை நாயகி அம்மை உடனமர்
அருள்மிகு திருமறை நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

27. புணர்ச்சிப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; அத்துவித இலக்கணம்
சிவபெருமானுடன் கலந்து இருக்க விழைதல்
(ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

ஆண்டுகொண்ட அருளாளனை அணுகுவது என்றோ?

சுடர்பொற் குன்றைத், தோளா முத்தை,
வாளா தொழும்பு உகந்து,
கடைபட் டேனை ஆண்டு கொண்ட
கருணாலயனைக், கருமால், பிரமன்,
தடைபட்டு, இன்னும் சார மாட்டாத்
தன்னைத் தந்தஎன் ஆரமுதைப்,
புடைபட்டு இருப்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 1

ஊற்று மணல் போல் உருகுவது என்றோ?

ஆற்ற கில்லேன் அடியேன்; அரசே!
அவனி தலத்தைம் புலனாய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து,
'சிவன்,எம் பெருமான்' ,என்றேத்தி,
ஊற்று மணல்போல், நெக்கு நெக்கு
உள்ளே உருகி, ஓலமிட்டுப்
போற்றி நிற்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 2

அடியார் முன் அலறுவது என்றோ?

நீண்ட மாலும், அயனும், வெருவ
நீண்ட நெருப்பை, விருப்புஇலேனை
ஆண்டு கொண்ட என் ஆரமுதை,
அள்ளூறு உள்ளத்து அடியார்முன்
வேண்டும் தனையும் வாய்விட்டு அலறி,
விரையார் மலர் தூவிப்,

பூண்டு கிடப்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 3

தழுவித் திளைப்பது என்றோ?

அல்லிக் கமலத்து அயனும், மாலும்,
அல்லாதவரும், அமரர் கோனும்,
சொல்லிப் பரவும் நாமத் தானைச்,
சொல்லும் பொருளும் இறந்தசுடரை,
நெல்லிக் கனியைத், தேனைப், பாலை,
நிறைஇன் அமுதை, அமுதின்சுவையைப்,
புல்லிப் புணர்வது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 4

புகழப் பெறுவது என்றோ?

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான், கீழ்மேல், அயனும்மாலும்,
அகழப் பறந்தும், காண மாட்டா
அம்மான், இம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண்டு, என்னை ஆட்கொண்டு,
‘ ஆ!ஆ! என்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 5

உள்மாசு உகுக்கும் கண்ணீர் உகுப்பது என்றோ?

பரிந்து வந்து, பரம ஆனந்தம்,
பண்டே, அடியேற்கு அருள்செய்யப்,
பிரிந்து போந்து, பெருமா நிலத்தில்
அருமால் உற்றேன், என்றுஎன்று,
சொரிந்த கண்ணீர், சொரிய உள்நீர்,
உரோமம் சிலிர்ப்ப, உகந்தன்பாய்ப்,
புரிந்து நிற்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 6

தழுதழுத்துக் கைகூப்புவது என்றோ?

நினையப் பிறருக்கு அரிய நெருப்பை,
நீரைக்,காலை, நிலனை, விசும்பைத்
தனையொப் பாரை இல்லாத் தனியை
நோக்கித்; தழைத்துத்; தழுத்தகண்டம்
கனையக்; கண்ணீர் அருவி பாயக்;
கையும் கூப்பிக், கடிமலரால்
புனையப் பெறுவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 7

திருமேனி நோக்கித் திகழ்வது என்றோ?

நெக்கு நெக்கு,உள் உருகி உருகி,
நின்றும், இருந்தும், கிடந்தும்,எழுந்தும்,
நக்கும், அழுதும், தொழுதும், வாழ்த்தி;
நானாவிதத்தாற் கூத்தும் நவிற்றிச்;
செக்கர் போலும் திரு மேனி
திகழ நோக்கிச்; சிலிர்சிலிர்த்துப்;
புக்கு நிற்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 8

திருவடி மலரையே சிந்தித்து அணைவது என்றோ?

"தாதாய், மூ ஏழ் உலகுக்கும்
தாயே, நாயேன் தனையாண்ட
பேதாய், பிறவிப் பிணிக்கோர் மருந்தே,
பெருந்தேன் பில்க, எப்போதும்
ஏதா மணியே!" என்றென்று ஏத்தி,
இரவும் பகலும், எழிலார்பாதப்
போதாய்ந்து, அணைவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 9


பாடிப் பாடிப் பணிவது என்றோ?

"காப்பாய், படைப்பாய், கரப்பாய், முழுதும்;
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெல்லாம்

மூப்பாய், மூவா முதலாய் நின்ற
முதல்வா; முன்னே எனையாண்ட
பார்ப்பானே; எம் பரமா!" என்று,
பாடிப்பாடிப் பணிந்து, பாதப்
பூப்போது அணைவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு திருப்பூவலப்பெருமான் திருவடிகள் போற்றி ! போற்றி !



28. வாழாப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; முத்தி உபாயம்
உலக வாழ்வை விடுத்து, இறையுலக வாழ்வை விரும்புதல்
(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்று எனக்கு இல்லை

பாரொடு, விண்ணாய்ப் பரந்த எம்பரனே!
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
சீரொடு பொலிவாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
யாரொடு நோகேன்? ஆர்க்கெடுத்து உரைக்கேன்?
ஆண்டநீ அருளிலை யானால்,
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்;
'வருக'என்று, அருள்புரி யாயே. 1

கூவிக் கொண்டு அருள்

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே!
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்;
உம்பரும் அறியா ஒருவனே! இருவர்க்கு
உணர்விறந்து, உலகம் ஊடுருவும்
செம்பெரு மானே! சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
எம்பெரு மானே! என்னையாள் வானே!
என்னை,நீ கூவிக்கொண்டு அருளே. 2

ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை

பாடி,மால் புகழும் பாதமே அல்லால்,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
தேடி,நீ ஆண்டாய்; சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஊடுவது உன்னோடு; உவப்பதும் உன்னை;
உணர்த்துவது உனக்கு;எனக்கு உறுதி

வாடினேன்; இங்கு வாழ்கிலேன் கண்டாய்;
'வருக'என்று, அருள்புரி யாயே. 3

' வருக ' என்று அருள்

வல்லைவாள் அரக்கர் புரம் எரித்தானே!
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்;
தில்லைவாழ் கூத்தா! சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
எல்லை மூவுலகும் உருவி, அன்று,இருவர்
காணும்நாள், ஆதி,ஈறு, இன்மை
வல்லையாய் வளர்ந்தாய்; வாழ்கிலேன் கண்டாய்;
'வருக'என்று, அருள்புரி யாயே. 4

ஐம்புலனும், சிந்தையும் அடியிணைக்கே

பண்ணினேர் மொழியாள் பங்க!நீ அல்லால்,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
திண்ணமே ஆண்டாய்; சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
எண்ணமே, உடல்,வாய், மூக்கொடு, செவி,கண்,
என்றிவை நின்கணே வைத்து,
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
'வருக'என்று, அருள்புரி யாயே. 5

அருளினை மறந்து அஞ்சினேன்

பஞ்சின்மெல் அடியாள் பங்க!நீ அல்லால்,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
செஞ்செவே ஆண்டாய்; சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
அஞ்சினேன் நாயேன்; ஆண்டு,நீ அளித்த
அருளினை, மருளினால் மறந்த
வஞ்சனேன், இங்கு வாழ்கிலேன் கண்டாய்
'வருக'என்று, அருள்புரி யாயே. 6

வாழும் வழி அறியா மருளனேன்

பரிதிவாழ் ஒளியாய்! பாதமே அல்லால்,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
திருவுயர் கோலச் சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
கருணையே நோக்கிக் கசிந்து,உளம் உருகிக்
கலந்து,நான் வாழுமாறு அறியா
மருளனேன், உலகில் வாழ்கிலேன் கண்டாய்
'வருக'என்று, அருள்புரி யாயே. 7

உய்யவந்த அமுது

பந்தணை விரலாள் பங்க!நீ அல்லால்,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
செந்தழல் போல்வாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
அந்தமில் அமுதே! அரும்பெரும் பொருளே!
ஆர் அமுதே! அடியேனை
வந்துய, ஆண்டாய்; வாழ்கிலேன் கண்டாய்;
'வருக'என்று, அருள்புரி யாயே. 8

தேவர்தம் தேவே

பாவ நாசா,உன் பாதமே அல்லால்,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
தேவர்தம் தேவே, சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
மூவுலகு உருவ, இருவர்கீழ் மேலாய்
முழங்கு, அழலாய் நிமிர்ந்தானே!
மாவுரி யானே! வாழ்கிலேன் கண்டாய்;
'வருக'என்று, அருள்புரி யாயே. 9


தொழுவனோ பிறரை? துதிப்பனோ?

பழுதில்தொல் புகழாள் பங்க!நீ அல்லால்,
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;

செழுமதி அணிந்தாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
தொழுவனோ பிறரைத்? துதிப்பனோ? எனக்கோர்
துணையென நினைவனோ? சொல்லாய்;
மழவிடை யானே! வாழ்கிலேன் கண்டாய்
'வருக'என்று, அருள்புரி யாயே. 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் யோகாம்பாள் அம்மை உடனமர்
அருள்மிகு ஆத்மநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



29. அருள்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; மகாமாயா சுத்தி
தனது அழைப்பை ஏற்கும்படி வேண்டுதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

நீதியே! அருளாய்

சோதியே! சுடரே! சூழொளிவிளக்கே!
சுரிகுழல், பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள்வெண்ணீற்றாய்!
பங்கயத்து அயனும், மாலறியா
நீதியே! செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தம் மேவியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித்தழைத்தால்,
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 1

தேடியும் காணேன்

நிருத்தனே! நிமலா! நீற்றனே!நெற்றிக்
கண்ணனே! விண்ணுளோர் பிரானே!
ஒருத்தனே! உன்னை, ஓலமிட்டுஅலறி,
உலகெலாம் தேடியும், காணேன்;
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அருத்தனே! அடியேன் ஆதரித்தழைத்தால்,
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 2

அழல் கண் அருள் கண்ணே

எங்கள் நாயகனே! என்னுயிர்த்தலைவா!
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே! தக்கநற்காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண் நாயகனே! திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்

அங்கணா! அடியேன் ஆதரித்தழைத்தால்,
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 3

வேண்ட வெளிப்பட்ட எந்தை

கமலநான் முகனும், கார்முகில்நிறத்துக்
கண்ணனும், நண்ணுதற்கு அரிய
விமலனே, எமக்கு வெளிப்படாய்என்ன,
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்!
திமிலநான் மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அமலனே! அடியேன் ஆதரித்தழைத்தால்,
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 4

பெண்ணோடு தோன்றும் பெருந்தகை

துடிகொள் நேரிடையாள், சுரிகுழல்மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு,
பொடிகொள்வான் தழலிற், புள்ளிபோல்,இரண்டு
பொங்கொளி தங்கு மார்பினனே!
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அடிகளே! அடியேன் ஆதரித்தழைத்தால்,
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 5

உள்குவார் மனத்து அமுது

துப்பனே! தூயாய்! தூயவெண்ணீறு
துதைந்தெழு, துளங்கொளி வயிரத்து
ஒப்பனே! உன்னை உள்குவார்மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே!
செப்பமாம் மறைசேர் திருப்பெருந்துறையில்,
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அப்பனே! அடியேன் ஆதரித்தழைத்தால்,
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 6

காலனைக் காய்ந்தவன்

மெய்யனே! விகிர்தா! மேருவேவில்லா
மேவலர் புரங்கள் மூன்றெரித்த
கையனே! காலால் காலனைக்காய்ந்த,
கடுந்தழல் பிழம்பன்ன மேனிச்
செய்யனே! செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
ஐயனே! அடியேன் ஆதரித்தழைத்தால்
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 7

அன்பர்களுக்கு அருளும் சித்தன்

முத்தனே! முதல்வா! முக்கணா!முனிவா!
மொட்டறா மலர்பறித்து, இறைஞ்சிப்,
பத்தியாய் நினைந்து, பரவுவார்தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே! செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அத்தனே! அடியேன் ஆதரித்தழைத்தால்
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 8

மருள் அறுத்த பொருள்

மருளனேன் மனத்தை மயக்கறநோக்கி,
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே! புனிதா! பொங்குவாளரவம்,
கங்கைநீர், தங்கு செஞ்சடையாய்!
தெருளுநான் மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அருளனே! அடியேன் ஆதரித்தழைத்தால்,
'அதெந்துவே?' என்று,அரு ளாயே! 9

குருந்தம் மேவியது எண்ணில்

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்

இருந்தவாறு எண்ணி, ஏசறா,நினைந்திட்டு,
'என்னுடை எம்பிரான்' என்றென்று,
அருந்தவா! நினைந்தே, ஆதரித்தழைத்தால்,
அலைகடல் அதனுளே நின்று,
'பொருந்த,வா; கயிலை புகுநெறிஇதுகாண்;
போதராய்! ' என்று,அரு ளாயே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பெரியநாயகி அம்மை உடனமர்
அருள்மிகு திருவெண்காட்டு நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



30. திருக்கழுக்குன்றப்பதிகம்

திருக்கழுக்குன்றத்தில் அருளியது; சற்குரு தரிசனம்
சிவபெருமானது அருள் கோலத்தைக் காண்பது
(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பெயர் ஓதுவார்க்குப் பேரின்பம்

பிணக்கி லாத பெருந்துறைப் பெருமான்!
உன்நா மங்கள் பேசுவார்க்கு,
இணக்கி லாததோர் இன்பமே வரும்;
துன்பமே துடைத்து; எம்பிரான்!
உணக்கி லாததோர் வித்து,மேல் விளை
யாமல், என்வினை ஒத்தபின்,
கணக்கி லாத்திருக் கோலம்நீ வந்து,
காட்டினாய், கழுக் குன்றிலே! 1

உன்னைச் சார்ந்திலேன்

பிட்டு நேர்பட, மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே!
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்;
சிட்டனே! சிவ லோகனே! சிறு
நாயினும் கடையாய வெங்
கட்ட னேனையும் ஆட்கொள்வான்; வந்து,
காட்டினாய், கழுக் குன்றிலே! 2

கண்ணீர் துடைத்தாய்

மலங்கினேன், கண்ணின் நீரை மாற்றி,
மலம் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன்; வினைக் கேடனேன், இனி
மேல் விளைவது அறிந்திலேன்;
இலங்கு கின்ற நின் சேவடிகள்
இரண்டும், வைப்பிடம் இன்றியே

கலங்கினேன்; கலங் காமலே, வந்து,
காட்டினாய்; கழுக் குன்றிலே! 3

தோணி உகைக்கத் தோன்றிய கோலம்

பூண் ஒணாததொர் அன்பு பூண்டு,
பொருந்தி, நாள்தொறும் போற்றவும்,
நாண் ஒணாததொர் நாணம் எய்தி,
நடுக்கடலுள் அழுந்தி, நான்
பேண் ஒணாத பெருந்துறைப் பெரும்
தோணி பற்றி உகைத்தலும்,
காண்ஒணாத் திருக் கோலம்,நீ வந்து,
காட்டினாய்க், கழுக் குன்றிலே! 4

சிந்தை வைத்த சிகாமணி

கோல மேனி வராகமே! குணமாம்
பெருந் துறைக் கொண்டலே!
சீலம் ஏதும் அறிந்திலாத, என்
சிந்தை வைத்த சிகாமணி!
ஞாலமே கரி யாக,நான் உனை
நச்சி நச்சிட வந்திடும்
காலமே! உனை ஓத,நீ வந்து,
காட்டினாய், கழுக் குன்றிலே! 5

பேதம் அறுத்த பெருவெள்ளம்


பேதம் இல்லதொர் கற்பு அளித்த
பெருந்துறைப் பெரு வெள்ளமே!
ஏதமே பல பேச, நீஎனை
ஏதிலார் முனம், என்செய்தாய்?
சாதல் சாதல், பொல்லாமை அற்ற,
தனிச்சரண், சரண் ஆமெனக்
காதலால் உனை ஓத, நீவந்து,
காட்டினாய், கழுக் குன்றிலே! 6

வினை அறுத்து, வீறு அளித்தான்

இயக்கிமார் அறு பத்து நால்வரை
எண்குணம் செய்த ஈசனே!
மயக்கம் ஆயதோர் மும்மலப் பழ
வல் வினைக்குள் அழுந்தவும்,
துயக்கு அறுத்து,எனை ஆண்டு கொண்டு,நின்
தூய்மலர்க் கழல் தந்து,எனைக்
கயக்க வைத்து, அடியார்முனே வந்து,
காட்டினாய், கழுக் குன்றிலே! 7

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் சொக்கநாயகித் தாயார் உடனமர்
அருள்மிகு மறைமலை நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



31. கண்டபத்து

திருத்தில்லையில் அருளியது; நிருத்த தரிசனம்
சிவபெருமானின் ஆனந்த நடனத்தைக் கண்டது
(கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பொறி வழியே சென்று வேறுபட்டேன்

இந்திரிய வயமயங்கி, இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய், அருநரகில் வீழ்வேற்குச்,
சிந்தைதனைத் தெளிவித்துச், சிவமாக்கி, எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே! 1

என் உயிர்க்கு உறுதி எண்ணிலேன்

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்,
தனைச்சிறிதும் நினையாதே, தளர்வெய்திக் கிடப்பேனை,
எனைப்பெரிதும் ஆட்கொண்டு,என் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே! 2

அறியாப் பருவத்தே அகம் புகுந்தான்

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து,என் உளம்மன்னிக்,
கருத்திருத்தி, ஊன்புக்குக், கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத், தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய்அடியேன் அணிகொள்தில்லை கண்டேனே! 3

கல்லாத, புல்லறிவினேன் கடைத்தேறினேன்

கல்லாத, புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை,
வல்லாள னாய்வந்து, வனப்பெய்தி இருக்கும்வண்ணம்,
பல்லோரும் காண,என்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே! 4

சாதி, குலம் என்னும் தடுமாற்றம் ஒழிந்தது

சாதி,குலம், பிறப்பு,என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை, அல்லலறுத்து; ஆட்கொண்டு;

பேதைகுணம், பிறருருவம், யான்,எனது',என் உரைமாய்த்துக்;
கோதில்அமுது ஆனானைக் குலாவுதில்லை கண்டேனே! 5

பிணி, மூப்பு அகன்றது

பிறவிதனை அறமாற்றிப்; பிணி,மூப்பு,என்று இவையிரண்டும்,
உறவினொடும் ஒழியச்சென்று; உலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி,
மறையவரும், வானவரும், வணங்கிடநான் கண்டேனே! 6

திருவடியில் கட்டுவித்தான்

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்,
பித்தன்இவன் என,என்னை ஆக்குவித்துப் பேராமே,
சித்தமெனும் திண்கயிற்றால், திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே! 7

விளைவு அறியா வெறுவியேன்

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு,இங்கு, அறிவின்றி,
விளைவொன்றும் அறியாதே, வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவிலா ஆனந்தம் அளித்து,என்னை ஆண்டானைக்
களவிலா வானவரும் தொழுந்தில்லை கண்டேனே! 8

வான்கருணை தந்தான்

பாங்கினொடு, பரிசொன்றும் அறியாத நாயேனை,
ஓங்கியுளத்து, ஒளிவளர உலப்பிலா அன்பருளி,
வாங்கிவினை, மலம்அறுத்து, வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே! 9

கேதம் கெடுத்த கிளர் ஒளி

பூதங்கள் ஐந்தாகிப், புலனாகிப், பொருளாகிப்,
பேதங்கள் அனைத்துமாய்ப், பேதமிலாப் பெருமையனைக்,
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை, மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் உமை அம்மை உடனமர்
அருள்மிகு அஞ்சைக்களத்தப்பர் திருவடிகள் போற்றி ! போற்றி !

32. பிரார்த்தனைப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; சதா முத்தி
வீடு பேற்றை அருளுமாறு வேண்டுதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

காலம் வறிதே கழிகின்றது

கலந்து, நின்னடியாரோடு, அன்று
வாளா, களித் திருந்தேன்;
புலர்ந்து போன, காலங்கள்;
புகுந்து நின்றது இடர்,பின்னாள்;
உலர்ந்து போனேன்; உடையானே!
உலவா இன்பச் சுடர்காண்பான்,
அலந்து போனேன்; அருள்செய்யாய்,
ஆர்வம் கூர, அடியேற்கே! 1

யாக்கை பயனின்றி மூப்படைகின்றது

அடியார் சிலர்,உன் அருள்பெற்றார்,
ஆர்வம் கூர; யான்,அவமே,
முடையார் பிணத்தின், முடிவின்றி,
முனிவால், அடியேன், மூக்கின்றேன்;
கடியேன் உடைய கடுவினையைக்
களைந்து,உன் கருணைக் கடல்பொங்க,
உடையாய்! அடியேன் உள்ளத்தே
ஓவாது உருக, அருளாயே! 2

மருளன் என்று உலகம் வெருளுகின்றது

அருளார் அமுதப் பெருங்கடல்வாய்,
அடியார் எல்லாம் புக்கழுந்த,
இருளார் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய்; எம்மானே!

'மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால்' என்று,இங்கு, எனைக்கண்டார்
வெருளா வண்ணம், மெய்யன்பை,
உடையாய்! பெறநான் வேண்டுமே! 3

அன்பும் உண்டாகுமோ ?

வேண்டும், வேண்டும், மெய்யடியார்
உள்ளே, விரும்பி, எனைஅருளால்
ஆண்டாய்; அடியேன் இடர்களைந்த
அமுதே! அருமா மணிமுத்தே!
தூண்டா விளக்கின் சுடரனையாய்!
தொண்டனேற்கும் உண்டாம் கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது,
மிக்க அன்பே மேவுதலே? 4

யான், எனது என்றல் அறுமா?

மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி, யானும், மெய்ம்மையே,
காவி சேரும் கயல்கண்ணாள்
பங்கா, உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ
பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து,
ஆவி, யாக்கை, யான்எனது,என்று
யாதும் இன்றி, அறுதலே? 5

புறமே கிடந்து புலம்புகின்றேன்

அறவே பெற்றார், நின்னன்பர்
அந்தம் இன்றி, அகநெகவும்,
புறமே கிடந்து, புலைநாயேன்
புலம்பு கின்றேன்; உடையானே!
பெறவே வேண்டும், மெய்யன்பு;
பேரா, ஒழியாப், பிரிவில்லா,
மறவா, நினையா, அளவிலா,
மாளா, இன்ப மாகடலே! 6

இடரே பெருக்கி இளைக்கின்றேன்

கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துண்ண,
இடரே பெருக்கி, ஏசற்று,இங்கு,
இருத்தல் அழகோ, அடிநாயேன்?
உடையாய்! 'நீயே அருளுதி'யென்று,
உணர்த்தாது ஒழிந்தே, கழிந்தொழிந்தேன்;
சுடரார் அருளால், இருள்நீங்கச்,
சோதீ! இனித்தான் துணியாயே! 7

மூங்கில் குழலுக்காகும் : நானோ கல் மூங்கில்

துணியா, உருகா, அருள்பெருகத்
தோன்றும் தொண்டர் இடைப்புகுந்து,
திணியார் மூங்கில் சிந்தையேன்,
சிவனே! நின்று தேய்கின்றேன்;
அணியார் அடியார் உனக்குள்ள
அன்பும் தாராய்; அருள்அளியத்
தணியாது, ஒல்லை வந்தருளித்,
தளிர்பொற் பாதம் தாராயே! 8

அயலார் போல் அயர்கின்றேன்

' தாரா அருளொன்று இன்றியே
தந்தாய் ' என்று,உன் தமரெல்லாம்
ஆரா நின்றார்; அடியேனும்,
அயலார் போல, அயர்வேனோ?
சீரார் அருளால், சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா!
பேரா னந்தம் பேராமை
வைக்க வேண்டும், பெருமானே! 9

சுரை வீணைக்கு ஆகும் : நானோ தோளாச்சுரை

மானோர் பங்கா! வந்திப்பார்
மதுரக் கனியே! மனநெகா
நான்,ஓர் தோளாச் சுரையொத்தால்,
நம்பி! இத்தால் வாழ்ந்தாயே?


ஊனே புகுந்த உனையுணர்ந்தே,
உருகிப் பெருகும் உள்ளத்தைக்,
கோனே! அருளும் காலந்தான்,
கொடியேற்கு, என்றோ கூடுவதே? 10

வற்றல் மரமாகவா நிற்பது?

கூடிக் கூடி, உன்னடியார்
குனிப்பார், சிரிப்பார், களிப்பாராய்;
வாடி வாடி, வழியற்றேன்,
வற்றல் மரம்போல் நிற்பேனோ?
ஊடி ஊடி, உடையாயொடு
கலந்து,உள் உருகிப், பெருகி,நெக்கு,
ஆடி ஆடி, ஆனந்தம்
அதுவே யாக, அருள்கலந்தே! 11

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு பட்டமங்கல நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



33. குழைத்தபத்து

திருப்பெருந்துறையில் அருளியது; ஆத்தும நிவேதனம்
திருவருளில் தன்னை இழந்து நிற்றல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

உழைத்தால் உறுதி உண்டோ?

குழைத்தால், பண்டைக் கொடுவினை,நோய்
காவாய்; உடையாய்! கொடுவினையேன்
உழைத்தால், உறுதி உண்டோதான்?
உமையாள் கணவா! எனைஆள்வாய்;
பிழைத்தால், பொறுக்க வேண்டாவோ?
'பிறைசேர் சடையாய்! முறையோ?'என்று
அழைத்தால், அருளாது ஒழிவதே,
அம்மானே, உன் அடியேற்கே! 1

ஒறுத்தால் ஒன்றும் போதுமே?

அடியேன் அல்லல் எல்லாம்,முன்,
அகல ஆண்டாய், என்றிருந்தேன்;
கொடியேர் இடையாள் கூறாஎம்
கோவே, 'ஆ!ஆ!' என்றருளிச்,
செடிசேர் உடலைச் சிதையாதது
எத்துக்கு? எங்கள் சிவலோகா!
உடையாய்! கூவிப் பணிகொள்ளாது,
ஒறுத்தால், ஒன்றும் போதுமே! 2

கருணை இல்லாமல் போய்விட்டதா?

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை,
இன்றே, இன்றிப் போய்த்தோதான்?
ஏழை பங்கா! எம்கோவே!

குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே, நீகொண்டால்,
என்தான் கெட்டது? இரங்கிடாய்;
எண்தோள், முக்கண், எம்மானே! 3

மறப்பித்தவன் நீ : நினைப்பிப்பது என்று?

மானேர் நோக்கி மணவாளா!
மன்னே! நின்சீர் மறப்பித்து,இவ்
ஊனே புக,என் தனைநூக்கி,
உழலப் பண்ணு வித்திட்டாய்?
ஆனால், அடியேன் அறியாமை
அறிந்து, நீயே அருள்செய்து,
கோனே! கூவிக் கொள்ளும்நாள்
என்று?என்று, உன்னைக் கூறுவதே! 4

எல்லாம் நீயே : தேறும் வகைதான் ஏது?

கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம்நீ!
தேறும் வகைநீ! திகைப்பும்நீ!
தீமை, நன்மை, முழுதும்நீ!
வேறோர் பரிசு,இங்கு, ஒன்றில்லை;
மெய்ம்மை, உன்னை விரித்துரைக்கில்,
தேறும் வகைஎன்? சிவலோகா!
திகைத்தால், தேற்ற வேண்டாவோ! 5

நீ நினைப்பது எப்படி அப்படி அருளுக

வேண்டத் தக்கது அறிவோய்நீ!
வேண்ட, முழுதும் தருவோய்நீ!
வேண்டும் அயன்,மாற்கு, அரியோய்நீ!
வேண்டி, என்னைப் பணிகொண்டாய்;
வேண்டி, நீ,யாது அருள்செய்தாய்,
யானும், அதுவே வேண்டின்அல்லால்,
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்,
அதுவும், உன்றன் விருப்பன்றே! 6

எனக்கெனச் செயல் ஒன்று இல்லை

அன்றே, என்றன் ஆவியும்,
உடலும், உடைமை எல்லாமும்,
குன்றே அனையாய்! என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ?
எண்தோள், முக்கண், எம்மானே!
நன்றே செய்வாய்; பிழைசெய்வாய்;
நானோ இதற்கு நாயகமே! 7

எல்லாம் உன் உடைமை, எப்படி செய்தால் என்ன?

நாயிற் கடையாம் நாயேனை,
நயந்து, நீயே ஆட்கொண்டாய்;
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டு இருக்கும் அதுவன்றி,
ஆயக் கடவேன், நானோதான்?
என்னதோ, இங்கு, அதிகாரம்?
காயத்து இடுவாய்; உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய்; கண்ணுதலே! 8

அண்ணா! எண்ணக் கடவேனோ?


கண்ணார் நுதலோய்! கழலிணைகள்
கண்டேன், கண்கள் களிகூர;
எண்ணாது, இரவும், பகலும்,நான்,
அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்,
வந்து,உன் கழற்கே புகுமாறும்,
அண்ணா! எண்ணக் கடவேனோ?
அடிமை, சால அழகுடைத்தே! 9

குழகா என்னைக் குழைத்தாயே!

அழகே புரிந்திட்டு, அடிநாயேன்
அரற்று கின்றேன்; உடையானே!
திகழா நின்ற திருமேனி
காட்டி, என்னைப் பணிகொண்டாய்;
புகழே பெரிய பதம்எனக்குப்,
புராண! நீ,தந்து அருளாதே,
குழகா, கோல மறையோனே,
கோனே, என்னைக் குழைத்தாயே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் தேன்மொழி அம்மை உடனமர்
அருள்மிகு தேவகுருநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



34. உயிருண்ணிப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; சிவானந்தம் மேலிடுதல்
திருவருளில் கலந்து திளைப்பது
(கலிவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

எந்த நாள் கருணைக்கு உரித்தாகும் நாள்

பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம் அதாய்,என்
மெய்ந்நாள்தொறும் பிரியா, வினைக்கேடா! விடைப்பாகா!
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்!
எந்நாள் களித்து,எந்நாள் இறுமாக்கேன், இனி,யானே? 1

வான் உலகமும் அறியா வளம் ஈந்தான்

நானார், அடிஅணைவான்? ஒருநாய்க்குத் தவிசிட்டு,இங்கு,
ஊனார் உடல்புகுந்தான்; உயிர்கலந்தான்; உளம்பிரியான்;
தேனார் சடைமுடியான்; மன்னுதிருப்பெருந்துறை உறைவான்;
வானோர்களும் அறியாததோர் வளம்ஈந்தனன், எனக்கே. 2

ஓரே பெருவெளி, ஒன்றும் அறியேன், உன்மத்தன் ஆனேன்

எனை,நான் என்பதறியேன்; பகல்,இரவாவதும் அறியேன்,
மனவாசகம் கடந்தான், எனை,மத்தஉன் மத்தனாக்கிச்;
சினமால் விடைஉடையான், மன்னுதிருப்பெருந்துறை உறையும்
பனவன், எனைச்செய்த படிறறியேன்; பரஞ்சுடரே! 3

மனத்து அகத்தான், தலைமேலான், வாக்கின் உள்ளான்

வினைக்கேடரும் உளரோ பிறர்,சொல்லீர்? வியனுலகில்
எனைத்,தான் புகுந்து,ஆண்டான்; எனதுஎன்பின் புரைஉருக்கிப்,
பினைத்,தான் புகுந்து,எல்லே! பெருந்துறையில் உறைபெம்மான்,
மனத்தான்; கண்ணினகத்தான்; மறுமாற்றத் திடையானே! 4

பரவுமின், பணிமின், பணிவாரொடு விரவுமின்

பற்றாங்கவை அற்றீர், பற்றும்பற்றாங் கதுபற்றி,
நற்றாங்கதி அடைவோம்எனில், கெடுவீர், ஓடிவம்மின்;
தெற்றார் சடைமுடியான், மன்னுதிருப்பெருந்துறை இறை,சீர்
கற்றாங்கு,அவன் கழல்பேணின ரொடுங்கூடுமின், கலந்தே! 5

ஒழிந்தது கலக்கம் : ஒழிவற நிறைந்தான்

கடலின்திரை அதுபோல்வரு கலக்கம்,மலம், அறுத்து;என்
உடலும், எனதுயிரும், புகுந்து;ஒழியாவணம், நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய, திருப்பெருந்துறை உறையும்,
படருஞ்சடை மகுடத்து,எங்கள் பரன்தான்செய்த படிறே! 6

ஆளாய் இனி அல்லன் எனல் ஆமோ?

வேண்டேன்புகழ், வேண்டேன்செல்வம்; வேண்டேன் மண்ணும்விண்ணும்;
வேண்டேன் பிறப்பு,இறப்புச்; சிவம்வேண்டார் தமைநாளும்
தீண்டேன்; சென்று,சேர்ந்தேன், மன்னுதிருப்பெருந்துறை; இறைதாள்
பூண்டேன்; புறம்போகேன்; இனிப்,புறம் போகலொட்டேனே! 7

ஆற்றேன்; அருமருந்தே! அமுதே! அரசே!

கோற்றேன் எனக்கென்கோ குரைகடல்வாய் அமுதென்கோ
ஆற்றேன் எங்கள்அரனே! அருமருந்தே! எனதுஅரசே!
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்,
நீற்றார்தரு திருமேனிநின் மலனே! உனையானே! 8

ஓர் விந்தை: எல்லாம் அறிவேன்: என்னை அறியேன்!

எச்சம் அறிவேன்நான்; எனக்கிருக்கின்றதை அறியேன்;
அச்சோ! எங்கள்அரனே! அருமருந்தே! எனதமுதே!
செச்சைமலர் புரைமேனியன், திருப்பெருந்துறை உறைவான்!
நிச்சம்என நெஞ்சில்மன்னி, யானாகி நின்றானே! 9

பாவிக்கு அருள் இல்லையா?

வான்பாவிய உலகத்தவர் தவமேசெய, அவமே,
ஊன்பாவிய உடலைச்சுமந்து, அடவிமரம் ஆனேன்;
தேன்பாய் மலர்க்கொன்றை மன்னுதிருப்பெருந்துறை உறைவாய்!
நான்பாவியன் ஆனால், உனைநல்காய் எனலாமே? 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் வாழவந்த நாயகி அம்மை உடனமர்
அருள்மிகு திருவாஞ்சியநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



35. அச்சப்பத்து

திருத்தில்லையில் அருளியது; ஆனந்தம் உறுதல்
சிவபெருமான் அன்றி மற்றத் தெய்வங்களை வழிபடுபவரைக் கண்டு அஞ்சுதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

எதையும் அஞ்சோம்: சிவபெருமானைப் பற்றற்றார் பற்றாகக் கொள்ளாரே அஞ்சத்தக்கார்

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்;
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்;
கற்றைவார் சடைஎம் அண்ணல்,
கண்ணுதல் பாதம் நண்ணி,
மற்றும்ஓர் தெய்வம் தன்னை
உண்டென நினைந்து,எம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 1

சிவபெருமானை விட்டுச், சிறுதெய்வம் கொள்வாரே அஞ்சத்தக்கார்

வெருவரேன், வேட்கை வந்தால்;
வினைக்கடல் கொளினும், அஞ்சேன்;
இருவரால் மாறு காணா
எம்பிரான், தம் பிரான்,ஆம்
திருவுரு அன்றி, மற்றோர்
தேவர், எத்தேவர்?, என்ன
அருவரா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 2

அவனை ஏத்தி அருள் பருகமாட்டாரே அஞ்சத்தக்கார்

வன்புலால் வேலும் அஞ்சேன்;
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்;
என்பெலாம் உருக நோக்கி,
அம்பலத்து ஆடு கின்ற

என்பொலா மணியை ஏத்தி,
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 3

கண்ணீர் ததும்பச் சிவனடி தொழும் தகுதி இல்லாரே அஞ்சத்தக்கார்

கிளியனார் கிளவி அஞ்சேன்;
அவர்கிறி முறுவல் அஞ்சேன்;
வெளிய நீறாடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்,
துளியுலாம் கண்ணர் ஆகித்,
தொழுது,அழுது, உள்ளம் நெக்கு,இங்கு,
அளியிலா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 4

திருநீறு அணியாதவரே அஞ்சத்தக்கார்

பிணியெலாம் வரினும், அஞ்சேன்;
பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்;
துணிநிலா அணியினான் தன்
தொழும்பரோடு அழுந்தி, அம்மால்,
திணிநிலம் பிளந்தும் காணாச்
சேவடி பரவி, வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 5

அவன் திருவடிக்கு ஆள் அல்லாதவரே அஞ்சத்தக்கார்

வாளுலாம் எரியும் அஞ்சேன்;
வரைபுரண்டு இடினும், அஞ்சேன்;
தோளுலாம் நீற்றன், ஏற்றன்,
சொற்பதம் கடந்த அப்பன்,
தாள தாமரைகள் ஏத்தித்,
தடமலர் புனைந்து, நையும்
ஆளலா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 6

அவன் திருவடிக்கு உள்ளம் உருகாதவரே அஞ்சத்தக்கார்

தகைவிலாப் பழியும் அஞ்சேன்;
சாதலை முன்னம் அஞ்சேன்;
புகைமுகந்து எரிகை வீசிப்,
பொலிந்த அம்பலத்துள் ஆடும்,
முகைநகைக் கொன்றை மாலை,
முன்னவன் பாதம் ஏத்தி,
அகம்நெகா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 7

அவன் திருவடியைப் போற்றவல்ல அறிவிலாதவரே அஞ்சத்தக்கார்

தறிசெறி களிறும் அஞ்சேன்;
தழல்விழி உழுவை அஞ்சேன்;
வெறிகமழ் சடையன், அப்பன்,
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்,
சிறந்து,இனிது இருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 8

திருநீறு பூசாதவரே அஞ்சத்தக்கார்


மஞ்சுலாம் உருவும் அஞ்சேன்;
மன்னரோடு உறவும் அஞ்சேன்;
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம்பிரான், எம்பி ரானாய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டாது,
அஞ்சுவார் அவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 9

அவனை ஏத்தும் ஆண்மையில்லாதவரே அஞ்சத்தக்கார்

கோணிலா வாளி அஞ்சேன்;
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்;
நீணிலா அணியி னானை
நினைந்து,நைந்து, உருகி, நெக்கு,
வாணிலாம் கண்கள் சோர,
வாழ்த்திநின்று, ஏத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்,
அம்ம!நாம் அஞ்சு மாறே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் சோதிமின்னம்மை உடனமர்
அருள்மிகு அமுதகுடத்தர் திருவடிகள் போற்றி ! போற்றி !



36. திருப்பாண்டிப்பதிகம்

திருப்பெருந்துறையில் அருளியது; சிவானந்த விளைவு
சிவபெருமான் பாண்டிய மன்னனாக வந்ததைப் பாடிப் பரவுதல்
(கட்டளைக் கலித்துறை)

திருச்சிற்றம்பலம்

என் உள்ளம் உருக்கிய ஒருவரை அன்றி வேறு அறியேன்

பருவரை மங்கைதன் பங்கரைப், பாண்டியற்கு ஆரமுதாம்
ஒருவரை, ஒன்றும் இலாதவரைக், கழற்போது இறைஞ்சித்,
தெரிவர நின்று,உருக்கிப், பரிமேல் கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி, உருவறி யாதென்றன் உள்ளமதே. 1

சார்ந்தவர், தம்மை மறந்து ஆர்வம் கொள்வர்

சதுரை மறந்து,அறி மால்கொள்வர் சார்ந்தவர்; சாற்றிச்சொன்னோம்;
கதிரை மறைத்தன்ன சோதி, கழுக்கடை கைப்பிடித்துக்,
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்,குடி கேடுகண்டீர்!
மதுரையர் மன்னன், மறுபிறப்பு ஓட மறித்திடுமே. 2

ஆனந்த வெள்ளம் உலகம் எல்லாம் பரவுகின்றது

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்கொண்டீர்;
பார்,இன்ப வெள்ளம் கொளப்,பரி மேற்கொண்ட பாண்டியனார்,
ஓரின்ப வெள்ளத்து உருக்கொண்டு, தொண்டரை உள்ளங்கொண்டார்:
பேரின்ப வெள்ளத்துள், பெய்கழலே சென்று பேணுமினே. 3

திருவருள் விளங்குகின்ற காலம் இது

செறியும் பிறவிக்கு, நல்லவர் செல்லன்மின்; தென்னன்,நன்னாட்டு
இறைவன், கிளர்கின்ற காலம் இக்காலம், எக்காலத்துள்ளும்;
அறிவொண் கதிர்வாள், உறைகழித்து, ஆனந்த மாக்கடவி,
எறியும் பிறப்பை, எதிர்ந்தார் புரள, இருநிலத்தே. 4

முந்துங்கள் மூலபண்டாரம் வழங்குகின்றான்

காலம் உண்டாகவே, காதல்செய்து உய்ம்மின்; கருதரிய
ஞாலம் உண்டானொடு, நான்முகன், வானவர், நண்ணரிய
ஆலம் உண்டான்; எங்கள் பாண்டிப்பிரான்; தன்அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான்; வந்து, முந்துமினே. 5

வேண்டுவார் வேண்டுவதெல்லாம் வேண்டிய போதே வாய்க்கும், விலக்கு இல்லை

ஈண்டிய மாயா இருள்கெட, எப்பொருளும் விளங்கத்,
தூண்டிய சோதியை, மீனவனும் சொல்ல வல்லன்அல்லன்;
வேண்டிய போதே விலக்கிலை வாய்தல்; விரும்புமின்தாள்;
பாண்டியனார் அருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே. 6

பிறவிப்பிணி அகலும் : அவன்திருவடியை இடைவிடாது நினையுங்கள்

மாயவனப் பரிமேல் கொண்டு, மற்றவர் கைக்கொளலும்,
போயறும், இப்பிறப்பு என்னும் பகைகள்; புகுந்தவருக்கு
ஆய, அரும்பெருஞ், சீருடைத் தன்னருளே அருளுஞ்;
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே. 7

நீக்கம் இல்லாத கருணை உலகம் எல்லாம் வழங்குகின்றான்

அழிவின்றி நின்றதொர் ஆனந்த வெள்ளத்து இடையழுத்திக்,
கழிவில் கருணையைக் காட்டிக், கடிய வினையகற்றிப்,
பழமலம் பற்றறுத்து, ஆண்டவன், பாண்டிப் பெரும்பதமே,
முழுதுலகும், தருவான், கொடையே; சென்று முந்துமினே. 8

கொடியார் மரமானார்; ஏன்? குதிரை மேல் வந்தான்


விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந் நீர்கடக்கப்,
பரவிய அன்பரை, என்புருக்கும் பரம் பாண்டியனார்,
புரவியின் மேல்வரப், புந்தி கொளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு, தம்மையும் தாம்அறி யார்,மறந்தே. 9

பெருந்தேவியும் தானுமாக வீற்றிருக்கும் வீரன்

கூற்றைவென்று, ஆங்கைவர் கோக்களையும் வென்றிருந்து, அழகால்
வீற்றிருந்தான், பெருந் தேவியும், தானும்ஓர் மீனவன்பால்
ஏற்றுவந்து ஆருயிர் உண்ட, திறல்ஒற்றைச் சேவகனே;
தேற்றம் இலாதவர்! சேவடி சிக்கெனச் சேர்மின்களே. 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பச்சைநாயகி அம்மை உடனமர்
அருள்மிகு பச்சைமலை நாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



37. பிடித்தபத்து

திருத்தோணிபுரத்தில் அருளியது; முத்திக்கலப்புரைத்தல்
திருவருள் ஒன்றையே பற்றி நிற்றல்
(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

வாழ்விக்க வந்த செம்பொருள்

உம்பர்கட்கு அரசே! ஒழிவற நிறைந்த
யோகமே! ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்து,என் குடிமுழுது ஆண்டு,
வாழ்வற வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே! சீருடைக் கழலே!
செல்வமே! சிவபெரு மானே!
எம்பொருட்டு, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 1

கடைப்படாமல் காத்த மெய்ப்பொருள்

விடைவிடாது உகந்த விண்ணவர் கோவே!
வினையனேன் உடையமெய்ப் பொருளே!
முடைவிடாது, அடியேன் மூத்து,அற மண்ணாய்,
முழுப்புழுக் குரம்பையில் கிடந்து,
கடைபடா வண்ணம் காத்து,எனை ஆண்ட
கடவுளே! கருணைமா கடலே!
இடைவிடாது, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 2

பொய்ம்மையை ஒழித்த செம்மை

அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்,
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்

செம்மையே ஆய, சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்!
எங்கு எழுந்தருளுவது, இனியே? 3

இருள் நீக்கிய தெருள்

அருளுடைச் சுடரே! அளிந்ததோர் கனியே!
பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே!
பொருளுடைக் கலையே! புகழ்ச்சியைக் கடந்த
போகமே! யோகத்தின் பொலிவே!
தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே! சிவபெரு மானே!
இருளிடத்து, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 4

செப்புதற்கு அரிய செழுஞ்சுடர்

ஒப்புனக்கு இல்லா ஒருவனே! அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே!
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமியது அளித்ததோர் அன்பே!
செப்புதற்கு அரிய செழுஞ்சுடர் மூர்த்தீ!
செல்வமே! சிவபெரு மானே!
எய்ப்பிடத்து, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 5

உள்ளக் கோயிலின் அம்பலக் காட்சி

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டு,ஆண்டு,
அளவிலா ஆனந்தம் அருளிப்,
பிறவிவேர் அறுத்து,என் குடிமுழுது ஆண்ட
பிஞ்ஞகா! பெரிய எம்பொருளே!
திறவிலே கண்ட காட்சியே! அடியேன்
செல்வமே! சிவபெரு மானே!
இறவிலே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 6

வணங்க வழிவகுத்த கழல்

பாச வேரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமாறு, அடியனேற்கு அருளிப்,
பூசனை உகந்து,என் சிந்தையுட் புகுந்து,
பூங்கழல் காட்டிய பொருளே!
தேசுடை விளக்கே! செழுஞ்சுடர் மூர்த்தீ!
செல்வமே! சிவபெரு மானே!
ஈசனே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 7

எங்குமாய் நிறைந்தவன்

அத்தனே! அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே! யாதும் ஈறில்லாச்
சித்தனே! பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே! சிவபெரு மானே!
பித்தனே! எல்லா உயிருமாய்த் தழைத்துப்,
பிழைத்து,அவை அல்லையாய் நிற்கும்
எத்தனே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 8

அன்னையினும் தயை உடையான்


பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து,நீ, பாவியேன் உடைய
ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி,
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து, புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து, சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? 9

நிலையிலாப் புலால் உடம்பே கனிய நின்ற கற்பகம்

புன்புலால் யாக்கை, புரைபுரை கனியப்
பொன்னெடும் கோயிலாப் புகுந்து,என்
என்பெலாம் உருக்கி, எளியையாய் ஆண்ட
ஈசனே! மாசிலா மணியே!
துன்பமே, பிறப்பே, இறப்பொடு, மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ!
இன்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே?

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் திருநிலை நாயகி அம்மை உடனமர்
அருள்மிகு திருத்தோணிபுரநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



38. திருவேசறவு

திருப்பெருந்துறையில் அருளியது; சுட்டறிவு ஒழித்தல்
இறைவன் ஆட்கொண்ட நிகழ்ச்சியை நினைந்து உருகுதல்
(கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

கரும்பினும் இனிய கழல் இணை

இரும்புதரு மனத்தேனை, ஈர்த்து,ஈர்த்து,என் என்புருக்கிக்,
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்;
ஒருங்குதிரை உலவுசடை உடையானே! நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றே,உன் பேரருளே! 1

' நீ வா ' என்ற ஆரமுது

பண்ணார்ந்த மொழிமங்கை பங்கா!நின் ஆளானார்க்கு
உண்ணார்ந்த ஆரமுதே! உடையானே! அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட்டு ஆள்வாய்,நீ, 'வா'என்னக்;
கண்ணார உய்ந்தவாறு அன்றே,உன் கழல்கண்டே! 2

'அஞ்சல்' என்று அருளிய பாதமலர்

ஆதமிலி யான்,பிறப்பு, இறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே, அழுந்துவேற்கு, 'ஆ!ஆ!'வென்று,
ஓதமலி நஞ்சுண்ட உடையானே! அடியேற்குன்
பாதமலர் காட்டியவாறு அன்றே,எம் பரம்பரனே! 3

உள்ளத்தை உய்யும் வழியில் செலுத்திய திறம்

பச்சைத்தால் அரவாட்டீ! படர்சடையாய்! பாதமலர்
உச்சத்தார் பெருமானே! அடியேனை உய்யக்கொண்டு,
எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே, அச்சோ!என்
சித்தத்துஆறு உய்ந்தவாறு அன்றே,உன் திறம்நினைந்தே! 4

அறிவில்லேன், அகம் நெகிழேன், உறுதி மாறேன்

கற்றறியேன் கலைஞானம்; கசிந்துருகேன்; ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்; வாக்கியலால், வார்கழல்வந்து
உற்று,இறுமாந்து இருந்தேன்;எம் பெருமானே! அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமாறு அன்றே,நின் பொன்னருளே! 5

‘ அஞ்சேல் ’ என்று ஆண்ட அம்பலத்து அமுது

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு,
நஞ்சாய துயர்கூர, நடுங்குவேன்; நின்னருளால்
உய்ஞ்சேன்;எம் பெருமானே! உடையானே! அடியேனை,
‘அஞ்சேல்’என்று ஆண்டவாறு அன்றே,அம் பலத்தமுதே! 6

என் முகம் நோக்கிய அன்பு

என்பாலைப் பிறப்பறுத்து,இங்கு, இமையவர்க்கும்
அறியவொண்ணாத்,
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையும் சிவபெருமான்,
அன்பால்,நீ, அகம்நெகவே புகுந்தருளி, ஆட்கொண்டது,
என்பாலே நோக்கியவாறு அன்றே,எம் பெருமானே! 7

கை தூக்கிவிட்ட கருணை

மூத்தானே, மூவாத முதலானே, முடிவில்லா
ஓத்தானே, பொருளானே, உண்மையுமாய், இன்மையுமாய்ப்
பூத்தானே, புகுந்திங்குப் புரள்வேனைக், கருணையினால்
பேர்த்தே,நீ ஆண்டவாறு அன்றே,எம் பெருமானே! 8

மலர்ப் பாதம் மனத்தில் வளர அருள்


மருவினிய மலர்ப்பாதம், மனத்தில்வளர்ந்து உள்ளுருகத்,
தெருவுதொறும் மிகஅலறிச், ‘ சிவபெருமான் ’ என்றேத்திப்,
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு,
அருளெனக்கு,இங்கு இடைமருதே இடங்கொண்ட அம்மானே! 9

தானே வந்து அருள் செய்தான்

நானேயோ தவம்செய்தேன்? ‘ சிவாயநம ’ எனப்பெற்றேன்,
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து, எனதுள்ளம் புகுந்து,அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து,அன்றே வெறுத்திடவே!

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் அறம்வளர்நாயகி அம்மை உடனமர்
அருள்மிகு ஐயாறப்பர் திருவடிகள் போற்றி ! போற்றி !



39. திருப்புலம்பல்

திருவாரூரில் அருளியது; சிவானந்த முதிர்வு
திருவடியையே நினைந்து நினைந்து பாடுதல்
(கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பூங்கழல்களையே புகழ்வேன்

பூங்கமலத்து அயனொடுமால் அறியாத நெறியானே,
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறா, வெண்ணீறாடி,
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே, அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லாது, எவையாதும் புகழேனே! 1

வேறு துணை அறியேன்

சடையானே, தழலாடி, தயங்கு மூவிலைச்சூலப்
படையானே, பரஞ்சோதீ, பசுபதீ, மழவெள்ளை
விடையானே, விரிபொழில்சூழ் பெருந்துறையாய், அடியேன்நான்,
உடையானே, உனையல்லாது, உறுதுணைமற்று அறியேனே! 2

நின்னையே நான் வேண்டி, நீள் செல்வம் வேண்டாதேன்

உற்றாரை யான்வேண்டேன்; ஊர்வேண்டேன்; பேர்வேண்டேன்;
கற்றாரை யான்வேண்டேன்; கற்பனவும் இனியமையும்;
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா!உன் குரைகழற்கே,
கற்றாவின் மனம்போலக், கசிந்துருக, வேண்டுவனே! 3

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் அல்லியம் பூங்கோதை அம்மை உடனமர்
அருள்மிகு புற்றிடங்கொண்டார் திருவடிகள் போற்றி ! போற்றி !

40. குலாப்பத்து

திருத்தில்லையில் அருளியது; அனுபவம் இடையீடு படாமை
தில்லைக் காட்சியின் பெருமையைப் பேசுதல்
(கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

திருநாடு காண இம்மையிலே பிச்சை தான் கொள்வர்

'ஓடுங் கவந்தியுமே, உறவு'என்றிட்டு, உள்கசிந்து;
'தேடும் பொருளும் சிவன்கழலே' எனத்தெளிந்து;
கூடும், உயிரும், குமண்டையிடக் குனித்து;அடியேன்
ஆடும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 1

தீவினை ஒழிந்தேன்

துடியேர் இடுகு,இடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்,
முடியேன்; பிறவேன்; எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 2

இனி வருவனவற்றை அறியச் செய்தான்

என்புள் உருக்கி, இருவினையை ஈடழித்துத்,
துன்பம் களைந்து, துவந்துவங்கள் தூய்மைசெய்து,
முன்பு உள்ளவற்றை முழுதழிய, உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 3

உள்ளத்தில் தோன்றும் உருவம்

குறியும், நெறியும், குணமும்இலார் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியும் கருத்தில் உருத்து,அமுதாம் சிவபதத்தை
அறியும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 4

பிறவியை ஒழிக்கும் கருணைத்தேன்

பேரும், குணமும், பிணிப்புறும் இப்பிறவிதனைத்
தூரும் பரிசு, துரிசறுத்துத், தொண்டர்எல்லாம்
சேரும் வகையால், சிவன்கருணைத் தேன்பருகி
ஆரும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 5

மாதுயர் இடும்பை காய்த்து, மரணமே கனியாவண்ணம் காத்தான்

கொம்பில் அரும்பாய்க், குவிமலராய்க், காயாகி,
வம்பு பழுத்து,உடலம் மாண்டு,இங்ஙன் போகாமே;
நம்பும் என்சிந்தை நணுகும்வண்ணம், நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6

அரக்கனை நெரித்த திருவடி,
அடியேன் தலைமேல் மென்மலராக மிளிர்கின்றது

மதிக்கும் திறலுடைய வல்அரக்கன் தோள்நெரிய,
மிதிக்கும் திருவடி என்தலைமேல் வீற்றிருப்பக்,
‘ கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் ’ எனக்களித்து,இங்கு
அதிர்க்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 7

ஐவரும் வல்லாட்டை அடங்கினர்

இடக்கும் கருமுருட்டு ஏனப்பின், கானகத்தே,
நடக்கும் திருவடி, என்தலைமேல் நட்டமையால்,
கடக்கும் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 8

பழந்தனம் இழந்தவர் படைத்ததனை ஒத்தேன்


பாழ்ச்செய் விளாவிப், பயனிலியாய்க் கிடப்பேற்குக்,
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்,
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கு,என் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 9

செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேன்

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால், திருப்பணிகள் செய்வேனுக்கு,
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு சந்திரதீபநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



41. அற்புதப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; அனுபவம் ஆற்றாமை
திருவருளுக்குத் தகுதி இல்லாமையை நினைந்து பாடுதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பொய்யெலாம் விட, வந்த மெய்யன்

மையலாய், இந்த மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுள் அகப்பட்டுத்,
தையலார் எனும் சுழித்தலைப் பட்டு,நான்
தலைதடு மாறாமே,
பொய்யெலாம் விடத், திருவருள் தந்து,தன்
பொன்னடி இணைகாட்டி,
மெய்யனாய், வெளி காட்டி,முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே! 1

துயர் புகாவண்ணம் அருள் செய்தான்

ஏய்ந்த மாமலர் இட்டு, முட்டாததோர்
இயல்பொடும் வணங்காதே,
சாந்தம் ஆர்முலைத் தையல் நல்லாரொடும்
தலைதடு மாறாகிப்,
போந்து, யான்துயர் புகாவணம் அருள்செய்து,
பொற்கழல் இணைகாட்டி,
வேந்தனாய், வெளியே, என்முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே! 2

அகந்தை ஒழித்த அக்காரம்

நடித்து, மண்ணிடைப்; பொய்யினைப் பலசெய்து;
'நான்,எனது' எனும்மாயக்
கடித்த வாயிலே நின்று;முன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்,

பிடித்து, முன்னின்று, அப்பெருமறை தேடிய
அரும்பொருள், அடியேனை
அடித்து அடித்து, அக்காரமும் தீற்றிய
அற்புதம் அறியேனே! 3

திருவொடும் அகலாத அருந்துணை

பொருந்தும் இப்பிறப்பு, இறப்பு,இவை நினையாது
பொய்களே புகன்றுபோய்க்;
கருங் குழலினார் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்;
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்,
திருவொடும் அகலாதே,
அருந் துணைவனாய், ஆண்டுகொண்டு, அருளிய
அற்புதம் அறியேனே! 4

வீடு தந்த மென்மலர்க் கழல்

மாடும், சுற்றமும், மற்றுள போகமும்,
மங்கையர் தம்மோடும்
கூடி, அங்குள குணங்களால் ஏறுண்டு,
குலாவியே திரிவேனை,
வீடு தந்து,என்றன் வெந்தொழில் வீட்டிட,
மென்மலர்க் கழல்காட்டி,
ஆடு வித்து,எனது அகம்புகுந்து, ஆண்டதோர்
அற்புதம் அறியேனே! 5

கோமளத்தோடு கூடிய குணக்கடல்

வணங்கும் இப்பிறப்பு, இறப்பு,இவை நினையாது,
மங்கையர் தம்மோடும்
பிணைந்து, வாயிதழ்ப் பெருவெள்ளத்து அழுந்தி,நான்
பித்தனாய்த் திரிவேனைக்,
குணங்களும், குறிகளும், இலாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி,
அணைந்து வந்து,எனை ஆண்டுகொண்டு, அருளிய
அற்புதம் அறியேனே! 6

ஆண்டு கொண்ட அப்பன்

இப்பிறப்பினில், இணைமலர் கொய்து, நான்
இயல்பொடு அஞ்செழுத்தோதித்,
தப்பு இலாதுபொற் கழல்களுக்கு இடாது,நான்
தடமுலை யார்தங்கள்
மைப்புலாம் கண்ணால், ஏறுண்டு கிடப்பேனை,
மலரடி இணைகாட்டி,
அப்பன், என்னை,வந்து ஆண்டுகொண்டு, அருளிய
அற்புதம் அறியேனே! 7

அடியார் அடிக்கூட்டிய கருணை

ஊசல் ஆட்டும்இவ் உடல்,உயிர் ஆயின
இருவினை அறுத்து,என்னை,
ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்,
உணர்வுதந்து, ஒளியாக்கிப்,
பாசம் ஆனவை பற்றறுத்து, உயர்ந்ததன்
பரம்பெரும் கருணையால்
ஆசை தீர்த்து, அடியார் அடிக்கூட்டிய
அற்புதம் அறியேனே! 8

வறள் நிலத்தில் தோன்றிய வாசனைப்பூ


பொச்சை யான,இப் பிறவியில் கிடந்து,நான்,
புழுத்தலை நாய்போல,
இச்சை யாயின ஏழையர்க்கே செய்து,அங்கு
இணங்கியே திரிவேனை,
இச்சகத்து, அரி, அயனும் எட்டாத,தன்
விரைமலர்க் கழல்காட்டி,
அச்சன், என்னையும் ஆண்டுகொண்டு, அருளிய
அற்புதம் அறியேனே! 9

அறிவு தந்து ஆண்டான்

செறியும் இப்பிறப்பு, இறப்பு,இவை நினையாது
செறிகுழலார் செய்யும்
கிறியும், கீழ்மையும், கெண்டையங் கண்களும்,
உன்னியே கிடப்பேனை,
இறைவன், எம்பிரான், எல்லையில்லாத தன்
இணைமலர்க் கழல்காட்டி,
அறிவு தந்து,எனை ஆண்டுகொண்டு, அருளிய
அற்புதம் அறியேனே! 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் சிவகாமி அம்மை உடனமர்
அருள்மிகு குற்றாலநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



42. சென்னிப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது; சிவ விளைவு
திருவடியையே தன் தலையில் கொண்டிருப்பது
(ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

அன்பர் அறியும் சோதி

தேவ தேவன், மெய்ச் சேவகன்,
தென் பெருந்துறை நாயகன்,
மூவ ராலும் அரியொணா, முதல்
ஆய, ஆனந்த மூர்த்தியான்,
யாவர் ஆயினும், அன்பர் அன்றி,
அறியொணா மலர்ச் சோதியான்,
தூய மாமலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி, மன்னிச் சுடருமே! 1

மங்கையைப் பாகம் வைத்த ஆனந்த வெள்ளம்

அட்ட மூர்த்தி, அழகன், இன்னமுது
ஆய ஆனந்த வெள்ளத்தான்,
சிட்டன், மெய்ச்சிவ லோக நாயகன்,
தென் பெருந்துறைச் சேவகன்,
மட்டு வார்குழல் மங்கையாளை, ஓர்
பாகம் வைத்த அழகன்றன்
வட்ட மாமலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, மலருமே! 2

என் உயிரையும், பணியையும் கொள்ளும் நாதன்

நங்கைமீர்; எனை நோக்குமின்; நங்கள்
நாதன், நம்பணி கொண்டவன்,
தெங்கு சோலைகள் சூழ் பெருந்துறை
மேய சேவகன், நாயகன்,

மங்கை மார்கையில் வளையும் கொண்டு,எம்
உயிரும் கொண்டு,எம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னிப், பொலியுமே!. 3

இல் புகுந்து எம்மை ஆட்கொண்ட எத்தன்

பத்தர் சூழப், பரா பரன்
பாரில்வந்து, பார்ப்பான் எனச்,
சித்தர் சூழச், சிவ பிரான்,
தில்லை மூதூர் நடஞ்செய்வான்,
எத்தன் ஆகிவந்து, இல்புகுந்து, எமை
ஆளும் கொண்டு,எம் பணிகொள்வான்
வைத்த, மாமலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, மலருமே! 4

உள்ளத் தேறல் அமுத ஒளிவெளி காட்டிய வள்ளல்

மாய வாழ்க்கையை, மெய்யென்று எண்ணி,
மதித்திடா வகை நல்கினான்;
வேய தோளுமை பங்கன், எங்கள்
திருப் பெருந்துறை மேவினான்;
காயத்துள் அமுது ஊறஊற, ' நீ
கண்டுகொள் ' என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னித், திகழுமே! 5

சித்தம் புகுந்து முத்தி தந்தான்

சித்தமே புகுந்து, எம்மை ஆட்கொண்டு,
தீவினை கெடுத்து, உய்யலாம்
பத்தி தந்து,தன் பொற் கழற்கணே
பன்மலர் கொய்து சேர்த்தலும்,
முத்தி தந்து, இந்த மூவுலகுக்கும்
அப்புறத்து எமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, மலருமே! 6

பிறவிப் பெருங்கடல் நீந்தத் திறமை காட்டும் சேவடி

பிறவி என்னும் இக்கடலை நீந்தத்,தன்
பேரருள் தந்து அருளினான்,
அறவை என்று, அடியார்கள் தங்கள்
அருட்குழாம் புகவிட்டு, நல்
உறவு செய்து,எனை உய்யக் கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவடிக்கண், நம்
சென்னி மன்னித், திகழுமே! 7

தவறாது தாங்கும் சேவடி

' புழுவினால் பொதிந் திடு குரம்பையில்
பொய்தனை ஒழி வித்திடும்
எழில்கொள் சோதி,எம் ஈசன், எம்பிரான்,
என்னுடை அப்பன் ' என்றென்று,
தொழுத கையினர் ஆகித்; தூய்மலர்க்
கண்கள்நீர் மல்கும் தொண்டர்க்கு
வழுவிலா மலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, மலருமே! 8

இன்பம் தழைக்கும் மலரடி

வம்பனாய்த் திரிவேனை, ' வா ' என்று
வல்வினைப் பகை மாய்த்திடும்,
உம்பரான் உலகு ஊடறுத்து அப்
புறத்தனாய் நின்ற எம்பிரான்,
அன்பர் ஆனவர்க்கு அருளி, மெய்யடி
யார்கட்கு இன்பம் தழைத்திடும்
செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னித், திகழுமே! 9

பத்தர்காள் வம்மின் பாசம் தீரப்; பணிமின்

முத்தனை, முதல் சோதியை, முக்கண்
அப்பனை, முதல் வித்தினைச்,
சித்தனைச், சிவ லோகனைத், திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர்காள்! இங்கே, வம்மின்,நீர்; உங்கள்
பாசம் தீரப் பணிமினோ;
சித்தம் ஆர்தரும் சேவடிக்கண், நம்
சென்னி மன்னித், திகழுமே. 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு திருக்கோகழிநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !



43. திருவார்த்தை

திருப்பெருந்துறையில் அருளியது; அறிவித்து அன்புறுதல்
அருளனுபவத்தைக் கூறுவது
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

நிலவுலகில் தோன்றிய இறை உருவம்

மாதிவர் பாகன், மறைபயின்ற
வாசகன், மாமலர் மேயசோதி,
கோதில் பரங்கருணை, அடியார்
குலாவுநீதி குணமாக நல்கும்,
போதலர் சோலைப் பெருந்துறை,எம்
புண்ணியன், மண்ணிடை வந்திழிந்து,
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறிவார் எம்பிரான் ஆவாரே. 1

இடவையில் அளித்த அருள்

மால்,அயன், வானவர் கோனும்வந்து
வணங்க, அவர்க்கருள் செய்தஈசன்,
ஞாலம் அதனிடை வந்திழிந்து,
நன்னெறி காட்டி, நலம்திகழும்
கோல மணியணி மாடநீடு
குலாவும் இடவை மடநல்லாட்குச்,
சீலமிகக் கருணை அளிக்கும்
திறமறிவார் எம்பிரான் ஆவாரே. 2

வலை வீசியது

அணிமுடி ஆதி அமரர்கோமான்,
ஆனந்தக் கூத்தன், அறுசமயம்
பணிவகை செய்து, படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்

பிணிகெட, நல்கும் பெருந்துறையெம்
பேரருளாளன், பெண் பாலுகந்து,
மணிவலை கொண்டு,வான் மீன்விசிறும்
வகையறிவார் எம்பிரான் ஆவாரே. 3

அன்பர்களை ஆண்டது

வேடுரு ஆகி, மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்து,தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்,
சிந்தனைசெய்து, அடியோங்கள் உய்ய,
ஆடல் அமர்ந்த பரிமாஏறி,
ஐயன், பெருந்துறை ஆதி,அந்நாள்
ஏடர்களை எங்கும் ஆண்டுகொண்ட
இயல்பறிவார் எம்பிரான் ஆவாரே. 4

மண்டோதரிக்கு அருளியது

வந்து, இமையோர்கள் வணங்கியேத்த,
மாக்கருணைக் கடலாய், அடியார்
பந்தனை விண்டற நல்கும்,எங்கள்
பரமன், பெருந்துறை ஆதி,அந்நாள்
உந்து திரைக்கடலைக் கடந்து,அன்று,
ஓங்குமதில் இலங்கை அதனில்,
பந்தணை மெல்விரலாட்கு அருளும்
பரிசறிவார் எம்பிரான் ஆவாரே. 5

பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது

வேவத் திரிபுரம், செற்றவில்லி,
வேடுவனாய்க், கடிநாய்கள் சூழ,
ஏவல் செயல்செய்யும் தேவர்முன்னே
எம்பெருமான் தான், இயங்குகாட்டில்
ஏவுண்ட பன்றிக்கு இரங்கி,ஈசன்,
எந்தை, பெருந்துறை ஆதி,அன்று
கேவலம் கேழலாய்ப், பால்கொடுத்த
கிடப்பறிவார் எம்பிரான் ஆவாரே. 6

வேற்றுமை கெடுத்து, அருள் செய்தது

நாதம் உடையதோர் நற்கமலப்
போதினில் நண்ணிய நன்னுதலார்,
ஓதிப், பணிந்து,அலர் தூவி,ஏத்த,
ஒளிவளர் சோதி,எம் ஈசன்;மன்னும்,
போதலர் சோலைப், பெருந்துறையெம்
புண்ணியன்; மண்ணிடை வந்துதோன்றிப்,
பேதம் கெடுத்து,அருள் செய்பெருமை
அறியவல்லார் எம்பிரான் ஆவாரே. 7

வலைவாணன் மகளை மணந்தது

பூவலர் கொன்றையம் மாலைமார்பன்,
போருகிர் வன்புலி கொன்றவீரன்,
மாதுநல்லாள், உமை மங்கை,பங்கன்,
வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்,
ஏதில் பெரும்புகழ் எங்கள்ஈசன்,
இருங்கடல் வாணற்குத் தீயில்தோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறிவார் எம்பிரான் ஆவாரே. 8

துன்பம் நீக்கி, என்னை ஆண்டது

தூவெள்ளை நீறணி எம்பெருமான்,
சோதி மகேந்திர நாதன்,வந்து
தேவர் தொழும்பதம் வைத்தஈசன்,
தென்னன், பெருந்துறை ஆளி,அன்று
காதல் பெருகக், கருணைகாட்டித்,
தன்கழல் காட்டிக், கசிந்துருகக்,
கேதம் கெடுத்து,என்னை ஆண்டருளும்
கிடப்பறிவார் எம்பிரான் ஆவாரே. 9

அங்கணன், எங்கள் அமரர்பெம்மான்,
அடியார்க்கு அமுதன், அவனிவந்த
எங்கள்பிரான், இரும் பாசந்தீர
இகபரம் ஆயதோர் இன்பமெய்தச்,
சங்கம் கவர்ந்து, வண்சாத்தினோடும்,
சதுரன், பெருந்துறை ஆளி,அன்று
மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த
வகையறிவார் எம்பிரான் ஆவாரே. 10

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு மகேந்திரமலைநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

44. எண்ணப்பதிகம்

திருத்தில்லையில் அருளியது; ஒழியா இன்பத்து உவகை
அடியார் நடுவுள் இருக்க விரும்புவது
(ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

அடியவருள் கூட்டி உய்யக்கொள்

பாருரு ஆய பிறப்பற வேண்டும்;
பத்திமையும் பெற வேண்டும்;
சீருரு வாய சிவபெரு மானே,
செங்கமல மலர் போல்
ஆருரு வாயஎன் ஆரமுதே, உன்
அடியவர் தொகை நடுவே,
ஓருரு வாயநின் திருவருள் காட்டி,
என்னையும் உய்யக்கொண்டு அருளே. 1

உன்னைப் பிரிந்து தரியேன்

உரியேன் அல்லேன் உனக்கு அடிமை;
உன்னைப் பிரிந்து;இங்கு ஒருபொழுதும்
தரியேன், நாயேன்; இன்னது என்று
அறியேன்; சங்கரா! கருணையினால்
பெரியோன் ஒருவன், ‘ கண்டுகொள் ’ என்று,உன்
பெய்கழல் அடி காட்டிப்,
‘பிரியேன்’ என்றுஎன்று, அருளிய அருளும்
பொய்யோ? எங்கள் பெருமானே! 2

உருக்கி, உயிர் உண்ணும் இன்பம்

என்பே உருக, நின்அருள் அளித்து,உன்
இணைமலர் அடி காட்டி,
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா, முனிவர் முழுமுதலே,
இன்பே அருளி, எனை உருக்கி,
உயிர் உண்கின்ற எம்மானே!
நண்பே அருளாய் என் உயிர்
நாதா! நின்னருள் நாணாமே. 3

தொடர்ந்தேன், பிரிந்து ஆற்றேன்

பத்தில னேனும், பணிந்தில னேனும்,உன்
உயர்ந்த பைங் கழல்காணப்
பித்தில னேனும், பிதற்றில னேனும்,
பிறப்பறுப்பாய்; எம் பெருமானே!
முத்தனை யானே! மணியனை யானே!
முதல்வனே! ' முறையோ? ' என்று
எத்தனை யானும் யான்தொடர்ந்து, உன்னை
இனிப் பிரிந்து ஆற்றேனே. 4

புன்மையால் புறமானேன்; நாணுகின்றேன்

காணுமது ஒழிந்தேன் நின்திருப் பாதம்;
கண்டு கண் களிகூரப்,
பேணுமது ஒழிந்தேன்; பிதற்றுமது ஒழிந்தேன்;
பின்னை, எம் பெருமானே,
தாணுவே, அழிந்தேன்; நின்நினைந்து உருகும்
தன்மை, என் புன்மைகளால்,
காணுமது ஒழிந்தேன் நீயினி வரினும்
காணவும் நாணு வனே. 5

என் உள்ளே உன்னை நிறுத்தினேன்: இரங்கு

பால் திரு நீற்றெம் பரமனைப்;
பரங் கருணையோடும் எதிர்ந்து
தோற்றி, மெய்யடியார்க்கு அருள்துறை அளிக்கும்
சோதியை; நீதி இலேன்,
போற்றி,என் அமுதே, எனநினைந்து, ஏத்திப்,
புகழ்ந்து,அழைத்து, அலறி, என்னுள்ளே
ஆற்றுவன் ஆக; உடையவனே, எனை,
' ஆவ ' என்று அருளாயே!. 6

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு கல்லாடநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

45. யாத்திரைப்பத்து

திருத்தில்லையில் அருளியது; அனுபவ அதீதம் உரைத்தல்
திருவருள் இன்பத்தில் திளைக்க அழைப்பது
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

அன்பர்களே! அவன் கழல் புகுவோம்!

பூவார் சென்னி மன்னன்,எம்
புயங்கப் பெருமான், சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து,உணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்,
'ஆ!ஆ!' என்னப் பட்டு,அன்பாய்
ஆட்பட்டீர், வந்து ஒருப்படுமின்;
போவோம்; காலம் வந்ததுகாண்;
பொய்விட்டு, உடையான் கழல்புகவே. 1

அவன் கழலையே எண்ணுவோம்

புகவே வேண்டா புலன்களில்நீர்;
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின்; மிக்கவெல்லாம்
வேண்டா; போக விடுமின்கள்;
நகவே, ஞாலத்து உள்புகுந்து,
நாயே அனைய நமையாண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
தளராது இருப்பார் தாம்தாமே. 2

பொய் நீக்கிப் பொன் அடிக்கே செல்வோம்

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்;
யாமார்? எமதார்? பாசமார்?
என்ன மாயம்? இவைபோகக்,

கோமான் பண்டைத் தொண்டரொடும்,
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு,
போமாறு அமைமின் பொய்நீக்கிப்,
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே. 3

அவன் திருக்குறிப்பைக் கடைப்பிடிப்பீராக

அடியார் ஆனீர் எல்லீரும்,
அகல விடுமின் விளையாட்டை;
கடிசேர் அடியே வந்தடைந்து,
கடைக்கொண்டு இருமின் திருக்குறிப்பை;
செடிசேர் உடலைச் செலநீக்கிச்,
சிவ லோகத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்,
பூவார் கழற்கே புகவிடுமே. 4

காலம் இனி இல்லை; ஒருப்படுமின்

விடுமின் வெகுளி, வேட்கைநோய்;
மிகஓர் காலம் இனியில்லை;
உடையான் அடிக்கீழ்ப், பெருஞ்சாத்தோடு
உடன் போவதற்கே ஒருப்படுமின்;
அடைவோம், நாம்போய்ச் சிவபுரத்துள்,
அணியார் கதவது அடையாமே;
புடைபட்டு உருகிப் போற்றுவோம்,
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

நெஞ்சம் உருகி நிற்போம்

புகழ்மின்; தொழுமின்; பூப்புனைமின்;
புயங்கன் தாளே புந்திவைத்திட்டு,
இகழ்மின் எல்லா அல்லலையும்;
இனி,ஓர் இடையூறு அடையாமே,
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று, சிவன்தாள் வணங்கி,நாம்,
நிகழும் அடியார் முன்சென்று,
நெஞ்சம் உருகி, நிற்போமே. 6

நில்லா உலகில் நில்லோம்

நிற்பார் நிற்க; நில்லாவுலகில்
நில்லோம்; இனி,நாம் செல்வோமே;
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம், தாழாதே,
நிற்கும் பரிசே, ஒருப்படுமின்;
பிற்பால் நின்று, பேழ்கணித்தால்,
பெறுதற்கு அரியன், பெருமானே. 7

திருக்கதவம் திறந்துள்ளது

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியாது இருக்கப் பெற்றீர்காள்,
அருமால் உற்றுப் பின்னைநீர்,
அம்மா! அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவம்
திறந்த போதே, சிவபுரத்துத்,
திருமால் அறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. 8

பொய்மை விட்டுச் செல்வோம்

சேரக் கருதிச், சிந்தனையைத்
திருந்த வைத்துச், சிந்திமின்;
போரில் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன், புயங்கன், அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்!
போரப் புரிமின் சிவன்கழற்கே,
பொய்யில் கிடந்து புரளாதே. 9

இன்றே வந்து ஆள் ஆகாதீர், மருள்வீர்

புரள்வார், தொழுவார், புகழ்வாராய்,
இன்றே வந்து,ஆள் ஆகாதீர்,
மருள்வீர்; பின்னை, மதிப்பாரார்?
மதியுட் கலங்கி, மயங்குவீர்;
தெருள்வீர் ஆகில், இதுசெய்மின்;
சிவலோகக் கோன், திருப்புயங்கன்
அருள்ஆர் பெறுவார், அகலிடத்தே?
அந்தோ! அந்தோ! அந்தோவே!

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு மொக்கணீச்சுவரர் திருவடிகள் போற்றி ! போற்றி !

46. திருப்படையெழுச்சி

திருத்தில்லையில் அருளியது; பிரபஞ்சப் போர்
பேரின்ப உலகை நோக்கிப் படையெடுத்தல்
(கலிவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

மாயையை வெல்வோம்: வானத்தைக் கொள்வோம்

ஞானவாள் ஏந்தும்ஐயர், நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர், மதிவெண் குடைகவிமின்;
ஆனநீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்;
வானஊர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே. 1

அல்லலை வெல்வோம்: அண்டர் நாடு ஆள்வோம்

தொண்டர்காள், தூசிசெல்லீர்; பத்தர்காள், சூழப்போகீர்!
ஒண்டிறல் யோகிகளே, பேரணி உந்தீர்கள்;
திண்டிறல் சித்தர்களே, கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நாடு ஆள்வோம்நாம் அல்லல்படை வாராமே. 2

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பொன்மயிலம்மை உடனமர்
அருள்மிகு திருப்பராய்த்துறைநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

47. திருவெண்பா

திருப்பெருந்துறையில் அருளியது; அணைந்தோர் தன்மை
திருவருள் உணர்வை வெளியிடுவது
(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

பொய் ஒழியவில்லையே! என் செய்வேன்?

வெய்ய வினையிரண்டும் வெந்தகல, மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகாது; என்செய்கேன்? - செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவாது இருந்தேன் மனத்து. 1

உடன் இருப்பார் ஒருவரையும் காணோம்

ஆர்க்கோ? அரற்றுகோ? ஆடுகோ? பாடுகோ?
பார்க்கோ? பரம்பரனே, என்செய்கேன்? - தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன், ' பெருந்துறையான்
தான்'என்பார் ஆரொருவர் தாழ்ந்து? 2

உய்யும் வகை அறியேன்

செய்த பிழையறியேன்; சேவடியே, கைதொழுதே,
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் - வையத்து
இருந்து,உறையுள் வேல்மடுத்து,என்சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

பேராளன் முன் நின்றான்

முன்னை வினையிரண்டும் வேரறுத்து, முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்; - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங் கருணையாளன்;
வருந்துயரம் தீர்க்கும் மருந்து. 4

என் நெஞ்சத்து உறைவான்

அறையோ, அறிவார்க்கு? அனைத்துலகும் ஈன்ற
மறையோனும், மாலும், மால்கொள்ளும் – இறையோன்;
பெருந்துறையுள் மேய பெருமான்; பிரியாது,
இருந்துறையும், என்நெஞ்சத்து இன்று. 5

பேரின்பம் பெற்றேன்

பித்தென்னை ஏற்றும்; பிறப்பறுக்கும்; பேச்சரிதாம்
மத்தமே ஆக்கும்,வந்து, என்மனத்தை; – அத்தன்,
பெருந்துறையான், ஆட்கொண்டு, பேரருளால் நோக்கும்
மருந்து,இறவாப் பேரின்பம், வந்து. 6

பெருந்துறையான் பேரொளி

வாரா வழியருளி வந்து,எனக்கு மாறின்றி,
ஆரா அமுதாய் அமைந்தன்றே – சீரார்
திருத்தென் பெருந்துறையான், என்சிந்தை மேய
ஒருத்தன், பெருக்கும் ஒளி. 7

கைம்மாறு என்?

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்,
யாவர்க்கும் கீழாம் அடியேனை, – யாவரும்
பெற்றுஅறியா இன்பத்துள் வைத்தாய்க்கு,என் எம்பெருமான்!
மற்றுஅறியேன் செய்யும் வகை. 8

வையகத்து வந்தான்

மூவரும், முப்பத்து மூவரும், மற்றொழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான் – மாவேறி,
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க,
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

எல்லாம் தரும்

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்து
இருந்து, இரந்துகொள்,நெஞ்சே! எல்லாம் – தருங்காண்,
பெருந்துறையில் மேய பெரும் கருணையாளன்,
மருந்துருவாய், என்மனத்தே, வந்து. 10

என் சிந்தையே, அவன் விரும்பும் பதி

இன்பம் பெருக்கி இருளகற்றி, எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச், சோதியாய் – அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான், என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான், உவந்து. 11

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மட்டுவார்குழலி அம்மை உடனமர்
அருள்மிகு தாயும்ஆனவர் திருவடிகள் போற்றி ! போற்றி !

48. பண்டாயநான்மறை

திருப்பெருந்துறையில் அருளியது; அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்
இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்தைக் கூறுவது
(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

கண்டவர் யாவர்? என்னை தொண்டு கொண்டான்

பண்டாய நான்மறையும் பாலணுகா; மால்,அயனும்,
கண்டாரும் இல்லைக்; கடையேனைத் – தொண்டாகக்
கொண்டருளும் கோகழிஎங் கோமாற்கு, நெஞ்சமே!
உண்டாமோ, கைம்மாறு? உரை. 1

வாழ்த்துவர் பிறவிக்காடு வேரோடு கெடும்

உள்ள மலமூன்றும் மாய, உகுபெருந்தேன்
வெள்ளந்தரும், பரியின் மேல்வந்த, – வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்; வாழ்த்தக்,
கருவும் கெடும்,பிறவிக் காடு. 2

அவன் திருவடியை வாழ்த்து

காட்டகத்து வேடன், கடலில் வலைவாணன்,
நாட்டிற் பரிபாகன், நம்வினையை – வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்,
மருளும் கெட,நெஞ்சே! வாழ்த்து. 3

இறைஞ்சுவாரை யாவரும் இறைஞ்சுவார்

வாழ்ந்தார்கள் ஆவாரும், வல்வினையை மாய்ப்பாரும்,
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும் – சூழ்ந்தமரர்
சென்று,இறைஞ்சி, ஏத்தும் திருவார் பெருந்துறையை,
நன்றுஇறைஞ்சி, ஏத்தும் நமர். 4

அவனை எண்ணு: இடர் அகலும்

நண்ணிப் பெருந்துறையை, நம்மிடர்கள் போயகல,
எண்ணி எழு கோகழிக்கரசைப் – பண்ணின்
மொழியாளோடு உத்தர கோசமங்கை மன்னிக்
கழியாது இருந்தவனைக், காண். 5

எல்லாம் பேரின்பம் வாயாரப் பேசு

காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப்,
பேணும் அடியார் பிறப்பகலக் – காணும்
பெரியானை, நெஞ்சே! பெருந்துறையில் என்றும்
பிரியானை, வாயாரப் பேசு. 6

மனத்து அமர்ந்த மருந்து

பேசும் பொருளுக்கு இலக்கிதமாம், பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை – பேசிப்,
பெருந்துறையே என்று, பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி, என்மனத்தே வைத்து. 7

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பெரியநாயகி அம்மை உடனமர்
அருள்மிகு பேரிடர் பெருந்துணைநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

49. திருப்படையாட்சி

திருத்தில்லையில் அருளியது; சீவ உபாதி ஒழித்தல்
திருவருளை விட மேலான பொருள் ஏதும் இல்லை என்பது
(பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

அவன் தோன்றுவானேல்

கண்கள் இரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன; ஆகாதே?
காரிகை யார்கள்தம் வாழ்வில்என் வாழ்வு கடைப்படும்; ஆகாதே?
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும்; ஆகாதே?
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும்; ஆகாதே?
பண்களி கூர்தரு பாடலொடு, ஆடல் பயின்றிடும்; ஆகாதே?
பாண்டிநன் நாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும்; ஆகாதே?
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து, வெளிப்படும்; ஆகாதே?
மீன்வலை வீசிய கானவன் வந்து, வெளிப்படும்; ஆயிடிலே! 1

ஆண்ட அண்ணல் உள் புகுவானேல்

ஒன்றினொடு ஒன்றும், ஓர்ஐந்தினொடு ஐந்தும், உயிர்ப்பறும்; ஆகாதே?
உன் அடியார் அடியார் அடியோமென உய்ந்தன; ஆகாதே?
கன்றை நினைந்தெழு தாய்,என வந்த கணக்கது; ஆகாதே?
காரண மாகும் அனாதி குணங்கள் கருத்துறும்; ஆகாதே?
நன்று,இது, தீதென வந்த நடுக்கம் நடந்தன; ஆகாதே?
நாமும் எலாம் அடியார் உடனேசெல, நண்ணுதும்; ஆகாதே?
என்றும்என் அன்பு நிறைந்த பராவமுது எய்துவது; ஆகாதே?
ஏறுடையான், எனை ஆளுடை நாயகன், என்னுள் புகுந்திடிலே! 2

நாயகன் எதிர்ப்படுமானால்

பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடும்; ஆகாதே?
பாவனை யாய கருத்தினில் வந்த பராவமுது; ஆகாதே?
அந்தம் இலாத அகண்டமும், நம்முள் அகப்படும்; ஆகாதே?
ஆதி முதல் பரமாய பரஞ்சுடர் அண்ணுவது; ஆகாதே?
செந்துவர் வாய்மடவார் இடர் ஆனவை சிந்திடும்; ஆகாதே?
சேல்அன கண்கள் அவன் திருமேனி திளைப்பன; ஆகாதே?
இந்திர ஞால இடர்ப் பிறவித்துயர் ஏகுவது; ஆகாதே?
என்னுடை நாயகன் ஆகிய ஈசன் எதிர்ப்படும் ஆயிடிலே! 3

உடையான் எழுந்தருளுவானேல்

என்னணி யார்முலை ஆகம் அளைந்து,உடன் இன்புறும்; ஆகாதே?
எல்லையில் மாக் கருணைக்கடல் இன்றினிது ஆடுதும்; ஆகாதே?
நன்மணி நாதம் முழங்கி,என் உள்ளுற, நண்ணுவது; ஆகாதே?
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும் நண்ணுவது; ஆகாதே?
மன்னிய அன்பரில் என்பணி முந்துற வைகுவது; ஆகாதே?
மாமறையும் அறியா மலர்ப் பாதம் வணங்குதும்; ஆகாதே?
இன்னியல் செங்கழு நீர்மலர் என்தலை எய்துவது; ஆகாதே?
என்னை உடைப் பெருமான், அருள்ஈசன் எழுந்தருளப் பெறிலே! 4

கணக்கில்லாத காலமாக வந்த கலக்கம் தீர்ந்தது

மண்ணினில் மாயை மதித்து, வகுத்த மயக்கறும்; ஆகாதே?
வானவரும் அறியா மலர்ப் பாதம் வணங்குதும்; ஆகாதே?
கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த கலக்கறும்; ஆகாதே?
காதல்செயும் அடியார் மனம் இன்று களித்திடும்; ஆகாதே?
பெண்,அலி, ஆண்என, நாமென, வந்த பிணக்கறும்; ஆகாதே?
பேர் அறியாத அநேக பவங்கள் பிழைத்தன; ஆகாதே?
எண்ணிலி யாகிய சித்திகள் வந்து,எனை எய்துவது; ஆகாதே?
என்னையுடைப் பெருமான், அருள் ஈசன், எழுந்தருளப் பெறிலே! 5

அடியார் அடி என் தலைமேல் தழைப்பன

பொன் இயலும் திருமேனி, வெண்ணீறு பொலிந்திடும்; ஆகாதே?
பூமழை, மாதவர் கைகள் குவிந்து, பொழிந்திடும்; ஆகாதே?
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து வெளிப்படும்; ஆகாதே?
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம் மிகுத்திடும்; ஆகாதே?
தன்னடியார் அடி என்தலை மீது தழைப்பன; ஆகாதே?
தானடி யோம் உடனே உயவந்து, தலைப்படும்; ஆகாதே?
இன்னியம் எங்கும் நிறைந்து, இனிதாக இயம்பிடும்; ஆகாதே?
என்னைமுன் ஆளுடை ஈசன், என்அத்தன், எழுந்தருளப் பெறிலே! 6

அறியாத அனுபவங்கள்

சொல் இயலாதெழு தூமணி ஓசை சுவைதரும்; ஆகாதே?
துண்ணென என்னுளம் மன்னிய சோதி தொடர்ந்தெழும்; ஆகாதே?
பல்லியல் பாய பரப்பற வந்த பராபரம்; ஆகாதே?
பண்டு அறியாத பரா அனுபவங்கள் பரந்தெழும்; ஆகாதே?
வில்லியல் நன்னுதலார் மயல் இன்று விளைந்திடும்; ஆகாதே?
விண்ணவரும் அறியாத விழுப் பொருள் இப்பொருள்; ஆகாதே?
எல்லை இலாதன எண்குணம் ஆனவை எய்திடும்; ஆகாதே?
இந்து சிகாமணி எங்களை ஆள, எழுந்தருளப் பெறிலே! 7

எங்கும் நிறைந்து அமுதம் ஊறும் ஒலியும், ஒளியும்

சங்கு திரண்டு, முரன்றெழும் ஓசை தழைப்பன; ஆகாதே?
சாதி விடாத குணங்கள் நம்மோடு சலித்திடும்; ஆகாதே?
அங்கிது நன்று,இது நன்று,எனும் மாயை அடங்கிடும்; ஆகாதே?
ஆசையெலாம், அடியார் அடியோம் எனும் அத்தனை; ஆகாதே?
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன; ஆகாதே?
சீரடி யார்கள் சிவானு பவங்கள் தெரிந்திடும்; ஆகாதே?
எங்கும் நிறைந்து, அமுதூறு, பரஞ்சுடர் எய்துவது; ஆகாதே?
ஈறறி யாமறை யோனெனை ஆள, எழுந்தருளப் பெறிலே! 8

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் மலைமகள் அம்மை உடனமர்
அருள்மிகு திருஇத்திநாதர் திருவடிகள் போற்றி ! போற்றி !

50. ஆனந்தமாலை

திருத்தில்லையில் அருளியது; சிவானுபவ விருப்பம்
தன் பிற்போக்கு நிலையைக் கூறுதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

உன்னைக் கூடும் வகை?

மின்னேர் அனைய பூங்கழல்கள்
அடைந்தார், கடந்தார், வியனுலகம்;
பொன்னேர் அனைய மலர்கொண்டு
போற்றா நின்றார், அமரரெல்லாம்;
கன்னேர் அனைய மனக்கடையாய்க்,
கழிப்புண்டு, அவலக் கடல்வீழ்ந்த
என்னேர் அனையேன், இனியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே. 1

அடிமைக்கு யார்?

என்னால் அறியாப் பதம்தந்தாய்;
யானது அறியாதே கெட்டேன்;
உன்னால் ஒன்றும் குறைவில்லை;
உடையாய், அடிமைக்கு ஆர்?என்பேன்;
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியரொடும் கூடாது,
என்நாயகமே! பிற்பட்டு, இங்கு,
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே. 2

ஆண்டானைக் கூடுவது என்றோ?

சீலம் இன்றி, நோன்பின்றிச்,
செறிவே இன்றி, அறிவின்றித்,
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்,
சுழன்று, விழுந்து, கிடப்பேனை

மாலும் காட்டி, வழிகாட்டி,
வாரா உலக நெறியேறக்,
கோலம் காட்டி ஆண்டானைக்,
கொடியேன் என்றோ கூடுவதே? 3

கெடுகின்றேன்: நன்றோ?

கெடுவேன்; கெடுமா கெடுகின்றேன்;
கேடு இலாதாய், பழிகொண்டாய்;
படுவேன், படுவது எல்லாம்,நான்
பட்டால், பின்னைப் பயனென்னே?
கொடுமா நரகத்து அழுந்தாமே
காத்தாட் கொள்ளும் குருமணியே,
நடுவாய் நில்லாது ஒழிந்தக்கால்,
நன்றோ, எங்கள் நாயகமே? 4

நான் தான் வேண்டாவோ?

தாயாய் முலையைத் தருவானே,
தாராது ஒழிந்தால், சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ?
நம்பி, இனித்தான் நல்குதியே;
'தாயே' என்றுன் தாளடைந்தேன்;
தயா,நீ, என்பால் இல்லையே?
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய்; நான்தான் வேண்டாவோ? 5

திகைத்தேன், தேற்றாயே!

கோவே, அருள வேண்டாவோ?
கொடியேன் கெடவே அமையுமே?
'ஆ!ஆ!' என்னா விடில்,என்னை
'அஞ்சேல்' என்பார் ஆரோதான்?
சாவார் எல்லாம் என்னளவோ?
'தக்கவாறு அன்று' என்னாரோ?
தேவே! தில்லை நடமாட!
திகைத்தேன்; இனித்தான் தேற்றாயே? 6

செய்வது அறியேன்

நரியைக் குதிரைப் பரியாக்கி,
ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்,
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்சது ஏற்றும் பெருந்துறையாய்!
அரிய பொருளே! அவினாசி
அப்பா! பாண்டி வெள்ளமே!
தெரிய அரிய பரஞ்சோதீ!
செய்வது ஒன்றும் அறியேனே! 7

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் பெருங்கருணைநாயகித் தாயார் உடனமர்
அருள்மிகு அவிநாசியப்பர் திருவடிகள் போற்றி ! போற்றி !

51. அச்சோப்பதிகம்

திருத்தில்லையில் அருளியது; அனுபவ வழி அறியாமை
திருவருளின் சிறப்பைப் போற்றி வியப்பது
(கலிவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

யான் பெற்றது யார் பெறுவார்?

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்,
பத்திநெறி அறிவித்துப், பழவினைகள் பாறும்வண்ணம்,
சித்தமலம் அறுவித்துச், சிவமாக்கி எனைஆண்ட,
அத்தன்,எனக்கு அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே!. 1

கூத்தன் கூத்தை அறிந்தேன்

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்,
சிறுநெறிகள் சேராமே, திருவருளே சேரும்வண்ணம்,
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தை,எனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 2

மையல் அறுத்தான்

பொய்யெல்லாம் மெய்யென்று, புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை, மாளாமே, காத்தருளித்,
தையலிடம் கொண்டபிரான், தன்கழலே சேரும்வண்ணம்,
ஐயன்,எனக்கு அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 3

தூய்நெறியே சேர்ந்தேன்

மண்ணதனில் பிறந்து,எய்த்து, மாண்டுவிழக் கடவேனை,
எண்ணமிலா அன்பருளி, எனையாண்டிட்டு, என்னையுந்தன்
சுண்ணவெண்ணீறு அணிவித்துத், தூய்நெறியே சேரும்வண்ணம்,
அண்ணல்எனக்கு அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 4

‘ அஞ்சல் ’ என்று அருளினான்

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு,
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்,உன் அருள்பெற்றேன்;
உய்ஞ்சேன்நான்; உடையானே, அடியேனை ‘வருக’என்று,
அஞ்சேல்’என்று, அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 5

என் தூரிசு அறுத்தான்

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று, வினைபெருக்கிக்,
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்,
பந்தமறுத்து, எனையாண்டு, பரிசற,என் தூரிசுமறுத்து,
அந்தமெனக்கு அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 6

ஓங்காரத்து உட்பொருளை உணர்ந்தேன்

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்,
பையவே கொடுபோந்து, பாசமெனும் தாழுருவி,
உய்யுநெறி காட்டுவித்திட்டு, ஓங்காரத்து உட்பொருளை,
ஐயன்எனக்கு அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 7

அவன் கழலே சேர்ந்தேன்

சாதல், பிறப்பு,என்னும் தடஞ்சுழியில் தடுமாறிக்,
காதலின்மிக்கு, அணியிழையார் கலவியிலே விழுவேனை,
மாதொருகூறு உடையபிரான், தன்கழலே சேரும்வண்ணம்,
ஆதி,எனக்கு அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 8

பொருள் அல்லாதவன், பொருளானேன்

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை,
மும்மைமலம் அறுவித்து, முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி, நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மை,எனக்கு அருளியவாறு, ஆர்பெறுவார்? அச்சோவே! 9

திருச்சிற்றம்பலம்

அருள்தரும் சிவகாமி அம்மை உடனமர்
அருள்மிகு ஞானப்பெருங்கூத்தர் திருவடிகள் போற்றி ! போற்றி !

முதற் சொல் அகராதி

(பக்க எண்)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க

கற்பனைக் களஞ்சியம்
துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய
மாணிக்கவாசகர் நான்மணி மாலை

காப்பு

குறள் வெண்பா

எப்போ தகத்து நினைவார்க்கு இடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

நேரிசை ஆசிரியப்பா

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணம் உரையெனும் ஆரணம் மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்தது என்கு வீராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நெக்கு உருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்து உக கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர்ப் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே. 4

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம்; அதற்கு வாச்சியம்
தூசுஅகல் அல்குல் வேய்த்தோள் இடத்தவனே. 8

கடல்நிற வண்ணன் கண் ஒன்று இடந்து
மறைச் சிலம்பு அரற்றும் மலர் அடிக்கு அணியப்
பரிதி கொடுத்த சுருதி நாயகற்கு
முடிவிளக்கு எரித்தும், கடிமலர்க் கோதைச்

சுரிகுழல் கருங்கண் துணைவியை அளித்தும்,
அரும்மகள் நறும்பூங் கருமயிர் உதவியும்,
நெல்முளை வாரி இன்னமுது அருத்தியும்,
கோவணம் நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்,
அகப்படும் மணிமீன் அரற்கு என விடுத்தும்,
பூட்டி அரிவாள் ஊட்டி அரிந்தும்,

தலையுடை ஒலிக்கும் சிலைஇடை மோதியும்,
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்தும்,
தந்தையைத் தடிந்தும், மைந்தனைக் கொன்றும்,
குற்றம் செய்த சுற்றம் களைந்தும்,
பூக்கொளு மாதின் மூக்கினை அரிந்தும்,

இளமுலை மாதர் வளமை துறந்தும்,
பண்டை நாள் ஒரு சிலர்தொண்டர் ஆயினர்,
செங்கண்மால் தடக்கையில் சங்கம் நாண
முள்தாள் தாமரை முறுக்கு அவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப!

பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரை மாநகரில் குதிரை மாறியும்,
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்,
நீற்றுஎழில் மேனியில் மாற்று அடிபட்டும்,
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்

இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனமகிழ் வோனே. 12

வல மழு உயரிய நல மலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கருணைக்கடல்
முகந்து உலகு உவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனம்எனும் ஒண்குளம் புகுந்து
நாஎனும் மதகில் இடந்து கேட்போர்

செவியெனும் மடையில் செவ்விதில் செல்லா
உளம்எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்தில் சிவம் எனும் மென்முளை தோன்றி

வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே. 16

வேண்டுநின் அடியார் மெய்யன்பு எனக்கு
அருள்செய் சிவனே அலந்தேன் அந்தோ!
முறையோ, முறையோ, இறையோனே என்று
அழுது செம்பொன் அம்பலக் கூத்தன்
அருளால் பெற்ற அன்பினில் ஒருசிறிது
அடிய னேற்கு அருளல் வேண்டும்;
நீயே கோடல் நின்னருள் பெருக்கில்
ஏற்றது அன்று இளஏறு உகந்து ஏறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக!
திருந்திய வேத சிரப்பொருள் முழுதும்
பெருந்துறை இடத்துப் பெருஞ்சீர்க்
குருந்து உறுநீழலில் கொள்ளை கொள்வோயே! 20

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ!
மனம் நின்று உருக்கு(ம்) மதுர வாசக!
கலங்குறு புல(ன்) நெறி விலங்குறு வீர!
திங்கள் வார்சடைத் தெய்வநாயகன்
ஒருகலை யேனும் உணரான்; அஃதான்று
கைகளோ முறிபடும் கைகள்; காணின்
கண்களோ ஒன்று காலையில் காணும்
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்;
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்;
ஆயினும் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன், அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியாஎன்(பு)அணி வானே. 24

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரின் அழுங்கி,

நெஞ்சம் நெக்குஉருகி நிற்பை நீயே!
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந்து உள்ளக் கவலை தீர்ந்தேனே;
அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கை
வாதவூர் அன்ப! ஆத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
“நன்றுஅறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவல மிலர்” எனும்
செஞ்சொற் பொருளின் தேற்றறிந் தேனே. 28

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வாய் உண்ட நிகரில் ஆனந்தத்
தேன்தேக்கு எறியும் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின்
பொற்கலம் நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும்; மதுரவாசகம்
ஓதின் முத்திஉறு பயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே. 32

தானே முத்தி தருகுவன் சிவன், அவன்
அடியன் வாத வூரனைக்
கடிவுஇல் மனத்தாற் கட்ட வல்லார்க்கே. 36

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப!
பா எனப் படுவது உன்பாட்டுப்
பூ எனப்படுவது பொறிவாழ் பூவே! 40

திருச்சிற்றம்பலம்



வெளியீடு

அரன் பணி அறக்கட்டளை

ஜெ.எம். பில்டிங், 1000, அவிநாசி சாலை,

கோவை - 641018.

தொடர்பு எண் : 8122338989